Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 32 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :229 ஆனி 31ஆம் நாள் புதன்கிழமை 15 ஜூலை 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## தேர்தல் திகதியில் மாற்றம் ஏற்படாது

தேசப்பிரிய திட்டவட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

எந்தக் காரணத்துக்காகவும் தேர்தல் ஒத்திவைக்கப்பட மாட்டாது. இடர் நிலைமை காணப்படின் அந்தப் பிர தேசத்தில் பிறிதொரு நாளில் தேர்தல் நடத்த சட்டத்தில் இடமுண்டு. திட்டமிட் டவாறு ஓகஸ்ட் 5ஆம் திகதி 30

# அடுத்துவரும் நாள்கள் மிகவும் ஆபத்தானவை

## இராணுவத் தளபதி எச்சரிக்கை



கொழும்பு, ஜூலை 15

நாட்டில் அடுத்து வரும் சில நாள்களில் சமூகத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் கண்டறியப்படும் ஆபத்து இருக்கின்றது. அதனால், கொரோனா வைரஸில் இருந்து பாதுகாத்துக்கொள்ள வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு ஆலோசனைகளை அப்படியே பின்பற்றுமாறு மக்களிடம் கோரிக்கை விடுக்கின்றோம். 30

## விபத்தில் காயப்பட்ட மறவன்புலவு நபர் சாவு

கொடிகாமம், ஜூலை 15

ஏ-9 வீதி சாவகச்சேரியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்திருந்தவர்சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார். மறவன்புலவு 27

## கிராம அலுவலர் வீட்டில் திருட்டு!

கந்தரோடையில் சம்பவம்

ஏழாலை, ஜூலை 15

கந்தரோடையில் கிராம அலுவலரின் வீடு புகுந்து சுமார் 5 பவுண் நகைகள், 47 ஆயிரம் ரூபா பணம், சிறிய கமரா மற்றும் பென்டிரைவ் என்பன திருடப்பட்டுள்ளன என்று 30

## நீதிவானும் தனிமையில்

கொழும்பு, ஜூலை 15

கம்பஹா நீதிமன்ற எண் 2 நீதிமன்ற நீதிவான் உள்ளிட்ட 08 பேர் நேற்றுத் தொடக்கம் தனிமைப்படுத்தப்பட்டனர். கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார் என்று தற் 27

கள்ளவாக்கு விவகாரம்

## ஆணைக்குழுவில் இன்று ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூலை 15

நாடாளுமன்றத் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடும் ஒருவர் கள்ள வாக்குப் போட்டதாகத் தெரிவித்த கருத்துத் தொடர்பில் தேர் 30

## கொரோனாத் தொற்றுடன் கம்பஹாவில் இருவர்!

பல்வேறு பகுதிக்கும் அவர்கள் சென்றிருப்பதால் சிக்கல்

கொழும்பு, ஜூலை 15

கம்பஹா மாவட்டத்தின் வெவ்வேறு பகுதிகளில் கொரோனா தொற்றுக்குள் 30

## கிளி. வளாக மாணவி உட்பட சிலர் தனிமைப்படுத்தலில்!

வளாக செயற்பாடுகளும் தற்போதைக்கு இல்லை

கிளிநொச்சி, ஜூலை 15

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக தொழிநுட்ப பீட மாணவியும் அவருடன் நெருங்கிப் பழகிய 30

## சிறிதரனிடம் விசாரணை?

யாழ்ப்பாணம், ஜூலை 15

பொதுத் தேர்தலில் ஒரே நாளில் 75 வாக்குகள் இட்டதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்தி 30

## பரப்புரையில் ஈடுபட்டிருந்த தமிழ் அரசு உறுப்பினர் சாவு!



தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பிரதேசசபை 27

## கைதடி, கிளிநொச்சி வளாகங்களின் மாணவிகள் இருவருக்கும் கொரோனா தொற்றில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 15

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி தொழிநுட்ப பீட வளாக மாணவி மற்றும் கைதடி சித்தமருத்துவபீட வளாக மாணவி ஆகியோருக்கு கொரானா தொற்று இல்லை என்பது நேற்றைய பி.சி.ஆர். பரிசோ 30

## நிவாரண முறைகேடு விசாரணை நடக்கிறது

தவிசாளர் தேசப்பிரிய தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 15

கொரோனா இடர் காலத்தில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு தன்னார்வக் கொடையாளிகளால் வழங்கப்பட்ட நிவாரணத்தை, அரசியல்வாதி ஒருவரின் ஆதரவாளர்களுக்கு வழங்கியமை தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணை இன்னமும் முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 30




## கணக்கெடுப்புக்கு மாத்திரமே அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 15

பெயர்ப் பலகைகளில் காணப்படும் வேட்பாளர்களது படங்களை மறைக்கும் பணிகளில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட மாட்டார்கள் என்றும், அவர்கள் கணக்கெடுப்புக்கு மாத்திரமே பயன்படுத்தப்படுவார்கள் என்றும் யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் கி.அமல் ராஜ் தெரிவித்தார்.

வடக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கத்தால் யாழ்ப்பாண மாவட்டச் செயலருக்கு நேற்றுமுன்தி 30






# ஆணைக்குழு தவிசாளர், உறுப்பினர் செய்தியாளர் சந்திப்பில் முரண்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 15

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரியவுக்கும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூலுக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

வேட்பாளர்கள் செல்லும் வாகனங்களில் வேட்பாளரின் படங்கள் மாத்திரமே காட்சிப்படுத்த முடியும் என்றும், அந்த வேட்பாளரின் கட்சித் தலைவரினதோ வேறு வேட்பாளர்களினதோ படங்கள் காட்சிப்படுத்தக் கூடாது எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் தெரிவித்தார். இந்த விதிமுறையை மீறிச் செயற்பட்ட வாகனம் ஒன்று மன்னாரில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது எனவும் குறிப்பிட்டார்.

இதன்போது ஆணைக்குழுத் தவிசாளர், வேட்பாளர்கள் தமது கட்சித் தலைவர்களின் படங்களைத் தமது வாகனத்தில் காட்சிப்படுத்த முடியும் என்று குறிப்பிட்டார். அத்துடன் இந்த விடயம் தொடர்பில் ஆணைக்குழுவில் கலந்துரையாட வேண்டும் எனவும், பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவிக்க வேண்டாம் எனவும் சுட்டிக்காட்டினார்.

இதேபோன்று வடக்கு இராணுவப் பிரசன்னம் தொடர்பில் ஆணைக்குழுத் தவிசாளர் தேசப்பிரிய, தென்பகுதியிலும் இவ்வாறுதான் இருக்கின்றது என்று குறிப்பிட்டு அதனை நியாயப்படுத்த முயன்றபோது, ஆணைக்குழு உறுப்பினர் ஹூல், இராணுவத்தினர் துப்பாக்கியை வாகனத்தினுள் நீட்டிச் சோதனையைச் செய்கின்றனர். தற்போது அவசர காலச் சட்டம் நடைமுறையில் இல்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். கொரோனா கட்டுப்பாடு என்பதைச் சாட்டிக் கொண்டு இராணுவத்தினர் சகல விடயங்களிலும் தலையிடுகின்றனர். உண்மையில் அவர்கள் உடல்நிலையைப் பரிசோதிப்பது இல்லை. எங்கே செல்கின்றீர்கள்? என்னத்துக்குச் செல்கின்றீர்கள்? என்று கேட்டு சோதனை நடவடிக்கைகளைத்தான் முன்னெடுக்கின்றார்கள் என்று குறிப்பிட்டார்.

இதன்போது ஆணைக்குழுத் தவிசாளர் தேசப்பிரிய, முப்படையினரையும் பாதுகாப்புக் கடமையில் நாடு முழுவதும் ஈடுபடுத்தும் வர்த்தமானி அறிவித்தல் உள்ளமையை நினைவில் கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டார். (ஓ.5)

## பஸ்ஸிலிருந்து தவறி வீழ்ந்த முதியவர் சாவு

வவுனியா, ஜூலை 15

பஸ்ஸில் இருந்து தவறி கீழே விழுந்த முதியவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். இந்த விபத்து கடந்த 8 ஆம் திகதி நெடுங்கேணிப் பகுதிக்கு அண்மையில் நடந்துள்ளது.

முதியவர் வவுனியாவிலிருந்து பஸ்ஸில் பயணித்து நெடுங்கேணி பகுதிக்குச் சென்றுள்ளார். இதன்போது பஸ்ஸை நிறுத்தி இறங்க முற்பட்டபோது தவறிக் கீழே விழுந்துள்ளார்.

படுகாயமடைந்தவரை அங்கிருந்தவர்கள் மீட்டு வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். அங்கு சிகிச்சை பயனின்றி முதியவர் நேற்று உயிரிழந்தார். சம்பவத்தில் மதியாமடு பகுதியைச் சேர்ந்த கோபால் வயது 71 என்ற முதியவரே உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பாக நெடுங்கேணி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (கு-110)

## வெடிப்புச் சம்பவம்: ரி.ஐ.டி.யால் மூவர் கைது

கிளிநொச்சி, ஜூலை 15

இயக்கச்சி வெடிப்புச் சம்பவம் தொடர்பில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் மேலும் மூவரை பூநகரியில் வைத்து கைதுசெய்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் இயக்கச்சி பகுதியில் உள்ள புளியடி சந்திக்கு அருகாமையில் கடந்த 3ஆம் திகதி மாலை 7.30 மணியளவில் வெடிச்சத்தம் கேட்டுள்ளது. சத்தம் கேட்ட வீட்டில் இருந்த குடும்பத்தலைவர் கைகள், கால்கள் மற்றும் முகம் உள்ளிட்ட பகுதிகளில் எரிகாயங்களுடன் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். எனினும், சிகிச்சை பலனளிக்காது சிலநாள்களிலேயே அநுராதபுரம் மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார். முன்னாள் போராளியான தங்கராசா கங்கை ஆத்மன் (வயது - 43) என்பவரே இவ்வாறு உயிரிழந்திருந்தார்.

இந்த நிலையில், அவர் உள்ளூர் வெடிகுண்டு தயாரித்தமை விசாரணைகளில் தெரியவந்தது என்று தெரிவித்த பயங்கரவாத விசாரணைப் பிரிவினர், அவருடன் தொடர்புகளைப் பேணினர் என்று குற்றஞ்சாட்டி பலரை கைதுசெய்து வருகின்றனர். காயப்பட்டு உயிரிழந்தவரின் மனைவி உள்ளிட்ட 8 பேர் முன்னர் கைதுசெய்யப்பட்டு இருவருக்கு பிணை வழங்கப்பட்டது. காயப்பட்டவரின் மனைவி உட்பட ஏனையவர்கள் விசாரணைகளுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் பூநகரி பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் இருவரும் முழங்காவில் பகுதியில் ஒருவருமாக மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். முழங்காவில் பகுதியில் கைதுசெய்யப்பட்டவர் மறுவாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-6)

## நிறுவனங்களில் கொரோனாவை தடுப்பது அவற்றின் தலைவர்களே

ஜனாதிபதி சுட்டிக்காட்டு

கொவிட்- 19 தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்காக அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுவது நிறுவன பிரதானிகளின் பொறுப்பு என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.

கொவிட் 19 தொற்றை முழுமையாக கட்டுப்படுத்தும் வரை சமூக ரீதியாக வைரஸ் பரவுவதற்கு அதிக வாய்ப்புள்ளது. கந்தகாடு மறுவாழ்வு நிலையம் அதற்கு ஓர் உதாரணம். அதனால் சமுதாய ரீதியாக இலகுவாக செய்யக்கூடிய பரிசோதனைகளை தொடர்ந்து செய்யவேண்டியுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

கொவிட் ஒழிப்பு செயலணி ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுக் கூடியது. அதில் ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு அனுப்பிய செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: நாடு சுமுகமான நிலையை அடைந்திருந்தாலும், நோய்த் தொற்று பரவும் அபாயம் காணப்படுவதால் பாதுகாப்பு நடவடிக்கைகளை கைவிடக்கூடாது. மறுவாழ்வு மற்றும் சிறைச்சாலைகள், பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள் போன்றனவற்றில் உடல் வெப்பநிலையை பரிசோதித்தல் போன்ற இலகுவான பரிசோதனைகளை தினமும் முன்னெடுப்பதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

முகக் கவசம் அணிதல், கைகழுவுதல் மற்றும் தனியார் இடைவெளியைப் பேணுதல் எந்த நேரமும் பின்பற்றப்படவேண்டிய வைகளாகும். காய்ச்சல், தொண்டைவலி போன்ற நோய் அறிகுறிகள் இருப்பின் அதுபற்றி புரிந்துகொண்டு சமூகத்தில் சேர்ந்து வாழாது தனித்திருந்து நோய்த் தொற்று ஒழிப்புக்கு பங்களிக்க முடியும்- என்று ஜனாதிபதி குறிப்பிட்டார். (த)

## பாலாவி கொலை: தேடப்பட்டவர் நேற்றிரவு கைது

கொடிகாமம், ஜூலை 15

தென்மராட்சி பாலாவியில் கடந்த வருடம் இடம்பெற்ற கொலையுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றிரவு கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வருடம் பாலாவிப் பகுதியில் முதியவர் ஒருவர் ஈட்டியால் குத்தி கொலை செய்யப்பட்டிருந்தார். அந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று தேடப்பட்டு வந்தவரே கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-159)

## கொரோனாவிலிருந்து மக்களைக் காப்பேன்

கூறுகின்றார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூலை 15

கொவிட் - 19 வைரஸ் உலகளாவிய ரீதியில் முற்றாக ஒழிக்கப்படும் வரை நாட்டில் இடைக்கிடையே பரவலடையும் கொரோனா வைரஸ் தீவிரமடைவதைக் கட்டுப்படுத்தி நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்கான சவாலை வெற்றி கொள்வேன் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கந்தகாடு மறுவாழ்வு நிலையத்தில் கொவிட்-19 தொற்று ஏற்பட்டு அதனால் நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் ஆராய்வதற்காக கொவிட்-19 ஒழிப்புக்காக ஜனாதிபதி செயலணியுடனான சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் நிலையங்களை அமைக்கும்போது பிரதேசவாசிகள் எதிர்ப்பு தெரிவித்தனர். இவ்வாறான சவால்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்தாலும் அவற்றிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கான பொறுப்பை கைவிடப் போவதில்லை.

கந்தகாடு மறுவாழ்வு நிலையத்தில் இனங்காணப்பட்ட நோயாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் இனங்காணப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுடன் தொடர்புகளைப் பேணிய அடுத்தடுத்த 4 கட்டங்களிலுள்ளவர்களும் சுயதனிமைப்படுத்தப்பட்டுள் ளனர். பி.சி.ஆர். பரிசோதனைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு சமூகத்தில் பரவல் ஏற்படாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு சுகாதாரத் துறை அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

கலந்துரையாடலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச, சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி , ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர, ஜனாதிபதியின் பிரதான ஆலோசகர் லலித் வீரதுங்க உள்ளிட்ட பலர் இதில் பங்குபற்றினர். (த)

# யாழ்ப்பாணம் - கிளிநொச்சி
# தேர்தல் மாவட்டம்

## நாடாளுமன்றத் தேர்தல் - 2020



எங்கள் தேசம் எங்கள் சுவாசம்
எங்கள் எழுச்சி வாக்குப் புரட்சி
தமிழ் தேசத்தின் விடியலுக்காய்
உங்கள் கைகளில் உங்கள் தேசம்
இளைஞர்களே யுவதிகளே
வருங்கால சந்ததிகளே
உங்கள் எதிர்காலம் உங்கள் கைகளில்
விழித்தெழுவோம் காத்திடுவோம்
எங்கள் தமிழ்த் தேசத்தைக் கட்டி எழுப்புவோம்.

**பரநிருபசிங்கம்
வரதராஜசிங்கம்
(விண்ணன்)**

**X 5**

## உண்மைகள் யாவும் அம்பலத்திற்கு....

## ஜீவஊற்று அமைப்பால் வீடு கையளிப்பு

வவுனியா, ஜூலை 15

வவுனியா, நேரியகுளம் இலுப்பைக்குளம் பகுதியில் நிரந்தர வீடு இல்லாமல் இன்னல்களை எதிர்நோக்கிய குடும்பம் ஒன்றுக்கு ஜீவஊற்று அன்பின் கரம் அமைப்பால் வீடு அமைத்து வழங்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்து மக்கள் நல்வாழ்வு மையம் அமைப்பின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட இந்த வீடு, ஜீவஊற்று அன்பின் கரம் அமைப்பின் ஊடாக கடந்த சனிக்கிழமை அந்தக் குடும்பத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் ஜீவஊற்று அன்பின் கரத்தினுடைய நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் மக்கள் நல்வாழ்வு மையம் அமைப்பினருடைய இலங்கைக்கான நிர்வாக உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ரி3-222)





## கைதிகள் தொடர்பான நீதிமன்றப் பணிகள் இடைநிறுத்தம்

**கொழும்பு,ஜூலை 15**
**நீதிமன்றங்களினால் வழங்கப்பட்ட ஆலோசனைக்கு அமைய, சிறைக்கைதிகளை நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்லும் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்**

மேலும், விளக்கமறியல் கைதிகளுக்கான அடுத்த வழக்குத் திகதியை தீர்மானித்தல் உள்ளிட்ட செயற்பாடுகள் காணொலி தொழில்நுட்பத்தினூடாக முன்னெடுக்கப்படவுள்ளது எனவும், மறுஅறிவித்தல் வரை கைதிகளை சிறைச்சாலைகளுக்கு இடமாற்றும் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது எனவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (ரி3)

## ரயில் நிலையத்தில் சடலம் ஒப்படைப்பு

கொழும்பு, ஜூலை 14

ரயிலுடன் மோதுண்டு உயிரிழந்த நபர் ஒருவரின் சடலம் கொழும்பு பொலனறுவை நோக்கி பயணிக்கும் ரயில் உத்தியோகத்தர்கள் மூலம் கலாவெவ ரயில் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இவ்வாறு சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொல்பிதிகம பிரதேசத் தைச் சேர்ந்த நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பில் பொல்பிதிகம மற்றும் இபலோகம பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ரி1)

## 3 கிராமசேவை பிரிவுகள் முற்றாக முடக்கம்!



கொழும்பு, ஜூலை 15

கந்தகாடு புனர்வாழ்வு மையத்தின் ஊடாக ஆரம்பமான கொரோனா தொற்று சங்கிலித் தொடராக பரவி வருவதால் இராஜங்கனை பிரதேச மூன்று கிராமசேவையாளர் பிரிவுகளில் மக்கள் நடமாட்டத்துக்கு முழுமையாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

இது குறித்து ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெலிக்கடை மற்றும் கந்தகாடு புனர்வாழ்வு நிலையங்களின் ஊடாக ஆரம்பமான கொரோனாத் தொற்று சங்கிலித் தொடரில் தொடர்புடைய அனைவரும் தற்போது தனிமைப்படுத்தல் மற்றும் கொரோனா பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். நோயாளிகளை இனங்காணுதல் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் தற்போது விசேட கவனம் செலுத்தப்பட வேண்டிய இடமாக இராஜாங்கனை பிரதேசம் உள்ளது.

இங்கு தொற்றுக்குள்ளான நபர் மரணச் சடங்கு ஒன்றில் கலந்து கொண்டதன் காரணமாக இராஜாங்கனை பிரதேசத்தின் கிராம வாசிகளினதும் ஏனையோரினதும் நன்மை கருதி ஒழுங்கை 1, ஒழுங்கை 3, ஒழுங்கை 5,ஆகிய மூன்று கிரா ம சேவையானர் பிரிவுகளில் மக்கள் நடமாட்டத்துக்கு முழுமை யாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இராஜாங்கனை முதலாவது தொற்றாளரின் உறவினரின் மரணவீட்டில் சுகாதார நடைமுறைகள் சரியாகப் பின்பற்றப்பட்டி ருக்குமானால் இவ்வாறு அதிகமான பேருக்குத் தொற்று ஏற்பட்டிருக்காது எனத் தெரிவித்துள்ளார். (ரி1)



## அமெரிக்க தூதரக அதிகாரி கடற்படை தளபதி சந்திப்பு

கொழும்பு, ஜூலை 15

இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகத் தின் பாதுகாப்பு அதிகாரி லெப்டிணன்ட் கொமாண்டர் பிரையன் எஸ் பேஜ் மற்றும் இலங்கையின் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியால் டி சில்வா ஆகியோருக்கு இடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இலங்கையின் கடற்படைத் தலைமையகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் இருதரப்பு உறவுநிலை குறித்துக் கலந்துரையாடப்பட்டுள்ளது. மேலும், இரண்டு நாடுகளும் கடல் பாதுகாப்பு விடயத்தில் இதுவரை காட்டிவரும் ஒத்துழைப்புகள் மற்றும் எதிர்கால ஒத்துழைப்புக்கள் குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டன என இலங்கை கடற்படையின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ரி3)

## கொழும்பு உயர் மறை மாவட்டத்தின் துணை ஆயராக அன்ரன் றஞ்சித்

கொழும்பு, ஜூலை 15

கொழும்பு உயர் மறை மாவட்டத்தின் புதிய துணை ஆயராக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அருட்தந்தை அன்ரன் றஞ்சித் பிள்ளைநாயகம் அடிகளார் பாப்பரசரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.



யாழ்ப்பாணத்தில் 1966 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 23 ஆம் திகதி பிறந்த அருட்தந்தை அன்ரன் றஞ்சித் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவராவார்.

2000ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம், கொழும்பு உயர் மறைவட்டத்தின் அருள்பணியாளராகத் திருநிலைப்படுத்தப்பட்டாட்டார். இங்கிலாந்தில், கல்வியியலிலும், யாழ்ப்பாணத்தில் மெய் யியலிலும் முதுகலைப் பட்டங்களைப் பெற்றுள்ள இவர் கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் கத்தோலிக்க கல்லூரிகளில் பல உயர் பொறுப்புக்களில் பணியாற்றியுள்ளார்.

இந்த நிலையில் திருத்தந்தை பிரான்சிஸ் ஸால் கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் துணை ஆயராக அருட் தந்தை அன்ரன் றஞ்சித் பிள்ளைநாயகம் நியமிக்கப் பட்டுள்ளார். (ரி1)

## பொலிஸ் அதிகாரியை காவு கொண்ட டிப்பர்

கொழும்பு, ஜூலை 15

சோதனைச் சாவடியிலிருந்த பொலிஸாரை மோதித் தள்ளிவிட்டு டிப்பர் ஒன்று தப்பிச் சென்றுள்ளது.

ஹக்மன, கொங்கல பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் பொலிஸ் அதிகாரி யொருவர் உயிரிழந்துள்ளார். மேலும் இரு பொலிஸார் காயமடைந்துள்ளனர்.

வேகமாக வந்த டிப்பர் வாகனம் ஒன்று இந்தப் பகுதியில் அமைந்துள்ள சோதனைச் சாவடி மீது மோதிய விபத்தை ஏற்படுத்தி விட்டு டிப்பர் வாகனம் தப்பிச் சென்றுள்ளது.

இது தொடர்பான விசா ரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ரி1)

## வாகனப் பதிவுகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 15

கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக வாகனப் பதிவுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய கடந்த மே மாதம் 17,313 வாகனங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ள நிலையில் கடந்த ஜூன் மாதம் 32,123 வாகனங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மே மாதத்துடன் ஒப்பிடுகையில் ஜூன் மாத வாகனப் பதிவானது இருமடங்காக அதிகரித்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொவிட்19 அச்சம் காரணமாக மக்கள் பொதுப் போக்குவரத்து சேவைகளைப் பயன்படுத்துவது குறைவடைந்துள்ள நிலையில் தனிப்பட்ட வாகனத்தில் பயணிக்கின்றமையால் புதிய வாகனங்களின் பதிவுகள் அதிகரித்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி2)



# ஏல். எல். பரீட்சை திகதி மாறலாம்

## பரீட்சைகள் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 15

நாட்டில் தற்போதுள்ள நிலைமையில் தேசிய பரீட்சைகள் தொடர்பில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை. கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைகளை செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள போதிலும் இந்த திகதியில் மாற்றம் ஏற்படக் கூடும் என்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவல் நாட்டில் மீண்டும் தீவிரமடைய ஆரம்பித்துள்ள நிலையில் பாடசாலைகளுக்கு ஒருவார காலம் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலைமை தொடரும் பட்சத்தில் தேசிய பரீட்சைகள் ஒத்திவைக்கப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ள நிலையில் ஆணையாளர் நாயகம் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த மூன்று மாதங்களாக ஊரடங்கு, வைரஸ் பரவல் என்பனவற்றின் காரணமாக கற்பித்தல் நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்திருந்தன. மாணவர்களின் நலன்கருதி கல்விப் பொதுத்தராதர பரீட்சை, ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை என்பன செப்ரெம்பர் மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டன.

கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சைகள் தொடர்பில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை. அந்த பரீட்சைகளை நடத்துவதற்கு சுமார் 5 மாதங்கள் காணப்படுகின்றன. எனவே அது பற்றி சற்று காலம் தாழ்த்தி தீர்மானிக்கப்படும். புலமைப்பரிசில் பரீட்சை ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி செப்ரெம்பர் 13 ஆம் திகதி நடத்தப்படவிருக்கிறது.

எனினும், உயர்தர பரீட்சை செப்ரெம்பர் 7 ஆம் திகதி என்று திட்டமிட்டிருந்தபோதும் இந்தத் திகதியில் மாற்றம் ஏற்படக் கூடும். இவை பற்றி எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை. தற்போதைய நிலைமை வழமைக்குத் திரும்பிய பின்னர் இது குறித்து ஆராயப்படும்- என்றார். (த)

# முறிகள் ஏலம் பற்றி விசாரணை நடத்தவும்

## பதில் பொலிஸ்மா அதிபருக்கு சட்டமா அதிபர் ஆலோசனை

கொழும்பு, ஜூலை 15

இலங்கை மத்திய வங்கியில் 2016 ஆம் ஆண்டு இடம்பெற்ற முறிகள் ஏலம் தொடர்பில் ரவி கருணாநாயக்க, அர்ஜுன் அலோசியஸ் உள்ளிட்ட சந்தேகநபர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

சட்ட மா அதிபர் தப்புல டி லிவேரா, பதில் பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவுக்கு இவ்வாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல எவ்வித ஆட்சேபனைகளும் இல்லை என்று கடந்த 07 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதற்கமைய, 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இடம்பெற்ற முறிகள் ஏலத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களிடம் வாக்குமூலங்களை பதிவு செய்ய எவ்வித ஆட்சேபனைகளும் இல்லை என்று அரச சட்டத்தரணி நிஷாரா ஜயரத்ன தெரிவித்தார்.

சந்தேகநபர்களை கைதுசெய்யவும் தடுப்புக் காவலில் வைக்கவும் அனுமதி வழங்க மறுத்த நீதிவான், விசாரணைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என சந்தேகநபர்களுக்கு உத்தரவிட்டேன் என்றும் அவர் கூறினார்.

அதற்கமைய, ரவி கருணாநாயக்க, அர்ஜுன் அலோசியஸ் உள்ளிட்ட சந்தேகநபர்களிடம் உடனடியாக வாக்குமூலம் பதிவு செய்யுமாறு சட்ட மா அதிபர், பதில் பொலிஸ் மா அதிபருக்கு இன்று ஆலோசனை வழங்கியுள்ளார்.

விசாரணை அறிக்கையை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் என்று பதில் பொலிஸ் மா அதிபருக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக சட்ட மா அதிபரின் இணைப்பதிகாரி, அரச சட்டத்தரணி நிஷாரா ஜயரத்ன தெரிவித்தார். (த)



# யாழ்ப்பாண மக்களுக்கான மஹிந்தவின் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 15

பொதுமக்களின் வரிப்பணத்தில் முன்னெடுக்கப்படும் வீதி அபிவிருத்திப் பணிகளின் திறப்பு விழாக்களை, அரசியல்வாதிகளுடன் தொடர்புபடுத்த தேவையில்லை. அது உங்களின் பணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திப் பணிகளே. அதேபோன்று அரச வேலை வாய்ப்பு அரசியல்வாதிகளால் வழங்கப்படுவதில்லை என்பதையும் மக்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற தேர்தல்கள் ஆணைக்குழுத் தவிசாளர் மஹிந்த தேசப்பிரியவின் பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச நிதியில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களை அரசியல்வாதிகள் உரிமை கோர முடியாது. யாழ்ப்பாணத்தில் அரச நிதியில் முன்னெடுக்கப்பட்ட சில அபிவிருத்தித் திட்டங்கள் அரசியல்வாதிகளால் திறக்கப்பட்டுள்ளன. அவை குறித்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அந்த இடங்களில் இந்த வீதி உங்களின் (பொதுமக்களின்) வரிப் பணத்தில் திறக்கப்பட்டது. அதனை அரசியல்வாதிகள் யாருடனும் தொடர்புபடுத்திப் பார்க்கத் தேவையில்லை என்ற பலகையை காட்சிப்படுத்தவுள்ளோம்.

இதேபோல, வேலை வாய்ப்புக்களைப் பெற்றுத் தருவதாக அரசியல்வாதி ஒருவர் உறுதி வழங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் ஒளிப்படங்களுடனான முறைப்பாடுகள் கிடைக்கப் பெறவில்லை. வேலை வாய்ப்புக்களை அரசியல்வாதி வழங்க முடியாது. அது அரச நடைமுறைக்கு அமைவாக நேர்முகத் தேர்வு நடைபெற்றுத்தான் வழங்கப்படும். இது தொடர்பில் பொதுமக்கள் அவதானமாக இருக்கவேண்டும், என்றார். (ஓ.5)




இலங்கை தமிழ் அரசுக் கட்சி
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)



சபையில் சரவணபவன்




கருணாவையும் பிள்ளையானையும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச மறந்து விட்டாரோ? இது இடையன் ஆட்டுக்குட்டியை கழுத்தில் போட்டுக் கொண்டு தேடுவது போல் இருக்கின்றது.

இனங்களுக்கிடையிலும் மதங்களுக்கு இடையிலும் நல்லிணக்கமும் சகோதரத்துவமும் ஏற்பட வேண்டுமானால் இளம் தலைமுறையினர் மத்தியில் அல்பிரட் துரையப்பா போன்றோர் தோற்றம் பெறவேண்டும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச கூறியுள்ளார். அதுவும் வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றின்போதே தைரியமாகக் கூறியுள்ளார்.

அல்பிரட் துரையப்பா யார் என்பதை தமிழ் மக்கள் நன்றாகவே அறிவார்கள். தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி பிறந்த மண்ணுக்கும் பெற்ற தாய்க்கும் தமிழ் மொழிக்கும் துரோகம் இழைக்கும் வகையில் சிங்கள இனவாத அரசுக்கு ஏஜண்டாகவும் கைக்கூலியாகவும் செயற்பட்டதாலேயே அவருக்கு பகிரங்க தண்டனை வழங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இப்படியாக காட்டிக் கொடுக்கும் இனத் துரோகிகளை உத்தமர்களாகவும் உயர்ந்தவர்களாகவும் சித்தரித்துக் காட்ட முனைகின்றார்.

ஐயோ பாவம் இவருக்கு சரித்திரமே தெரியாதோ. மஹிந்தவின் உயர்ந்த சிந்தனையின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டவர்தான் கருணா அம்மான் என்று அழைக்கப்பட்ட விநாயகமூர்த்தி முரளிதரன். தமிழீழ விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக்கொடுத்து பல லட்சம் உயிர்கள் பலியாக காரணமாக இருந்தவர் இந்தக் கருணா. இவருடைய இந்த சேவையைப் பாராட்டிக் கௌரவித்து பிரதி அமைச்சுப் பதவியையும் சொகுசு வாழ்க்கையையும் ஏற்படுத்திக் கொடுத்தவர் மஹிந்த ராஜபக்ச.

அதேபோன்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலையுடன் தொடர்புடையவர் என சிறையில் இருப்பவர் பிள்ளையான். இவரை முதல்வர் ஆக்கினார். இவர்கள் இருவருமே ராஜபக்ச குடும்பத்தின் செல்லப்பிள்ளைகள். இவர்களைத் தன்னுடன் வைத்துக் கொண்டு அல்பிரட் துரையப்பா போன்றோர் தோற்றம் பெற வேண்டும் என்கிறார். இது இடையன் ஆட்டை தோளில் போட்டுக் கொண்டு தேடுவது போல் ஆகும்.

ஜூலை 2020

இது ஒரு கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

# இலங்கை மீது வலுவான அணுகுமுறை தேவை

## சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் கோரிக்கை

**கொழும்பு, ஜூலை 15**

**இலங்கையில் அண்மைக்காலமாக சிவில் சமூக மற்றும் மனித உரிமைகள் செயற்பாடுகளுக்கான இடைவெளி மிக விரைவாகச் சுருங்கி வருவதாகவும் செயற்பாட்டாளர்கள் இராணுவத்தினரின் தீவிர கண்காணிப்புக்கு உட்படுவதாகவும் சுட்டிக்காட்டியிருக்கின்ற 7 சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள், இலங்கையில் பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படுவதை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கண்காணிக்க வேண்டும் என்றும் இலங்கையின் மீது இன்னமும் வலுவான அணுகுமுறைகள் பிரயோ கிக்கப்படுவது அவசியம் என்றும் வலியுறுத்தியிருக்கின்றன.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 44 ஆவது கூட்டத் தொட ரில் அமைதியான முறையில் சுதந்திரமாகக் கூடுவதற்கும், கலந்துரையாடுவதற்குமான உரிமை பற்றிய ஐ.நா. விசேட அறிக்கையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம், சிறுபான்மையினச் சமூகங்களின் உரிமைகளுக்கான சர்வதேசக்குழு, மனித உரிமைகளுக்கான சர்வதேச சேவைகள் உள்ளிட்ட 7 மனித உரிமை அமைப்புக்கள் இணைந்து கூட்டறிக்கை யொன்றை வெளியிட்டுள்ளன.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

ஐ.நா. விசேட அறிக்கையாளரால் சுட்டிக்காட்டப்பட்டதைப் போன்று இலங்கையில் சிவில் சமூக செயற்பாடுகளுக்கான இடைவெளி விரைவாகச் சுருங்கி வருகின்றது. சிவில் சமூக அமைப்புக்கள் இராணுவத்தினரின் தீவிர கண்காணிப்பிற்கு உட்பட்டு வருவதுடன், அரசின் வெவ்வேறு கட்டமைப்புக்களால் விசாரணைகளுக்கும் உட்படுத்தப்பட்டுகின்றன.

விசனமளிக்கும் வகையில் கொவிட் 19 கொரோனா வைரஸ் பரவல் கருத்துச் சுதந்திரம், அமைதியான முறையில் கூடுவதற்கான சுதந்திரம் ஆகியவற்றின் மீது கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு அரசுக்கு வாய்ப்பேற்படுத்தித் தந்துவிட்டது என்பதுடன், இந்த நிலைமை சமூகவலைத்தள செயற்பாட்டாளர்களான ரம்ஸி ரஸீக் போன்றவர்களைக் கைது செய்து தடுத்து வைப்பதில் சென்று முடிந்திருக்கிறது. சட்டத்தரணியும், சமூக உரிமைகளுக்கான செயற்பாட்டாளருமான ஹிஜாஸ் ஹிஸ்புல்லா பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்திலும் முற்படுத்தப் படாமல் சுமார் 3 மாதகாலம் வரை யில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

அரசால் பல்வேறு ஜனாதிபதி செயலணிகள் நிறுவப்பட்டு வருகின்றன. இத்தீர்மானங்கள் அனைத்தும் நாடாளுமன்றத்தின் மேற்பார்வையோ, அனுமதியோ இன்றியே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. பாதுகாப்பானதும், ஒழுக்கமானதுமான நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதி செயலணி முழுவதுமாகப் பாதுகாப்புத்துறையினரை உள்ளடக்கியதாக உருவாக்கப்பட்டிருப்பதுடன், அதன் செயற்பாடுகள் பற்றிய வரையறை தெளிவற்றதாகவும் காணப்படுகின்றது. இது மக்கள் மீது இராணுவ அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தலாம் என்று சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் விசனம் வெளியிட்டிருக்கிறார்கள்.

அது மாத்திரமன்றி பொலிஸாருடன் பெருமளவான இராணுவத்தினரும் பணியில் ஈடுபடுத்தப்படுவதுடன், அண்மையில் அமைதியாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது கட்டற்ற அடக்குமுறை பிரயோகிக்கப்பட்டிருப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. இது மிகவும் அவதானத்திற்குரிய நிலையாகும்.

இலங்கையின் சிவில் சமூக மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் பகிரங்கமாகப் பங்கேற்கக்கூடியதும், கருத்து வெளியிடக்கூடியதுமான ஒரே தளமாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவைகள் விளங்குகின்றது. எனினும் மனித உரிமைகள் பேரவையில் பேசுகின்றவர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்களும் அதிகரித்துவரும் நிலை காணப்படுகின்றது.

இலங்கையில் பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படுவதைக் கண்காணிக்க வேண்டிய கடப்பாடு மனித உரிமைகள் பேரவைக்குக் காணப்படுவதுடன், இலங்கை தொடர்பில் இன்னும் வலுவான அணு குமுறைகளைப் பின்பற்றுவது அவசிய மாகின்றது. மேலும் தொடர்ந்தும் விசேட ஆணையாளர் இலங்கையின் மனித உரிமைகள் விவகாரங்களைக் கண்காணிக்க வேண்டும் என்று கேட் டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ஒ,5)

# ஓ.எம்.பி. அலுவலகத்தால் சர்வதேச நீதிமன்றம் செல்ல வேண்டிவரும்!

## புதிய ஆட்சியில் பணியகம் தொடர்பில் முடிவெடுக்கப்படும் என்கிறார் சரத் வீரசேகர

கொழும்பு, ஜூலை 15

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பணியகம் ஆபத்தானது. படையினரை மின்சார கதிரைக்குக் கொண்டு செல்வதற்கான சாட்சிகள் அங்கே உருவாக்கப்படுகின்றன. எனவே, நிலையான அரசு அமையப்பெற்ற பின்னர் குறித்த பணிகள் தொடர்பில் முடிவொன்று எடுக்கப்படும் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் ரியர் அட்மிரல் சரத்வீரசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது.

மஹிந்த ராஜபக் ஷ மற்றும் படையினரை மின்சார கதிரைக்கு கொண்டுசெல்வதற்கான வழியை நல்லாட்சி அரசு திறந்துவிட்டது. நாம் போர்க்குற்றங்களில் ஈடுபடவில்லை. ஆனாலும், போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்டுள்ளன என்ற அடிப்படையிலேயே அமெரிக்காவால் தீர்மானம் முன்வைக்கப்பட்டது. இதற்கு நல்லாட்சி அரசு இணை அனுசரணை வழங்கியது. இந்த தீர்மானத்தின் பிரகாரம் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் பணியகமொன்று அமைக் கப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டிருந்தது. குறித்த அலுவலகம் சர்ச்சைக்குரியது அல்ல என்றும், காணாமல் போனோர் தொடர்பில் விசாரணை நடத்துவது நல்லதுதானே என்றும் கருதுகின்றனர். ஆனால், இப்பணிகள் அதன் ஊடாக இடம்பெறுவதில்லை.

மாறாக மின்சார கதிரைக்குக் கொண்டு செல்வதற்கு ஏதுவான வகையில் சாட்சியங்களை உருவாக்கும் பணியே இடம்பெறுகின்றது. உதாரணமாக ஜேர்மனியிலுள்ள பெண்ணொருவர், மேஜர் ஒருவருக்கு எதிராக வன்கொடுமை குற்றச்சாட்டை காணொலிமூலம் முன்வைத் தால்கூட அதுவும் சாட்சியாக பதிவுசெய்யப்படும் நிலை காணப் படுகின்றது. இதன் அடிப்படையில் போர்க்குற்றச்சாட்டு ஆவ ணம் தயாரிக்கப்படும். சாட்சி யார் என்பதுகூட தெரியாது. எனவே, குறித்த மேஜர் வெளிநாடு சென்றால், அவர் போர்க்குற்றங்களில் ஈடுபட்டதற்கான சாட்சி உள்ளது என யாராவது முறைப்பாடு முன்வைத்தால் அவரைக் கைதுசெய்யமுடியும். அந்த நாடு ரோம் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தால் அவரை போர்க் குற்ற நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லமுடியும். இதுதான் மின்சார கதிரைக்கு செல்லும் வழிமுறையாகும். ஆனாலும், ஆட்சிமாற்றம் ஏற்பட்டதால் இலக்குகளை அவர்களால் அடையமுடியாமல்போனது.

அதேவேளை, நிலையான அரசொன்று அமையப்பெற்ற பின்னர் குறித்த பணியகம் இதுவரையில் முன்னெடுத்த பணிகள் ஆய்வுக்குட்படுத்தப்படும்.

குறித்த பணியகத்தின் சில உறுப்பினர்கள் தொடர்பில் எமக்கு பிரச்சினை இருக்கின்றது. பெண் உறுப்பினர் ஒருவர், படையினருக்கு எதிராக ஜெனிவாவில்கூட கருத்து வெளியிட்டுள்ளார். இப்படியானவர்களே நியமிக்கப்பட்டுள்ளனர்- என்றார். (ஒ,5,44)

## பி.சி.ஆர்.முடிவுக்கு காத்திருந்த கைதி மாடியிலிருந்து வீழ்ந்து சாவு

கொழும்பு, ஜூலை 15

கொரோனா பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட கைதி 8 ஆம் மாடியிலிருந்து வீழ்ந்து உயிரிழந்துள்ளார். நீர்கொழும்பு சிறைச்சாலையின் கைதி நீர்கொழும்பு மருத்துவமனையின் 8ஆம் மாடியிலிருந்து வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவமானது நேற்று அதிகாலை இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொரோனா வைரஸ் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட கைதி, பரிசோதனை முடிவுகள் வெளிவரும் முன்னர் மருத்துவமனையிலிருந்து தப்பிச் செல்ல முற்றபட்ட போது 8ஆம் மாடியிலிருந்து வீழ்ந்து உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. போதைப்பொருள் குற்றச்சாட்டில் சிறைக் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர், 36 வயதுடைய வடக்கு கதுருவானா பகுதியைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ஒ,5)




## 20,240 வர்த்தகர்களுக்கு 5,300 கோடி ரூபா கடன்

கொழும்பு,ஜூலை 15

நாடளாவிய ரீதியில் செயற்படும் 20 ஆயிரத்து 240 வர்த்தக நிலையங்களுக்கு, அரச வங்கிகள் மற்றும் பல்வேறு வர்த்தக வங்கிளூடாக தற்போது வரை 5 ஆயிரத்து 300 கோடி ரூபா கடன் வழங்கப்பட்டுள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவலால் பாதிக்கப்பட்ட வர்த்தக நிலையங்களுக்கு இந்தக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

நூற்றுக்கு நான்கு சதவிகித வருடாந்த சலுகை. வட்டி அடிப்படையில், முதல் ஆறுமாதங்கள் தவணைப்பணம் மீளச் செலுத்தப்பட வேண்டியதில்லை என்ற சலுகையுடன் கடன் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார நிலையை மீண்டும் கட்டியெழுப்பும் நோக்கில் சுயதொழில், தனியான வர்த்தகம், சுற்றுலாத்துறை மற்றும் ஏற்றுமதி போன்ற பல்வேறு வகை வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வர்த்தகர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. (சு-ச)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தேசிய நலன்களின் பெயரில் இன அழிப்பு

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்து திரும்பிய ஐக்கிய நாடுகள்சபையின்மனிதஉரிமைகள்தொடர்பான விசேட அறிக்கையாளர் கிளெமென்ட் எனவுயுல் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளில் அமைதியாக ஒன்றுகூடும் சுதந்திரம் உட்பட மக்களின் இயல்பு வாழ்வு அரசாங்கத்தின் கெடுபிடிகள் காரணமாக மறுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்திருந்தார். அதுமட்டுமின்றி கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்திலும், ஜனாதிபதி தேர்தல் முடிந்த காலகட்டத்திலும் நிலவிய சூழ்நிலைகளி லிருந்து நிலைமை படுமோசமாக தற்சமயம் மாற்றமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்திருந்ததாக செய்திகள் வெளிவந்துள்ளன.

இவ்வறிக்கை தொடர்பாக இலங்கை அரசாங்கம் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துள்ளதுடன் அவற்றில் குறிப்பிடப்படும் விடயங்கள் யதார்த்த நிலைமைகளுடன் ஒத்துவரவில்லை எனவும் தெரிவித்துள்ளது. அதுமட்டுமின்றி வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்படும் சோதனை நடவடிக்கைகள் வழமையானவையே எனவும் நாட்டின் பாதுகாப்புத் தொடர்பான காரணங்களுக்காகவே அவை மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்துள்ளதுடன் தீவிரவாதிகளின் நுட்பமான நடவடிக்கைகளுடன் தேசிய நலன்களை சமரசம் செய்வது பாதுகாப்பு நிலைமைக்கு ஏற்புடையதல்ல எனவும் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலங்காலமாகவே ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையாளர்கள் இலங்கைக்கு விஜயம் செய்து இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பானதும், வடக்கு கிழக்கு மக்களின் இயல்பு வாழ்வு சிதைக்கப்படுவது தொடர்பானதுமான அறிக்கைகளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரிடம் பலமுறை சமர்ப்பித்துள்ளனர். குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபையின் சமத்துவத்துக்கும் நீதிக்குமான அமைப்பின்அறிக்கையாளர்ஜஸ்மின்சுக்கா இலங்கை அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகள் தொடர்பாக கண்டனங்களை வெளியிட்டு வந்துள்ளார். இலங்கைப் படையினரும், தளபதிகளும் மேற்கொண்ட போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆதாரபூர்வமான தகவல்களைக் கொண்ட கண்டன அறிக்கைகளை சமர்ப்பித்தும் வந்துள்ளனர்.

இப்படியான நிலைமையில் ஐக்கிய நாடுகள் அறிக்கையாளர்களின் கண்டனங்களை இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் மறுத்தே வந்துள்ளது. அதன் உச்சக் கட்டமாக இலங்கை தொடர்பாக கண்டன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமானால் அப்படியான நிறுவனங்களிலிருந்து இலங்கை விலகி விடப்போவதாக ஜனாதிபதி கோத்தபாய ராஜபக் ஷ தெரிவித்திருந்தார்.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது ஒட்டுமொத்தத்தில் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் என்பனவற்றை ஏற்று சம்பந்தப்பட்டவர்கள் மேல் நடவடிக்கையெடுக்க அரசாங்கம் தயாராக இல்லை என்பதும், வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் மீது இனரீதியான ஒடுக்கு முறைகளும் வன்முறை நடவடிக்கைகளும் அவர்களின் தேசிய தனித்துவத்தை அழிக்கும் நடவடிக்கைகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்படுமென்பதும் தெளிவாக வெளிப்படுத்தப்படுகிறது.

இராணுவ அதிகாரிகளையும் பௌத்த பிக்குகளையும் கொண்ட தொல்பொருள் ஆய்வு சம்பந்தப்பட்ட ஜனாதிபதி செயலணி அமைக்கப்பட்டதும், திருக்கோணேச்சரம், நல்லூர் போன்ற பாரம்பரிய இந்து ஆலயங்கள் சிங்களவர்களுக்குரியதென மெதானந்த தேரர் கருத்து வெளியிட்டு வருவதும், அதை எந்தவொரு சிங்கள தொல்லியலாளரும் மறுதலிக்காமல் இருப்பதும் அடிப்படையில் வடக்கு கிழக்கு மக்களின் பாரம்பரிய பிரதேசம் என்ற அடிப்படையை இல்லாமல் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் ஒரு சதி நடவடிக்கையாகவே பார்க்கப்படுகிறது.

அடிப்படையில் இதுவும் கூட இனவழிப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியேயாகும்.

ஒருபுறம் தேசிய நலன்களின் பெயராலும், பாதுகாப்பின் பெயராலும் இனக்குரோத நடவடிக்கைகளையும், இனவழிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டவாறு அவற்றை தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளாகக் காட்ட முயற்சிப்பதும், அப்படியான நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் அமைப்பு கண்டிக்கும்போது அதற்கெதிராக குரல் எழுப்புவதும், இலங்கை இனப்பிரச்சினைக்கு நியாயபூர்வமான தீர்வை அடைவதற்கு அரசு அனுமதிக்கப் போவதில்லை என்பதையும் தெளிவாக வெளிப்படுத்துகின்றது.

# கடல் எல்லையைத் தாண்ட எவரையும் அனுமதியாதீர்!

## கடற்படை அதிகாரிகளுக்கு அறிவுறுத்து

**மன்னார்,ஜூலை 15**

**இந்தியாவில் இருந்து எவரும் கடல் மார்க்கமாக இலங்கைக்கு வருவதற்கு அனுமதிக்கக் கூடாது. இந்திய றோலர் படகுகளை இலங்கை கடல் எல்லைக்குள் கூட வர அனுமதி வழங்க வேண்டாம்.**



இவ்வாறு கடற்படை அதிகாரியிடம் மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ் கேட்டுக் கொண்டார். மன்னார் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொடர்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயும் அவசர கலந்துரையாடல் நேற்றுச் செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு மாவட்டச் செயலர் தெரிவித்ததாவது:

நாட்டில் தற்போது கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்து வருகின்ற நிலையில் மன்னார் மாவட்டத்தில் 14 பேர் தனிமைப்படுத்தும் நிலையங்களில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அறிக்கையின்படி மாவட்டத்துக்கு இதுவரை ஆபத்தான நிலைமை ஏற்படவில்லை.

எனினும் கடற்படை அதிகாரிக்கு இறுக்கமான அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

இந்தியாவில் இருந்து எவரும் கடல் மார்க்கமாக இங்கே வருவதற்கு அனுமதிக்கக் கூடாது என்றும், இந்திய றோலர் படகுகளை இலங்கை கடல் எல்லைக்குள் கூட வர அனுமதிக்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டோம்.

அதற்கு மேலதிகமாக பிரதேச செயலாளருக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

நோய்க்கட்டுப்பாடுகளை மேற்கொள்ள சுகாதார அதிகாரிகளுடன் இணைந்து நடவடிக்கைகளை முன்னெடுக்க உரிய தரப்பினரைக் கோரியுள்ளோம் - என்றார்.

கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர், பொலிஸ், கடற்படை அதிகாரிகள், அழைக்கப்பட்ட திணைக்கள அதி காரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-56)

## 50 ரூபாவுக்கு நெல் கொள்வனவு

கொழும்பு,ஜூலை 15

2020 ஆம் ஆண்டுக்கான அரசின் நெல் கொள்வனவு வேலைத்திட்டத்தின் கீழ், ஒரு கிலோ கிராம் நெல் 50 ரூபாவுக்கு கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடங்களில் நாட்டு நெல் ஒரு கிலோ கிராம் 38 ரூபாவுக்கும், சம்பா நெல் ஒரு கிலோகிராம் 41 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்பட்டது.

இந்த நிலையில், 2019/2020 பருவகாலத்தில் நெல்லுக்கு அதிகூடிய கொள்வனவு விலையைப் பெற்றுக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

எனவே, இம்முறை அதிகபட்ச விலையைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் 50 ரூபாவுக்கு நெல் கொள்வனவு செய்யப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## பாடசாலைகள் திறப்பு வெள்ளியன்று தீர்மானம்

கொழும்பு,ஜூலை 15

பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக எதிர்வரும் வெள்ளிக்கிழமை கொரோனாத் தொற்று ஒழிப்பு தொடர்பான செயலணியுடன் கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

பாடசாலைகள்மீளத்திறக்கப்படாவிடில் வீடுகளில் இருந்து மாணவர்களுக்கு பாடங்களை நடத்துவதற்கு ஆசிரியர்களுக்குப் புதிய ஆலோசனை அறிக்கையை விநியோகிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சின் செயலாளர் ரஞ்சித் சந்திரசேகர தெரிவித்துள்ளார். (க)

# 189,000 முகக் கவசங்களை அள்ளி வழங்கியது சீனா

கொழும்பு, ஜூலை 15

கல்வியமைச்சு மற்றும் உயர்கல்வி அமைச்சு ஆகியவற்றுடனான ஒருங்கிணைவில் நாடளாவிய ரீதியிலுள்ள 26 பாடசாலைகளுக்கும் 5 பல்கலைக்கழகங்களுக்கும் 189,000 முகக் கவசங்களை இலங்கையிலுள்ள சீனத்தூதரகம் வழங்கியுள்ளது.

பொதுத்தேர்தலைக் கருத்திற்கொண்டு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் வேண்டுகோளின் பிரகாரம் எதிர்வரும் நாள்களில் சுயாதீனத் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு 100,000 முகக்கவசங்களை வழங்குவதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் சீனத் தூதரகம் அறிவித்திருக்கிறது.

இலங்கையில் கொவிட் 19 கொரோனா வைரஸ் பரவ ஆரம்பித்ததிலிருந்து கடந்த ஜூன் மாதம் வரையில் சீனாவின் மத்திய மற்றும் மாநில அரசாங்கங்கள், வணிக நிறுவனங்கள், வேறு அமைப்புக்கள் எனப் பலரால் சுகாதாரப் பாதுகாப்பு உபகரணங்கள் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கி வைக்கப்பட்டிருக்கின்றன என்று இது குறித்து சீனாவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் அதிகரிக்கத் தொடங்கிய மார்ச் மாத இறுதிப் பகுதியிலிருந்து ஜூன் மாதம் வரையில் சீனாவினால் இலங்கைக்கு 73,000 இற்கும் அதிகமான கொரோனா வைரஸ் தொற்றுப் பரிசோதனை உபகரணங்கள், 3, 144,000 சத்திர சிகிச்சை முகக்கவசங்கள், 210,000 கே.என் 95 முகக் கவசங்கள், 54,000 பாதுகாப்பு அங்கிகள், 41,000 பாதுகாப்புக் கண்ணாடிகள், 145,000 கையுறைகள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன என்றும் சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது. (ஐ)

# தேவையற்று நடமாடுவதை மக்கள் தவிர்க்கவேண்டும்!

## மருந்தகக் கூட்டுத்தாபனத் தலைவர் பிரசன்ன குணசேன கோரிக்கை

**கொழும்பு, ஜூலை 15**

**நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நோயாளர்களின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பொன்று ஏற்பட்டிருக்கும் நிலையில், எதிர்வரும் வாரங்களில் மக்கள் அநாவசியமாக வெளியே செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு வலியுறுத்தியிருக்கும் இலங்கை மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் தலைவரும் நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணருமான பிரசன்ன குணசேன வலியுறுத்தினார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் கடந்த மார்ச் மாதமளவில் கொரோனா வைரஸ் பரவல் தீவிரமடையத் தொடங்கியதை அடுத்து, நாடு முற்றாக முடக்கப்பட்டு தொற்றுப் பரவல் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

எனினும் மீண்டும் இம்மாத ஆரம்பத்தில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் கைதியொருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டதையடுத்து முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளில் கந்தக்காடு போதைப்பொருள் புனர்வாழ்வளித்தல் நிலையம், இராஜாங்கனைப்பகுதி ஆகியவற்றில் பெருமளவானோர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியிருக்கின்றனர் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து நாட்டில் வைரஸ் பரவலின் இரண்டாம் அலை ஏற்படுவதற்கான அச்சுறுத்தல் நிலை தோன்றியிருக்கிறது.

இத்தகைய சூழ்நிலையில் மக்கள் பொருள்களை வாங்குவதற்காகப் பல்பொருள் அங்காடிகளுக்குச் சென்று முட்டிமோதுகிறார்கள். நீங்கள் செயற்பட வேண்டிய முறை இதுவல்ல. எதிர்வரும் வாரங்களில் நீங்கள் வீட்டைவிட்டு வெளியே செல்வதென்றால், ஒன்றுக்கு இரண்டு முறை சிந்தியுங்கள்.

உங்களுக்கு அல்லது உங்களது உறவினர்களுக்கு வாழ்க்கையை நடத்திச் செல்வதற்கு மிகவும் அத்தியாவசியமான தேவைப்பாடுகள் காணப்படுமாயின், அவற்றுக்காக மாத்திரம் வெளியே செல்லுங்கள். மாறாக திருமண நிகழ்வுகள், மரணச்சடங்குகள், நண்பர்களைச் சந்தித்தல், பிரத்தியேக வகுப்புகள் போன்றவற்றுக்குச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

நாட்டுமக்கள் அனைவரும் தத்தமது செயற்பாடுகளை சரியாகக் கட்டுப்படுத்திக்கொண்டால் எமது நாடு இந்தப் பேரழிவிற்குள் சிக்குவதைத் தவிர்த்துக்கொள்ள முடியும். அவ்வாறல்லாவிடின், தற்போதுள்ள நிலைமை மேலும் மோசமடைவதற்கும் இடமிருக்கிறது என்பதை மனதில் இருத்திக்கொள்ள வேண்டும் - என்றார். (ம)

## எதிர்வரும் நாள்களில் தொடர்ச்சியான மழை



கொழும்பு, ஜூலை 15

நாட்டில் எதிர்வரும் சில நாள்களுக்கு தொடர்ச்சியாக மழை பெய்யும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், கடல் அலை 2.0 தொடக்கம் 2.5 மீற்றர் உயரம் வரை மேலெழும்பக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

புத்தளத்தில் இருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலேயே கடல் அலை மேலெழும்பக்கூடிய சாத்தியம் காணப்படுகிறது.

இதன் காரணமாக கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் கரையோரப் பிரதேசங்களில் வசிக்கும் பொது மக்களும் அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேல், சப்ரகமுவ, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் தொடர்ச்சியாக மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஊவா, கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)



## அட்மிரல் பியாலுடன் ஜனாதிபதி சந்திப்பு

கொழும்பு.ஜூலை 15

ஓய்வுபெறவுள்ள கடற்படையின் 23 ஆவது தளபதி அட்மிரல் பியால் டி சில்வா, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷவை நேற்றுச் சந்தித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் சந்திப்பு நடைபெற்றது.

அட்மிரல் பியால் டி சில்வா, அட்மிரலாக நேற்றுச் செவ்வாய்க்கிழமை முதல் தரம் உயர்த்தப்பட்டுள்ளார். ஜனாதிபதியினால் இந்த பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ, வைஸ் அட்மிரல் பியால் டி சில்வாவுக்கு நினைவு பரிசு வழங்கியிருந்தார்.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியால் டி சில்வா, இன்று 15 ஆம் திகதியுடன் ஓய்வு பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## சாவகச்சேரியில் நேற்றுமுன்தினம் 20 கிலோ கஞ்சா மீட்கப்பட்டது!

### இருவர் கைது

கொடிகாமம், ஜூலை 15

20 கிலோ கஞ்சா சாவகச்சேரியில் வைத்துக் கைப்பற்றப்பட்டுள்ளது. அவற்றைக் கடத்தினர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்துக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பிலேயே மேற்படி கஞ்சா கைப்பற்றப்பட்டது. திருகோணமலையைச் சேர்ந்த ஒருவரும், சாவகச்சேரியைச் சேர்ந்த ஒருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைமாற்றப்படுவதற்காகக் கொண்டுவரப்பட்ட கஞ்சாவே கைப்பற்றப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-159,20,9)



## சாரதி அனுமதிப்பத்திரங்கள் செல்லுபடியாகும் காலம் நீடிப்பு

கொழும்பு, ஜூலை 15

இம்மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் காலாவதியாகும் சாரதி அனுமதிப்பத்திர உரிமங்களுக்கு மேலும் 3 மாத கால அவகாசம் வழங்குவதற்கு போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சு தீர்மானித்துள்ளது.

மேலும், கடந்த மார்ச் 16 ஆம் திகதி தொடக்கம் ஜூன் 30 வரை காலாவதியான சாரதி அனுமதிப் பத்திரங்களுக்கு 6 மாத மேலதிக சலுகைக்காலம் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறித்த அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய நிலையை கருத்திற்கொண்டும் நாளாந்தம் அதிகளவான மக்கள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு வருகைத் தருவதன் காரணமாகவும் போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சு மேற்படி தீர்மானத்தை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோரின் 31 ஆவது நினைவு நிகழ்வு நேற்றுமுன்தினம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் செயலாளர் நாயகமும், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான அமரர் அ.அமிர்தலிங்கம் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் வெ.யேகேஸ்வரன் ஆகியோரின் 31ஆவது நினைவுதின நிகழ்வு, நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

நிகழ்வில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். (ம)



இலங்கையின் முதலாவது தமிழ் எதிர்க்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 31 ஆவது ஆண்டு நினைவு நாள், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாணத் தலைமையகம் அமைந்துள்ள மார்ட்டின் வீதியில் நேற்று முன்தினம் நினைவுகூரப்பட்டது. (க)

# தபால்மூல வாக்களிப்பில் அரச ஊழியர்கள் மும்முரம்

வவுனியா, ஜூலை 15

நாடாளுமன்றத் தேர்தலில் அரச உத்தியோகத்தர்களுக்கான தபால்மூல வாக்களிப்பு நாடளாவிய ரீதியில் நேற்று இடம்பெற்ற நிலையில் வவுனியாவிலுள்ள அரச திணைக்களங்களில் நேற்றுக் காலை 8.30 மணி தொடக்கம் வாக்களிப்புகள் மும்முரமாக இடம்பெற்றன.



முப்படையினர், பொலிஸ் திணைக்கள அதிகாரிகள், மாவட்டச்செயலக அதிகாரிகள் தவிர்ந்த ஏனைய அரச உத்தியோகத்தர்கள் அவர்களது திணைக்களத்தில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வாக்களித்தனர். பாதுகாப்புக் கடமையில் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டனர்.

தபால் மூலம் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பங்கள் இன்றும் இடம்பெறவுள்ளது. நேற்றையதினம் தேர்தல் காண்காணிப்புப் பணியில் மாவட்டச் செயலகத்தினரும் தேர்தல் திணைக்களத்தினரும் ஈடுபட்டனர். வவுனியா மாவட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள், அதிபர்கள் காலை வேளையிலேயே வரிசையில் காத்திருந்து வாக்களித்திருந்தனர்.

16 மற்றும் 17ஆம் திகதிகளில் முப்படையினர், பொலிஸ் திணைக்கள அதிகாரிகள், மாவட்டச் செயலக அதிகாரிகள் ஆகியோருக்கான தபால் மூல வாக்களிப்புக்கள் இடம்பெறவுள்ளன. (ப-18)




*கொரோனாத் தாக்கம்;*

## மருத்துவமனையை மூட அதிகாரிகள் நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 15

ராகமை பிரதேசத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் கொரோனா நோயாளி அடையாளம் காணப்பட்டமையை அடுத்து, அந்த மருத்துவமனையை தற்காலிகமாக மூட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அடையாளம் காணப்பட்டுள்ள கொரோனா நோயாளி அந்த மருத்துவமனையில் பணிப்புரியும் ஊழியர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மருத்துவமனைக்கு அருகில் உள்ள முச்சக்கரவண்டித் தரிப்பிடத்தில் இருக்கும் நபரிடம் இருந்து மருத்துவமனை ஊழியருக்கு கொரோனா தொற்றியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. கொரோனா நோயாளி அடையாளம் காணப்பட்டமையை அடுத்து மருத்துவமனை ஊழியர்கள் அனைவருக்கும் நேற்று பி.சி.ஆர். பரிசோதனை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ப)

**இரு நிதி நிறுவனங்களின்**

## வர்த்தக நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டது

சுவர்ணமஹறால் பினான்ஸ்சியல், சேர்விஸஸ் பிஎல்சி, நிறுவனங்களின் வர்த்தக நடவடிக்கை நாடுமுழுவதும் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில், வவுனியாவிலும் அந்த நிறுவனம் இழுத்து மூடப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் 2020 ஜூலை 10ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில், 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 31ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரமே இவ்வாறு சுவர்ணமஹறால் பினான்ஸ்சியல் சேர்விஸஸ் பிஎல்சி நிறுவனங்களின் வர்த்தக நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அந்த நிறுவனங்களின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. வவுனியாவிலும் நகரில் அமைந்துள்ள சுவர்ணமஹறால் பினான்ஸ்சியல் சேர்விஸஸ், பிஎல்சி நிறுவனங்களின் கட்டடங்களுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதுடன் அவற்றின் வர்த்தக நடவடிக்கை நேற்றுமுன்தினம் மாலை முதல் நிறுத்தப்பட்டுள்ளது. (ப-18)



## விவசாய சிகிச்சை முகாம்

வாழைச்சேனை விவசாய விரிவாக்கல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் விவசாயிகளுக்கான விவசாய சிகிச்சை முகாம் வாழைச்சேனைப் பிரதேச செயலகம் முன்பாக நேற்று நடைபெற்றது.

இதில் வாழைச்சேனை பிரதேச செயலக விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வாழைச்சேனை விவசாய விரிவாக்கல் திணைக்கள உத்தியோகத்தர்கள், உலக தரிசன நிறுவன உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது வாழைச்சேனை விவசாய விரிவாக்கல் திணைக்களத்தின் நிரந்தர பயிற்சி குழுவின் விவசாய போதனாசிரியர்களான எம்.ஜமால்டீன், கே.நிசாந்தன், எஸ்.ஸ்ரீகண்ணன் ஆகியோரால் விவசாய சிகிச்சை முகாமில் கலந்துகொண்டவர்களுக்கு நோய்த்தாக்கம் பற்றி விளக்கமளிக்கப்பட்டது.

அத்துடன் தோட்ட விவசாயிகளின் விவசாயச் செய்கையில் ஏற்படும் நோய்த் தாக்கம், இலை மற்றும் காய்களில் பிடிக்கப்பட்டிருக்கும் பூச்சிகள் தொடர்பாக ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் நிரந்தர தீர்வு வழங்கும் வகையில் கருத்துக்கள் வழங்கப்பட்டன. (ஐ)

## இலங்கையில் இதுவரையில் 125,000 பி.சி.ஆர் சோதனை



கொழும்பு, ஜூலை 15

கொரோனா நோயாளிகளை அடையாளம் காண இலங்கையில் இதுவரையில் ஒரு லட்சத்து 25 ஆயிரத்துக்கும் அதிகமான பி.சி.ஆர் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் மாத்திரம் ஆயிரத்து 310 பி.சி.ஆர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கையில் ஒரே நாளில் அதிக எண்ணிக்கையிலான பி.சி.ஆர் சோதனைகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)




நோர்த் வே பமிலி மார்ட்டின் அனுசரணையில் அக்னி இளைஞர் கழகம் நடத்திய குருதிக்கொடை முகாம் கடந்த சனிக்கிழமை திருநெல்வேலிப் பகுதியில் இடம்பெற்றது. (ம)

## தாக்குதல் சம்பவங்களில் ஐவர் காயம்

பல்வேறு தாக்குதல் சம்பவங்களில் காயமடைந்த இரு பெண்கள் உட்பட ஐவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தென்மராட்சி பிரதேசத்தின் வெவ்வேறு இடங்களில் நேற்றுமுன்தினம் இரவு இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

தாக்குதல் சம்பவங்களில் பருத்தித்துறையைச் சேர்ந்த 25 வயது இளைஞன், சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த 23 வயது இளைஞன், மீசாலை கிழக்கைச் சேர்ந்த 40 வயது கோவில் பூசகர், நாவற்குழியைச் சேர்ந்த 35 வயது குடும்பப் பெண் மற்றும் 27 வயது குடும்பப் பெண் ஆகியோரே காயமடைந்தனர்.

கல்வயலைச் சேர்ந்த இளைஞன் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# மஹிந்த தேசப்பிரிய மீது ராஜபக்ஷகள் அழுத்தம்

## அநுரகுமார குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 15

**தேர்தல் பரப்புரைக் கூட்டங்கள் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் விதிமுறைகள் விதித்தபோது அவர் மீதும் ஆணைக்குழு மீதும் ராஜபக்ஷக்கள் அழுத்தங்களை பயன்படுத்தினார்கள் இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க.**

தேசிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ராஜபக்ஷக்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளே கொரோனா பற்றி மக்கள் மத்தியில் காணப்பட்ட அச்சம் இல்லாமல் போனமைக்கான காரணமாகும். நாடு முடக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் சாதாரண மக்கள் இறந்தால் நெருங்கிய உறவினர்கள் கூட சடலத்தை பார்க்க முடியாதவாறு 24 மணித்தியாலங்களில் இறுதிக்கிரியைகள் நடைபெற்றன. ஆனால் தொண்டமானுடைய சடலம் 5 நாள்கள் வைக்கப்பட்டிருந்தது. பல இடங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டது.

கந்தக்காடு மறுவாழ்வளிக்கும் நிலையத்திலிருந்த நபருக்கு எவ்வாறு தொற்று ஏற்பட்டது என்பது இன்னும் கண்டறியப்படவில்லை. ஆனால் அங்கு தொற்றுக்குள்ளான நபர் இனங்காணப்பட்ட பின்னர் 300க்கும் அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். மக்கள் மத்தியில் கொரோனா வைரஸ் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக ராஜபக்ஷக்கள் கூறியமையின் காரணமாகவே அதன் ஆபத்துப்பற்றி மக்கள் அச்சமற்று செயற்பட்டமைக்குக் காரணம்.

இது வரையில் இனங்காணப்பட்ட பரவலைவிட இது பெருமளவு பாதிப்பாகும். இந்த மத்திய நிலையத்திலிருந்து வெளியில் சென்ற பலர் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தியுள்ளனர். பொதுமக்களின் பாதுகாப்புத் தொடர்பில் தற்போது பெரும் அச்சம் தோன்றியுள்ளது - என்றார். (ம)

# எமது ஆட்சியில் பெண்களின் அபிவிருத்திக்கு முன்னுரிமை

## சஜித் பிரேமதாச தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 15

ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் பெண்களின் அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்று கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் 'மேன்மைமிகு பெண்மை' வளையத்தளம் தாமரைத்தடாகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

"செயலணி ஒன்றை அமைத்து பெண்களின் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்களின் முன்னேற்றத்துக்காக பல்வேறு வேலைத்திட்டங்களை செயற்படுத்த தீர்மானித்துள்ளோம்.

இதேவேளை போதைப்பொருள் கடத்தல் காரர்களுக்கு எனது ஆட்சியில் மரணத்தண்டனையைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். இந்தத் தீர்மானம் பாரதூரமானது

என்றாலும்,போதைப் பொருள் கடத்தலினால் பாதிக்கப்படும் எதிர்கால சந்ததியினரை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம்மிடம் இருப்பதினால் இதனை செயற்படுத்துவதை தவிர வேறு வழியில்லை என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும் சிறுவர்கள் மற்றும் பெண்களின் நலன்புரி , பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் போன்ற விடயங்கள் தொடர்பில் அக்கறை செலுத்தி, இந்த அனைத்து விடயங்கள் தொடர்பான வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்போம். பெண்களின் தொழில் வாய்ப்புகளை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படும்-என்றார். (ஐ)

# சலுகைகளுக்கு அடிபணிந்து 'டீல்' அரசியல் நடத்தமாட்டோம்

## அநுரகுமார விளக்கம்

கொழும்பு, ஜூலை 15

'ஐக்கிய தேசியக் கட்சியுடன் எமக்கு எவ்வித 'டீல்' அரசியலும் கிடையாது' என்று ஜே.வி.பியின் தலைவரும், தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட முதன்மை வேட்பாளருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது கருஜயசூரிய போட்டியிட்டிருந்தால் தமது வேட்பாளரை தேசிய மக்கள் சக்தி விலக்கிக்கொள்ளவிருந்தது என முன்வைக்க ப்படும் கருத்தை நான் முழுமையாக நிரா கரிக்கின்றேன். எமது அணியே முதலாவதாக மக்கள் மத்தியில் வேட்பாளரை அறிவித்தது. பின்வாங்குவதற்காக இருந்தால் எதற்காக அறிவிப்பு விடுக்க வேண்டும்?

அதேபோல் இரண்டாம் விருப்பு வாக்கு தொடர்பிலும் எம்மை தொடர்புபடுத்தி சிலர் கருத்து வெளியிட்டுவருகின்றனர். இரண்டாம் வாக்கை இவருக்கு வழங்குமாறு எவரின் பெயரையும் நாம் பரிந்துரைக்கவில்லை. கற்பனை அடிப்படையிலேயே இவ்வாறான கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியுடன் எமக்கு எவ்வித அரசியல் டீலும் கிடையாது. மக்களுக்காக கொள்கை அடிப்படையிலேயே அரசியல் நடத்திவருகின்றோம். மக்கள் பக்கம்நின்று தீர்மானங்களை எடுப்போமேதவிர சலுகைகளுக்காக ஒருபோதும் அடிபணிந்து முடிவுகளை எடுத்ததில்லை. இனி எடுக்கபோவதுமில்லை. நாம் உயிரைப் பணயம் வைத்து அரசியல் நடத்துகின்றோம். ஆனாலும் எமது பயணத்தைத் தடுப்பதற்கும், மக்கள் மத்தியில் தவறான கருத்தை பரப்புவதற்காகவுமே என்.ஜி.ஓ, டொலர் போன்ற கதைகள் எல்லாம் கூறப்பட்டு வருகின்றன. நாடாளுமன்றத்தில் நாம் பலமான சக்தியாகவேண்டும். அதற்கான ஆணையையே மக்களிடம் கேட்கின்றோம்' என்றார். (ம-44)

# இரண்டு கட்சிகளினது ஆதரவாளர்களிடையே கைகலப்பு!

கொழும்பு, ஜூலை 15

அக்கரப்பத்தனை பகுதியில் இரண்டு கட்சிகளின் ஆதரவாளர்களுக்கு இடையில் மோதல் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் அக்ரப்பத்தனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தமது வாகனத்தின் மீது மலையக மக்கள் முன்னணியின்; ஆதரவாளர்களே தாக்குதல் நடத்தினர் என்று நுவரெலிய மாவட்டத்தில் சுயேச்சை யாக போட்டியிடும் அனுஷா சந்திரசேகரன் குற்றம் சுமத்தியுள்ளார். எனினும், தமது ஆதரவாளர்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முறைப்பாடு பிரிவில் முறை யிட்டுள்ளதாகவும் மலையக மக்கள் முன்னணியினர் தெரிவித்தனர். (ம)

# கொரோனா தகவல்களை அரசு மூடிமறைக்கின்றது!

## குற்றஞ்சாட்டுகின்றார் கிரியெல்ல

கொழும்பு, ஜூலை 15

கொரோனா வைரஸ் தொடர்பான தரவுகளை அரசு மூடிமறைத்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட வேட்பாளர் லக்ஷ்ன் கிரியெல்ல குற்றம் சாட்டியுள்ளார்.




கண்டியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசு தேர்தலில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக கொரோனா வைரஸ் நிலைமை தொடர்பான உண்மையை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். ஜூலை 13, 14 முதல் 15ஆம் திகதி முன்னெடுக்க விருந்த பொதுத்தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளை நிறுத்தி வைப்பதாக பொதுமக்கள் முன்னணி அறிவித்துள்ளபோதும் இந்த முடிவின் பின்னணியில் உள்ள உண்மையை அவர்கள் சுட்டிக்காட்டவில்லை. எனவே பொதுத்தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளை நிறுத்தி யமைக்கான உண்மையான காரணத்தினை இந்த அரசு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். கொரோனா வைரஸ் தாக்கத்தின் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாக அரசின் ஒரு பகுதியினர் கூறியிருந்தாலும், அரசால் அறிவிக்கப்படும் தற்போதைய தரவு தொடர்பான உண்மைத் தன்மை தொடர்பாக கேள்வியெழுந்துள்ளது - என்றார். . (ம)

# விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பயங்கரவாதியல்லர்

## நளின் ஹேவகே தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 15

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஒரு பயங்கரவாதி என எந்த நீதிமன்றமும் குற்றம் சுமத்தவில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் தென் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் தேசிய மக்கள் சக்தியின் காலி வேட்பாளருமான நளின் ஹேவகே தெரிவித்தார்.

சிங்கள இணையத்தள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வேலுப்பிள்ளை பிரபாகரன் ஒரு பயங்கரவாதி என எந்த நீதி மன்றத்திலும் நிரூபிக்கப்ப டவில்லை. இதேவிதமாக ராஜபக் ஷவினர் திருடர்கள் இல்லை எனக் கூறுவார்கள் எனில், பிரபாகரனும் பயங்கரவதியல்ல - என்றார். (ம)

## மக்கள் ஒன்றுபட்டு வாக்களித்தால் இனப்பிரச்சினையைத் தீர்க்கலாம்

### சம்பூர் கூட்டத்தில் இரா.சம்பந்தன்

திருகோணமலை, ஜூலை 15

மக்கள் ஒருமித்து ஒற்றுமையாக நின்று ஓரணியில் தமது வாக்குப் பலத்தை நிரூபித்தால் எமது இனப்பிரச்சினைக்கும் தீர்வு காண முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

சம்பூரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

சம்பூர் காணிகள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மனையின் சகோதரருக்கு வழங்கப்பட்டு கொரிய நாட்டின் கம்பனி ஒன்றிற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டது. எனினும் எமது மக்களின் முழுமையான ஆதரவில் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வர்த்தமானியை இரத்துச் செய்தார். இதன் மூலம் இந்த சம்பூர் மண்ணை மீண்டும் இவ்வாறு மக்கள் ஒருமித்து ஒற்றுமையாக நின்று ஓரணியில் தமது வாக்குப் பலத்தை நிரூபித்தால் எமது இனப்பிரச்சினைக்கும் தீர்வு காண முடியும். இம்முறை இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வட, கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் 20 பேரை வெற்றிபெறச் செய்வதன் மூலம் நாம் பலமான ஒரு சக்தியாக நாடாளுமன்றத்தில் எமது மக்களின் உரிமையைப் பெற முடியும். அத்துடன் தடைபட்டுள்ள புதிய அரசியல் சாசனத்தையும் நிறைவேற்றி எமது உரிமையை அடைய முடியும். சிறிய கட்சிகளுக்கு உங்கள் வாக்குகளை அளிப்பதன் மூலம் அவர்களால் வெற்றி பெற முடியாது. அவ்வாறு அளிக்கப்படும் வாக்குகள் வீணாக, பயனற்றதாகவே போகும். இவ்வாறானவர்கள் அரசாங்கத்தால் திட்டமிட்டு எமது தமிழ் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்வதற்குக் களமிறக்கப்பட்டவர்கள் - என்றார். (ப)




## அரசுக்கு ஆதரவு என்ற கூட்டமைப்பின் அறிவிப்பு சாதாரண விடயமல்ல

### கஜேந்திரகுமார் தெரிவிப்பு

கொடிகாமம், ஜூலை 15

**கோத்தாபய ராஜபக்ஷவை எப்படியும் தோற்கடிக்க வேண்டும், அவர் ஆட்சிக்கு வந்தால் எங்களுடைய எதிர்காலத்துக்கு முற்றுப்புள்ளி என்று கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கூறினர் தமிழ்க் கூட்டமைப்பினர். ஆனால் அதே கூட்டமைப்பு, இன்று கோத்தாபய ராஜபக்ஷவுக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தயார் என்று அறிவித்திருக்கின்றது. இது சாதாரண விடயமல்ல. – இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருக்கின்றார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்கிறதென்றால் அந்த அரசாங்கத்தில் ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் ஆக்குவதைத் தவிர மற்ற எல்லாவற்றையும் செய்யலாம். மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருந்தால் நாட்டின் அரசமைப்பையே மாற்றலாம். இதற்காகத்தான் கோத்தாபய ராஜபக்ஷ மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கேட்கிறார். இன்று அவர் இன்னொரு விடயத்தைச் சொல்லியிருக்கிறார். மூன்றில் இரண்டு பெரும்பான்மை கொடுப்பது மட்டுமல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்தோடு சேர்ந்து அமைச்சுப் பதவிகளை பெறவும் தயார் எனக் கூறியுள்ளார்.

யார் என்ன சொன்னாலும் கேட்காதீர்கள் கோத்தாபய ராஜபக்ஷ தமிழ் இனத்தை அழிப்பவர், அவர் என்ன வாக்குறுதி கொடுத்தாலும் கேட்காதீர்கள் அவரைத் தோற்கடியுங்கள் அதுவே எங்கள் கடமை என்று கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சொன்னார்கள். இன்றைக்கு அந்த அரசாங்கத்தில் அமைச்சுப் பதவியை ஏற்கத் தயாராக இருக்கிறார்கள்.

இனப்பிரச்சினைக்கு நிலையான ஒரு தீர்வு கிடைக்கவேண்டும் என்று தமிழ் மக்கள் கடந்த பத்து வருடங்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்தார்கள். ஆனால் இதுவரை அரசியல் தீர்வு கிட்டவில்லை. நடந்த இனப்படுகொலைக்கு எங்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டும். சர்வதேச விசாரணையொன்று நடத்தப்பட வேண்டும். எமது இனத்தை அழித்தவர்கள் நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டு, அவர்களுக்குத் தண்டனை விதிக்கப்படவேண்டும் என்பதுதான் எமது எதிர்பார்ப்பு. ஏதோ ஒரு வழியில் எமக்குச் சாப்பாடுதேவை என்ற சிந்தனைக்குள் முடக்கி, இனப் படுகொலையாளிகளைக் காப்பாற்றுவது தான் அரசின் திட்டம். நீங்கள் எடுக்கப்போகும் முடிவு 5 வருடங்களுக்குத் தாக்கம் செலுத்தும் ஒரு முடிவு அல்ல. நீங்கள் எங்களைத் தவிர வேறு எந்த ஒரு தரப்பினருக்கு வாக்களித்தாலும் ஒற்றையாட்சியை ஏற்றுக் கொள்வதாகவே அது அமையும். அதேவேளை இனப் படுகொலைக்கான ஒரு நீதியான சர்வதேச விசாரணையை நாங்கள் கைவிடுவதாக அமையப் போகிறது. மக்கள் விளங்கிக் கொண்டு முடிவுகளை எடுக்க வேண்டும் - என்றார். (ப-159)

## வடக்கு மக்கள் சஜித்துக்கு ஆதரவு வழங்கவேண்டும்

### வேட்பாளர் ஸ்ரான்லி கேட்கிறார்

யாழ்ப்பாணம், ஜூலை 15

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு மக்கள் அமோக ஆதரவை வழங்கியிருந்தார்கள். அதேபோன்ற ஆதரவை இந்தத் தேர்தலிலும் அவர் தலைமையிலான கட்சிக்கு வழங்க வேண்டும் என்று அக்கட்சியில் யாழ், கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் ஸ்ரான்லி தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மக்கள் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகள் தேவைகளுக்கு ஒரு தீர்வை ஏற்படுத்தி அவர்களது வாழ்வை வளப்படுத்த வேண்டுமென்ற சிந்தனையின் அடிப்படையிலேயே இத் தேர்தலில் நாங்கள் களமிறங்கியிருக்கின்றோம். அதாவது யாழ் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள எமது மக்களுக்கு நன்மையளிக்கும் வகையில் சேவையாற்ற வேண்டுமென்பதே எமது ஒரே நோக்கமாக இருக்கிறது. எமது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியே சிறந்த தெரிவாக இருக்கும்.

சஜித் பிரேமதாச இன மத வாதியல்ல. பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பேச்சுக்கே அவரிடம் இடமிருக்கவில்லை. அனைவரும் ஒரே நாட்டவர், சமமானவர்கள் என்பதே அவரது நிலைப்பாடாக இருக்கின்றது. ஆகையால் அவரை நாங்கள் நம்புகின்றோம். அவ்வாறான நம்பிக்கையுடன் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எமது மக்கள் அவருக்கு ஆதரவை வழங்கியிருந்தனர். ஆனால் துரதிஷ்டவசமாக அவர் அத் தேர்தலில் தோல்வியடைந்திருந்தார். இவ்வாறான நிலைமையிலயே அவரைப் பிரதமராக்குவதற்கு தற்போது இன்னுமொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. ஆகவே இந்தச் சந்தர்ப்பத்தை வடக்கு மக்களும் நழுவ விடக் கூடாது - என்றார். (ப-20)

## ஊடகவியலாளரின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்தவேண்டும்

### சிவசக்தி ஆனந்தன் கூறுகிறார்

வவுனியா, ஜூலை 15

அரசு ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி சுதந்திரமாகச் செயற்பட ஆவன செய்ய வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த காலத்தில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்திருந்தனர், தமிழ் மக்களுக்கு அதிலும் போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய தேவை உள்ளது. அடுத்து போரால் இழந்து போன எங்கள் பிரதேசத்தை மீளக் கட்டியெழுப்ப நிதியுதவி தேவைப்படுகின்றது. கடந்த 30 வருடங்களாக தமிழ் மக்களுக்கு தீர்க்கப்படாமல் உள்ள அரசியல் ரீதியான பிரச்சினைகளும் தீர்க்கப்படவேண்டிய தேவை உள்ளது. இந்த முக்கிய பிரச்சினைகளுக்காகவே கடந்த 2009 ஆம் ஆண்டுக்குப் பிற்பாடு தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமது ஆதரவை வழங்கியிருந்தார்கள். ஆனால் மக்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டியவர்கள் நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டியவர்கள் அரசுக்கு விலைபோய், முண்டுகொடுத்த நிலைமைதான் தொடர்கிறது. இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணிக்கு மக்கள் ஆதரவு வழங்க வேண்டும். ஊடக சுதந்திரம் தொடர்ந்தும் மீறப்பட்டு வருகின்றது. அண்மையில் பொலிஸ் உத்தியோகத்தரால் ஊடகவியலாளர் ஒருவர் அச்சுறுத்தப்பட்டு அவருடைய புகைப்படக் கருவியும் பறிக்க முயற்சிக்கப்பட்டுள்ளது. எனவே அரசாங்கம் ஊடகவியலாளர்களையும் ஊடகங்களையும் சுதந்திரமாகச் செயற்பட அனுமதிக்க வேண்டும் என்பதுடன் அவர்களுக்கான பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டும். அதற்கான பொறுப்பு எம் அனைவருக்கும் உள்ளது - என்றார். (ப-110)

## இரு வேட்பாளர்கள் சஜித்துடன் இணைவு

பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வெற்றிக்கு ஆதரவைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் சுயேச்சை வேட்பாளர் ஒருவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னி தேர்தல் தொகுதியின் வேட்பாளர் ஒருவரும் இணைந்து கொண்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இவர்கள் இணைந்து கொண்டுள்ளனர் என கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார ஆகியோர் அறிவித்துள்ளனர். கொழும்பு மாவட்டத்தில் சுயேச்சை குழு இலக்கம் 4 இல் போட்டியிடும் ஜீவன் வீரசிங்க என்ற வேட்பாளர் மற்றும் அவரது ஆதரவாளர்களும் தாம் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படப் போகிறோம் என அறிவித்தனர்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னித் தேர்தல் தொகுதி வேட்பாளர் ஆரியரத்ன வித்தியவசிங்க, பிரதேச சபை உறுப்பினர் எச்.கே.எ. ரந்தணி ஆகியோரும் இணைந்து செயற்பட தீர்மானித்துள்ளனர் எனத் தெரிவித்திருந்தனர். (ஐ)

# கூட்டமைப்பின் வாக்குகளை சிதறடிக்கவே பல கட்சிகள்

## மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்கின்றார் தர்மலிங்கம் சித்தார்த்தன்

**யாழ்ப்பாணம், ஜூலை 15**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்குகளைச் சிதறடிக்கவே பல்வேறு கட்சிகள் வடக்கில் களமிறக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், இந்த விடயத்தில் மக்கள் மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழர் தாயகத்தின் பல்வேறு கட்சிகளும் பல சுயேச்சைக் குழுக்களும் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றன. அவை தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடிப்பதற்கே களமிறங்கியிருக்கின்றன. தமிழ் மக்களுக்காக செயற்பட்டு வருகின்ற கட்சியாக கூட்டமைப்பு இருக்கின்றது. அந்தக் கட்சி தொடர்ந்தும் மக்களுக்காகவே செயற்படும்.

ஆனால் எமது கட்சி மீது குற்றச்சாட்டுக்கள் விமர்சனங்களை முன்வைத்து அதனூடாக தமக்கான ஆதரவை பெறுவதற்கு பலரும் முயற்சிக்கின்றனர். ஆனால் மக்களின் ஆணையைப் பெற்ற கட்சியாக எமது கட்சியே இருக்கின்றது. இந்தத் தேர்தலிலும் எமது கட்சிக்கே மக்கள் தமது முழுமையான ஆதரவை வழங்குவார்கள்.

ஆகவே எம்மை மீண்டும் பலமான அமைப்பாக தெரிவு செய்து நாடாளுமன்றம் அனுப்புவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது. அதனைவிட வேறு பல கட்சிகள் போட்டியிட்டாலும் அவர்கள் பலமாக இருக்க முடியாது.

தனிப்பெரும் கட்சியாக கூட்டமைப்பே திகழும். ஆகையினால் மீண்டும் மீண்டும் அந்தக் கட்சிக்கே அனைத்து மக்களும் ஆதரவை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். அவ்வாறான முழுமையான ஆதரவை மக்கள் வழங்குவார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

ஆகையினால் நாங்கள் மீண்டும் மீண்டும் மக்களிடம் கேட்பது என்னவெனில் இங்கு பல கட்சிகள் இருந்தாலும் பலமான கட்சியாக இருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு இத் தேர்தலில் மீண்டும் ஏகோபித்த ஆதரவை வழங்கி தனிப் பெரும் கட்சியாக பலமான அமைப்பாக தெரிவுசெய்ய வேண்டும். ஆக, கூட்டமைப்பின் பலமே தமிழ் மக்களின் பலம் என்ற அடிப்படையில் மக்களின் ஆதரவு அமைய வேண்டும்-என்றார்.

(ம-20)

## நெருக்கடி தொடரவேண்டுமானால் அரசுக்கு ஆதரவாக வாக்களிக்கலாம்

*அரச ஊழியரை சாடினார் அஜித் பி பெரேரா*

கொழும்பு, ஜூலை 15
அரச உத்தியோகத்தர்கள் அரசுக்கு ஆதரவாக வாக்களித்தால் , அரச துறையினருக்கு நெருக்டியை தோற்றுவிக்கும் வகையில் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அவர்கள் இணக்கம் தெரிவிப்பதாக அமைந்து விடும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் அஜித் பி பெரேரா தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தபால்மூல வாக்களிப்பு நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் கொவிட் 19 வைரஸ் பரவலை காரணம் காட்டி அரசாங்கம் அரசசேவையாளர்களுக்கு பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது. அதற்கமைய விசேட கொடுப்பனவுகளையும் இடைநிறுத்தியுள்ளதுடன் ,அவர்களது ஊதியத்தை அறவிடவும் நடவடிக்கை எடுத்திருந்தது. இதே வேளை இராணுவத்தினருக்காக வழங்கப்பட்டு வந்த உணவுக் கொடுப்பனவுகளையும் இடைநிறுத்தியுள்ளது. இவ்வாறான நிலைமையில் அரச சேவையாளர்கள் அரசாங்கத்திற்கு ஆதரவாக வாக்களித்தால் , அவர்களுக்கு எதிரான அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு அவர்களே இணக்கம் தெரிவித்துள்ளதாகவே அர்த்தப்படுத்தப்படும். இந்த விடயம் தொடர்பில் நன்கு சிந்தித்துச் செயற்படவேண்டும். எமது ஆட்சிக்காலத்தில் அரச உத்தியோகத்தர்களின் பிரச்சினைகள் அனைத்திற்கும் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதுடன், அவர்களுக்கு எதிராக அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் அடக்குமுறைக்கும் தீர்வைப் பெற்றுக் கொடுப்போம் - என்றார்.

(ப)

## தமிழரின் தனித்துவத்தைப் பறிப்பதற்கே வன்னியில் பலர் களமிறக்கப்பட்டுள்ளனர்!

*சாள்ஸ் நிர்மலநாதன் குற்றச்சாட்டு*

மன்னார், ஜூலை 15
தமிழர்களின் தனித்துவத்தை இழக்கச் செய்யவே வன்னித் தேர்தல் தொகுதியில் பலர் களம் இறக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சாள்ஸ் நிர்மலநாதன். மன்னாரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவித்தார் சாள்ஸ் நிர்மலநாதன். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கை கைப்பற்றியவர்கள் இப்பொழுது வன்னியைக் குறிவைத்துள்ளனர். வன்னி மாவட்டத்திலுள்ள தமிழ் கிராமங்களை நிர்வாக ரீதியாக தமிழர்கள் அல்லாதவர்கள் ஆட்சி புரிந்தார்கள். 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் இங்கிருந்த அமைச்சர் ஒருவரிடம் சென்றால்தான் காரியம் நடக்கும் என்றநிலை இருந்தது. மன்னார் இலங்கை போக்குவரத்து சபை சாலையில் தமிழர் அல்லாத ஒருவரே 17 வருடங்களாக முகாமையாளராக இருந்து வந்தார்.

1991ஆம் ஆண்டிலிருந்து மன்னார் கல்வி வலயத்தைச் சார்ந்த பாடசாலைகள் புத்தளம் பகுதியில் இயங்கி வந்துள்ளன. நான் மூன்று வருடங்களாக முயற்சி செய்தேன். ஒன்று இப் பாடசாலைகள் வட மத்திய மாகாணத்துடன் இணைய வேண்டும் அல்லது அப் பாடசாலைகள் மன்னார் மாவட்டத்துக்கு வர வேண்டும் எனக் கோரிவந்தேன்.

ஆனால் இங்கிருந்த அமைச்சர் அங்குள்ள மக்களுக்கு இங்கு இருக்க காணிகள் இல்லை. இருப்பதற்கு வீடுகள் இல்லை என்று தெரிவித்து எனது முயற்சியை மழுங்கடித்து வந்தார். அதற்கு நான் கூறிய பதில் எங்கள் மக்கள் மெனிக் பாமில் இருந்தார்கள். எங்கள் மக்கள் இங்கு காணி இல்லை வீடு இல்லையென்று மெனிக் பாமுக்கு திரும்பிப் போகவில்லை. இவர்கள் மெனிக் பாமிலிருந்து இங்கு திரும்பி வரும்போது காணி வீடு இல்லாதபோதும் தங்கள் உறவினர் நண்பர்கள் வீடுகளில் வசித்து வந்தனர். ஆனால் மூன்று வருடங்களின் பின் நான் இதில் வெற்றியைக் கண்டுள்ளேன்.

கிழக்கு மாகாணம் தமிழர்களின் பிரதேசம். இன்று அங்கு தமிழர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக வரமுடியுமா என்ற நிலைதான் இருக்கின்றது. வன்னியிலும் அவ்வாறான நிலையை ஏற்படுத்த முனைகின்றார்கள். இடம்கொடாதீர்கள் - என்றார்.

(ம)

## எனக்கு எதிராகப் பொய்ப் பரப்புரை

*மைத்திரி ஆதங்கம்*

பொலனறுவை மாவட்டத்துக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க மாற்றத்தை ஏற்படுத்திக்கொடுத்த எனக்கு எதிராகச் சிலர் பொய்ப் பரப்புரைகளை முன்னெடுத்துள்ளனர் என்று தெரிவித்தார் மைத்திரிபால சிறிசேன.

பொலனறுவையில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவித்ததாவது: ஒட்டுமொத்தப் பொலனறுவையிலும் என்னால் புதிய வரலாறு எழுதப்பட்டது. பொலனறுவை மாவட்ட மக்களில் பெரும்பாலானவர்கள் எனது பெறுமதியை உணர்ந்துள்ளனர்.




ஆனால் சிலர் மக்களை எனக்கு எதிராகத் திசைதிருப்பி வருகின்றனர். அவ்வாறானவர்களிடம் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் - என்றார்.

(ம)

## அமெரிக்க் அதிபர் ட்ரம்புடன் விரும்பும் நேரம் கதைப்பேன்

*இப்படிச் சொல்கிறார் மைத்திரி*

கொழும்பு, ஜூலை 15
அமெரிக்கா, சீனா, இந்தியா உள்ளிட்ட பல நாடுகளின் அதிபர்களை விரும்பிய நேரத்தில் என்னால் தொடர்புகொள்ள முடியும் என்று தெரிவித்தார் மைத்திரிபால சிறிசேன.

பொலனறுவையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: நான் ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் அமெரிக்கா, இந்தியா, சீனா உட்பட பல நாடுகளின் அதிபர்களுடன் நல்லுறவைப் பேணினேன். தற்போதும் அவர்களுடன் நல்லுறவில் உள்ளேன். விரும்பும் நேரத்தில் அந்த நாடுகளின் தலைவர்களுடன் என்னால் தொடர்புகொள்ள முடியும். அந்தளவுக்கு உறவு வலுவாக உள்ளது. இப்படியான நபரின் பெறுமதியை பொலனறுவையைச் சேர்ந்த சிலர் மறந்து போயுள்ளனர் என்றார்.

(ம)

## கிழக்கையும் தேசியத்தையும் காப்பாற்றுவதற்கு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணிக்கு வாக்கிடுக

மட்டக்களப்பு, ஜூலை 15
கிழக்கு மண்ணும் தமிழ் தேசியமும் சிங்கள பேரினவாதிகளின் பிடியில் இருந்து விடுபட வேண்டுமானால் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியை ஆதரித்து வாக்களியுங்கள் இவ்வாறு தெரிவித்தார் அந்தக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் சுவீகரன் நிஷாந்தன்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
இம்முறை நடைபெறவிருக்கும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் மட்டக்களப்பு மக்களாகிய நீங்கள் உங்கள் ஆதரவினை தமிழ் மக்கள் தேசியக் கூட்டணிக்கு வழங்குவதே தார்மீகக் கடமையாகும்.

தமிழ் இனத்திற்கு நேர்மையும் துணிவும் கொண்ட தலைமை இன்றைய நிலையில் கட்டாயமாகத் தேவை என்பதை உணர்ந்தே தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி அமைக்கப்பட்டிருக்கின்றது. தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் என்றும் தமிழ் தேசியத்தின் பாதையில் இருந்து தடம் மாறாத 5 தமிழ்க் கட்சிகள் இணைந்து ஓர் அணியாக நிற்கின்றதை நீங்கள் அறிவீர்கள்.

தமிழ் தேசியத்தின் சுதந்திரத்தையும் தமிழர் தாயகத்தின் சுயாட்சியையும் ஜனநாயக வழியில் அரசியல் போராட்டத்தின் ஊடாக வென்றெடுத்து நிலைநாட்டிட தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி தமிழ் மக்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றது - என்றார்.

(ம-26)

## மாற்றத்தை விரும்பினால் தங்களுடன் இணையட்டாம்

### ஈ.பி.டி.பி. அழைப்பு

வவுனியா, ஜூலை 15

மாற்றத்தை எதிர்பார்க்கும் இளைஞர் யுவதிகளை தங்களுடன் இணைந்துகொள்ளுமாறு ஈ.பி.டி.பி கட்சி அழைப்பு விடுத்துள்ளது. அந்தக் கட்சியின் வன்னித் தேர்தல் மாவட்ட வேட்பாளரும், முன்னாள் சுகாதாரப் பரிசோதகருமான சி.கிரிதரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இத்தனை வருடமும் பல எதிர்பார்ப்புகளுடன் நாம் இருந்தோம். எனினும் மக்களது தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் பூர்த்தி செய்யப்படவில்லை. எனவே மற்றவர்களை எதிர்பார்க்காமல் நாங்களே எமது தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ளும் நோக்குடன் இத்தேர்தலில் களம் இறங்கியுள்ளேன். எமது மக்கள் நீண்ட போரினால் பாதிக்கப்பட்டநிலையில் பல்வேறு துன்பங்களை சுமந்தவர்களாக உள்ளனர். எனவே அவர்களுக்கு அபிவிருத்தி என்பது முக்கியமானதாக உள்ளது. அரசுடன் இணைந்து மக்களின் தேவைகளை பூர்த்திசெய்யவேண்டிய சூழ்நிலையில் நாம் இருக்கின்றோம். கூட்டமைப்புக்கு பல வருடங்களாக எமது மக்கள் வாக்களித்து வருகின்றனர். எனினும் ஏமாற்றங்களே மிஞ்சியுள்ளன. எனவே மாற்றத்தை எதிர்பார்க்கும் இளைஞர் யுவதிகள் எம்முடன் இணைந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம் - என்றார். (ப-110)

# தமிழ்க் கூட்டமைப்பின் ஓர் அங்கமாக போராளிகளும் இணையவேண்டும்

## அழைப்பு விடுக்கிறது ரெலோ

**மன்னார், ஜூலை 15**

**தேசத்துக்காகவும், மக்களுக்காகவும், மண்ணுக்காகவும் விடுதலைப் போராட்டத்தில் அர்ப்பணித்த போராளிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஓர் அங்கமாக ஜனநாயக நீரோட்டத்தில் கலந்துகொள்ளுகின்ற ஒரு முறைமையை மேற்கொள்ளுவதற்காக தமிழீழ விடுதலை இயக்கம் முதற்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது.**

இந்தத் தகவலை அந்தக் கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

எங்களுடைய தேசத்துக்காக, எங்களுடைய மக்களுக்காக , மண்ணுக்காக விடுதலைப் போராட்டத்தில் அர்ப்பணித்த போராளிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஓர் அங்கமாக ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து கொள்ளுகின்ற ஒரு முறைமையை மேற்கொள்ளுவதற்காக முயற்சித்துள்ளோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நெறிப்படுத்தி எங்களுடைய இனத்தின் சார்பாக உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேறு திசையில் செல்லாமல் இருப்பதற்கு ஆயுதம் ஏந்திய போராளிகள் ஜனநாயக நீரோட்டத்திற்கு வர வேண்டும்.

அந்த வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இந்தப் போராளிக் கட்சிகள் பலம்சேர்க்கவேண்டும். கூட்டமைப்பின் ஓர் அங்கமாகவும் பங்குதாரர்களாகவும் வர வேண்டும் என்பது எங்களுடைய நோக்கம். விடுதலைப் புலிகளின் போராளிகள் 3 அல்லது 4 அமைப்புகளாக இருக்கிறார்கள். தேசியத்தோடு இன உணர்வோடு இருக்கின்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்புக்களைத் தனித்துவத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போராட்ட இயக்கங்கள் என்கின்ற அடிப்படையில் நாங்கள் ஒற்றுமையான ஒரு நிர்வாக கட்டமைப்புடன் கொண்ட அமைப்பாகச் செயல்பட வேண்டும் என்ற அடிப்படையில் நாங்கள் அந்த முயற்சியை மேற்கொண்டு வருகிறோம்.

அடுத்த வாரம் நாங்கள் எல்லாரும் சேர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்குதாரர்களாக விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்ட இயக்கங்களை இணைக்கின்ற ஒரு முயற்சியை மேற்கொள்ளுகின்றோம். விடுதலைக்காக போராடிய, ஆயுதமேந்திய தேசியத்தோடு, இன விடுதலைக்காக நிற்கின்ற எல்லாரும் எங்களுடைய மண்ணுக்காக குரல் கொடுக்க, மண்ணுக்காக உயிரைத் தியாகம் செய்ய முன்வந்தவர்கள். எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பங்குதாரராக இருப்பதற்கு அவர்களுக்கு உரித்து இருக்கின்றது. அதற்கான வழியை ஏற்படுத்துவதற்கு தமிழீழ விடுதலை இயக்கம் முயற்சி செய்து கொண்டிருக்கிறது - என்றார். (ப-56)

## பட்டதாரிகள் குழுவும் தேர்தலில் குதித்துள்ளதாம்

### பட்டதாரிகள் சங்க தலைவர் அறிவிப்பு

வவுனியா, ஜூலை 15

வன்னி மாவட்ட பட்டதாரிகள் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியும் வடக்கு மாகாணப் பட்டதாரிகள் மனிதவள அபிவிருத்தி நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியும் வன்னியின் தேர்தல் வரலாற்றில் முதன் முறையாக பட்டதாரிகள் குழு ஒன்று களமிறக்கப்பட்டுள்ளது என்று வன்னி மாவட்ட பட்டதாரிகள் சங்கத்தலைவரும் தேசிய ஜனநாயக மக்கள் முன்னணியின் செயலாளருமான ம.ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

எமது கல்விச்சமூகத்தினூடாக இந்தச் சமூகத்திற்கு ஒரு முன்மாதிரியான செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக இத் தேர்தலிலே நாங்கள் களமிறங்கியுள்ளோம் . இத் தேர்தலில் எங்களுக்கு உயர் கல்விச் சமூகத்தின் ஆதரவும் ஏனைய கல்விச்சமூகத்தின் ஆதரவும் கணிசமானளவு கிடைத்துக் கொண்டிருக்கின்றது.

எமது கிராமங்களுடைய அபிவிருத்தி எமது மக்களுடைய தேவைகள், பிரச்சினைகள் அனைத்தும் உயர் கல்விச்சமூகத்தினூடாக எங்களுடைய வழிகாட்டுதலிலே நிறைவு செய்யப்படும் என்ற ஒரு உத்தரவாதத்தை வன்னி மாவட்டத்திலுள்ள கல்விச் சமூகத்தினருக்கு தெரிவிக்க விளைகின்றோம் . எதிர்வரும் மாதம் ஐந்தாம் திகதி அனைத்து மக்களும் எங்களுக்கான இச்சந்தர்ப்பத்தை தந்து உதவவேண்டும் - என்றார். (ப-110)

## ராஜபக்ஷ என்கின்ற வைரஸிடம் மக்களை பலிகொடுக்க முடியாது

### விஜித் விஜயமுனி சொய்சா கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 15

கொரோனா வைரஸ் தொற்றியவர் கொரோனா ஏற்பட்டு சாவடைந்தார் என்றாலும் ஒட்டு மொத்த மக்களையும் ராஜபக் ஷ என்ற மிகப் பெரிய வைரஸிடம் பலிகொடுக்க எங்களால் முடியாது. சுகாதாரப் பாதுகாப்புடன் பிரசாரக் கூட்டங்களை நடத்துவோம் என ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் கம்பஹா மாவட்ட வேட்பாளர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

அரசாங்கத்தின் மக்கள் விரோதச் செயல்களுக்கு எதிராக எங்களது மூச்சு உள்ளவரை நாங்கள் எங்களது வாய்களை மூடாது அதற்கு எதிராகச் செயற்படுவோம். கொரோனா வைரஸை விட ராஜபக் ஷ வைரஸ் படுமோசமானது. ராஜபக்ஷ வைரஸைத் தோற்கடிப்பதே எமது தரப்பின் தேவையாக உள்ளது. கொரோனா வைரஸ் தொற்றியவர் கொரோனா ஏற்பட்டு சாவடைந்தார் என்றாலும் ஒட்டு மொத்த மக்களையும் ராஜபக் ஷ என்ற மிகப் பெரிய வைரஸிடம் பலிகொடுக்க எங்களால் முடியாது. உயிர் மூச்சு இருக்கும் வரை இந்த அரசாங்கத்திற்கு எதிராகச் செயற்படுவோம் தனிமைப்படுத்தல் சட்டத்தை பின்பற்றி நாங்கள் எங்களது கூட்டங்களை நடத்துவோம் - என்றார். (ப)




## பிரசாரங்களில் உருப்படியான கருத்துக்கள் முன்வைக்கப்படவில்லை

### முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 15

இலங்கையில் 2020ஆம் ஆண்டுக்கான நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரங்களில், போட்டியிடும் வேட்பாளர்களோ அரசியல் கட்சிகளோ பொருளாதார நிலைப்பாடுகள் பற்றி இதுவரை உருப்படியான கருத்துக்களைக் குறிப்பிடவில்லை என்று பேத்பைன்டர் மன்றத்தின் ஸ்தாபகரும் முன்னாள் அமைச்சருமான மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ள வேட்பாளர்கள் இதுவரை சாத்தியமற்ற மற்றும் நம்பமுடியாத பொருளாதார விடயங்களைப் பற்றிக் கூறி வருகின்றனர். இவை எந்த வகையிலான பொருளாதார அறிவையும் தரக்கூடியவை அல்ல. அதற்கு மாறாக நாட்டின் பொருளாதாரத்துக்குப் பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவை. இவ்வாறான பாதிப்பு எம்மைப் பெருமளவில் பின்னோக்கிக் கொண்டு செல்லக்கூடியவை. மட்டுப்படுத்தப்பட்ட உள்ளக சந்தையைக் கொண்டுள்ள எமது சிறிய பொருளாதாரம் உலக ரீதியில் எம்மைத் தனிமைப்படுத்தக் கூடிய ஆபத்தையும் இது கொண்டுள்ளது. அவ்வாறான நிலை ஏற்பட்டால் அதனை நாம் தாங்கிக் கொள்ள முடியாது என்றும் மிலிந்த மொறகொட மேலும் கூறியுள்ளார். கொவிட்19 நோய்த்தொற்றுக் காரணமாக உலக நாடுகள் சொல்ல முடியாத துயரங்களுக்கு ஆளாகி வரும் நிலையில் எமது நாட்டை கொவிட் -19 நோய்த் தாக்கத்தில் இருந்து பாதுகாத்திருப்பதை எவரும் மறுக்க முடியாது - என்றுள்ளது. (ப)

## பிரசன்ன ரணதுங்கவுக்கு எதிராக சு.க. வழக்கு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு அபகீர்த்தி ஏற்படுத்துவதாகத் தெரிவித்து, அமைச்சர் பிரசன்ன ரணதுங்க உள்ளிட்ட தரப்பினருக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு அந்தக் கட்சி தீர்மானித்துள்ளது.

கட்சித் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர், சிரேஷ்ட சட்டத்தரணி பந்துல வெல்லால இதனைத் தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் பேரில் இந்தத் தீர்மானம் மேற்கொண்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். கட்சித் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமாயின், அது தொடர்பாக அமைதி காக்க முடியாது. எனவே, குறித்த விடயம் தொடர்பாக சட்டத்தரணிகள் குழு ஆராய்ந்துள்ளதுடன், அமைச்சர் பிரசன்ன ரணதுங்க உள்ளிட்ட தரப்பினருக்கு எதிராக எதிர்காலத்தில் வழக்குத் தொடர்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளது என்று சட்டத்தரணி பந்துல வெல்லால தெரிவித்துள்ளார். (ப)

# இரத்மலானை தொழிற்பயிற்சி பல்கலைக்கு ரூ.927 மில்லியன் செலவில் கட்டடம்!

கொழும்பு, ஜூலை 15

இரத்மலானை தொழிற்பயிற்சி பல்கலைக் கழகத்திற்காக 927 மில்லியன் ரூபா செலவில் விடுதி, பணித் தொகுதி, உணவகம் உள்ளிட்ட ஆறு மாடிக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று உயர்கல்வி, தொழில்நுட்பம், தகவல் தொடர்பாடல் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த செயற்திட்டத்திற்காக 927.34 மில்லியன்ரூபா செலவிடத்திட்டமிடப்பட்டுள்ளது. வெவ்வேறாக மூன்று கட்டடத் தொகுதிகள் அமைப்பதற்கு 2017ஆம் ஆண்டு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. எனினும் மேற்படி கட்டடத் தொகுதி ஆற்றுக்கு அருகாமையில் உள்ள காணியில் தனித்தனி கட்டடங்களாக நிர்மாணிப்பதற்கு அதிகளவு நிதி செலவாகும் என்பதால் அந்தக் காணியை முழுமையாகப் பயன்படுத்தி அதிக பயன்தரும் வகையில் ஆறு மாடிக் கட்டடமாக மேற்படி கட்டடத்தை அமைப்பதற்கு கடந்த ஜூலை 8ஆம் திகதி கூடிய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# சுகாதார வழிமுறைகளை தவறாது கடைப்பிடிக்கவும்

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு



**கொழும்பு, ஜூலை 15**

**சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாதவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.**

அத்துடன், தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீண்டும் பின்பற்றுமாறு பொதுமக்களிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். கொரோனா வைரஸ் தொற்று கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனத்தால் அறிவிக்கப்படும் வரை சுகாதார வழிமுறைகளை பின்பற்றுதல் அவசியம்.

இதேவேளை, இதுவரை பொதுமக்கள் வழங்கிய ஒத்துழைப்புகளைத் தொடர்ந்தும் எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# தனிமைப்படுத்தலை நிறைவுசெய்த இருவருக்கு மீண்டும் கொரோனா

கொழும்பு, ஜூலை 15

கந்தகாடு தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தலை நிறைவு செய்த இராணுவத்தினர் இருவருக்கு மீண்டும் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அக்குரெஸ்ஸ பிரதேசத்தை சேர்ந்த இவர்கள் கந்தகாடு தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்து தனிமைப் படுத்தலை நிறைவு செய்த நிலையில் வீடு திரும்பியிருந்தனர்.

இந்நிலையில் அவர்களுக்கு மீண்டும் கொரோனாத் தொற்று ஏற்பட்டதையடுத்து கந்தகாடு தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு தற்போது அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என்று அக்குரெஸ்ஸ பொதுச் சுகாதார பரிசோதகர் ஜீ.ஏ.பிரேமரத்ன தெரிவித்தார்.

இதனையடுத்து அக்குரெஸ்ஸ நாவலஇ ஹேனேகம, பலபாதா பிரதேசங்களில் உள்ள இவர்களது குடும்பங்களைச் சேர்ந்த 8 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஜயவர்த்தனபுர பல்கலையின் அறிக்கையில் அரசால் மாற்றம்

## அநுர குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 15

கொரோனா தொடர்பில் ஸ்ரீஜயவர்த்தனபுரப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்படும் அறிக்கைகள் அரசால் மாற்றப்படுகின்றன என்று குற்றஞ்சாட்டியுள்ளார் அநுரகுமார திஸாநாயக்க.

கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைவோரின் எண்ணிக்கையை அதிகரித்து காட்டும் வகையில் ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் வெளியிடும் பரிசோதனை அறிக்கைகளை அரசு வேண்டுமென்றே மாற்றுகின்றது என்று தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை அடுத்தே அந்தப் பல்கலைக்கழகம் பரிசோதனை நடவடிக்கைகளில் இருந்து விலகி விட்டது - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# மதுபோதையில் சாரத்தியம் ஐவருக்கு ரூ. 125,000 தண்டம்

சாவகச்சேரி, ஜூலை 15

மது போதையில் வாகனங்களைச் செலுத்தினர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட ஐவருக்கு ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நீதிவான் மன்று இவ்வாறு தண்டம் விதித்தது.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மதுபோதையில். வாகனம் செலுத்திய ஐவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில், தலா 25 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரிப் பகுதியில் வீதிப் போக்குவரத்து கண்காணிப்புக்களில் ஈடுபட்டிருந்த பொலிஸாரால் மதுபோதையில் வாகனம் செலுத்தினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டு ஐவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணைகளில் வாகனங்களைச் செலுத்தியவர்கள் குற்றத்தை ஏற்றுக் கொண்டதையடுத்து அவர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ப-9)


# கடற்படைத் தளபதிக்கு கமால் குணரத்ன பாராட்டு

கொழும்பு, ஜூலை 15

இலங்கை கடற்படைத் தளபதி அட்மிரல் பியால் டி சில்வாவின் வலுவான தலைமைத்துவத்தின் கீழ் நாட்டின் கடற்பிராந்தியத்தில் இடம்பெற்ற போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைகளை முறியடிக்க முடிந்ததாக பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) கமால் குணரத்ன தெரிவித்தார்.

தனது சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்து வெளியேறிச் செல்லவுள்ள கடற்படைத் தளபதி அட்மிரல் டி சில்வாவுக்கு பாதுகாப்பு அமைச்சில் நேற்றுமுன்தினம நடைபெற்ற பிரியாவிடை நிகழ்வில உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் முதல் கடல்சார் கோட்பாட்டை உருவாக்குதல், சுழியோடல் தளங்களான காலி மற்றும்திருகோணமலையில் கடலுக்கடியில் அருங்காட்சியகங்கள் அமைத்தல் மற்றும் படகு கட்டும் தள வசதிகள், 20 மீற்றர் நீளமான ரோந்து படகுகள் உற்பத்தி போன்ற குறிப்பிடத்தக்க சாதனைகளை நோக்கி அட்மிரல் பியால் டி சில்வா கடற்படையை வழிநடத்தினார் என்று தெரிவித்த கமால் குணரத்ன "கொவிட் -19 தொற்றுநோயைக் கட்டுப்படுத்த அட்மிரல் டி சில்வா தலைமையிலான இலங்கைக் கடற்படை வழங்கிய பங்களிப்பையும் பாராட்டினார். (ஐ)




# தொற்று அதிகரித்தாலும் ஊரடங்கு அமுலாகாது

## அமைச்சர் பந்துல கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 15

இலங்கையில் திடீரென கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்துள்ள போதும் நாட்டில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட மாட்டாது.

சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் மாத்திரமே பலப்படுத்தப்படும் என்பதனால் பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கந்தகாடு மறுவாழ்வு நிலையத்தில் அடையாளம் காணப்பட்ட கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளின் மூலம் சமூகத் தொற்றுப் பரவ வாய்ப்பில்லை.

தேர்தலை இலக்காகக் கொண்டு சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைளை அரசாங்கம் தளர்த்தவில்லை.

கடந்த மூன்று மாத காலமாக நாடு தழுவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டாலும், சுகாதார அறிவுறுத்தல்கள் முறையாக பின்பற்றப்பட்டன.

தற்போதைய சூழ்நிலையில் ஊரடங்குச் சட்டம் மீண்டும் அமுல்படுத்தப்படமாட்டாது. அதற்கான தேவை தற்போது இல்லை.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை எதிர்கொள்ள சுகாதாரத் தரப்பினரும், பாதுகாப்புத் தரப்பினரும் தயாராகவே உள்ளனர்.

அரசாங்கம் முறையாக தொற்றைக் கட்டுப்படுத்தும் என்பதனால் மக்கள் அச்சமடையத் தேவையில்லை -என்றார். (ஐ)

# மத்திய மாகாணத்தில் 9 பேருக்கு கொரோனா

கொழும்பு,ஜூலை 15

கந்தகாடு புனர்வாழ்வு முகாமில் பணியாற்றிய நிலையில் விடுமுறைக்கு வீடு சென்று திரும்பிய மத்திய மாகாணத்தைச் சேர்ந்த 9 இராணுவச்சிப்பாய்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மத்திய மாகாண சுகாதாரப் பணிப்பாளர் அர்ஜூன திலகரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

மாத்தளை மாவட்டத்தில் 4 பேரும், கண்டி மாவட்டத்தில் 5 பேரும் தொற்றாளர்களாக இனம் காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து இவர்களுடன் நெருக்கமாகப் பழகிய 300 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# ஆயுதப்போரின் தொடர்ச்சியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் இப்படித் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 15

**ஆயுதப் போராட்டத்தின் தொடர்ச்சியான ஜனநாயக வடிவம்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அடிநுனி தெரியாமல் எம்மை விமர்சிப்பவர்கள் இதை உணர வேண்டும்'' இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் ஈஸ்வரபாதம் சரவணபவன்.**

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

போராட்ட வரலாறு தெரியாத பலர் இன்று எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசியத் தலைவர் பிரபாகரனின் பெயரை ஏலம் போட்டு விற்கின்றனர். சிலர் உரிமை கொண்டாடுகின்றனர். மறுபக்கம் சிலர் அவரால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழித்தே தீருவோம் என கங்கணம் கட்டிக்கொண்டு அலைகின்றனர். இது பகல் கனவு. இவர்களை நம்பி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகப் போடப்படும் ஒவ்வொரு வாக்கும் பேரினவாத ராஜபக்ச குடும்பத்துக்குப் போடும் வாக்காகவே அமையும். தமிழ்த் தேசியம், தமிழ்த் தேசியம் என்று கூறிக்கொண்டே சிங்களப் பேரினவாதிகளுக்கு முண்டு கொடுக்க முனைகின்றனர்.

அன்று முதல் இன்றும் என்றும் நம் மக்களின் உரிமைக்காக குரல் கொடுப்பதும் போராட்டங்களை நடத்துவதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்றுதான். நாம் மேடைகளில் மட்டும் வாய்ப்பந்தல் போடுபவர்கள் அல்லர். நமது தலைவர்கள் செய்த தியாகங்களை மக்கள் மறந்துவிடவில்லை. அதனால்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரிக்கின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எனக்கோ அல்லது தனிப்பட்ட ஒருவருக்கோ சொந்தமானது அல்ல. தியாக சிந்தையுடன் மக்களால் கட்டி எழுப்பப்பட்ட கட்சி. இது சுயநலவாதக் கும்பல்களால் சிதைந்துவிடக்கூடாது.

தமிழர் தாயகத்தைப் பாதுகாத்து எமது உரிமைகளை வென்றெடுக்கக்கூடிய ஒரே அமைப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்றுதான். உங்களின் பாதுகாவலனாக இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து உங்கள் வீட்டையும் எமது தமிழ் தேசத்தையும் பாதுகாக்க அணிதிரளுங்கள் என்றார். (ம)

## 19 ஆவது திருத்த சட்டத்தை பாதுகாப்போம்

### உறுதியளித்தார் சஜித்

கொழும்பு, ஜூலை 15

ஆட்சிக்கு வந்தால் நாட்டின் அரசமைப்புச் சட்டத்தின் 19 ஆவது திருத்தச் சட்டத்தை மேலும் வலுப்படுத்தி, பாதுகாக்கப்போவதாக ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'எனது தலைமையிலான அரசாங்கம் ஆட்சியமைத்தால், தற்போதைய ஜனாதிபதியுடன் அரச நிர்வாகத்தைமேற்கொள்வதில் எந்தச் சிக்கலும் ஏற்படாது எனவும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (ஐ)

## 124 கிலோ கஞ்சா கடத்தல்: இருவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,ஜூலை 15

124 கிலோகிராம் கஞ்சாவை கடத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரையும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டது.

சுழிபுரம் மேற்கு பகுதியில் சந்தேகநபர்கள் இருவரும் வட்டுக்கோட்டை பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். 'பீ' அறிக்கை மூலம் மல்லாகம் நீதிமன்றில் சந்தேகநபர்கள் முற்படுத்தப்பட்டனர்.

நீதிவான் இரு சந்தேகநபர்களையும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். அத்துடன் சான்றுப்பொருள் மாதிரியை அரச இரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பி அதன் அறிக்கையைச் சமர்ப்பிக்க வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு உத்தர விட்டார். (க-25)

### கொரோனா இரண்டாவது அலை

## பேருந்தில் தனியாள் இடைவெளியெனின் கட்டணங்கள் அதிகமாக அறவிடப்படும்

கொரோனா வைரஸ் மீண்டும் பரவ ஆரம்பித்துள்ள நிலையில் தனியார் பேருந்துகளில் தனியாள் இடைவெளியை திரும்பவும் கடைப்பிடிக்க அறிவித்தால் பேருந்துக் கட்டணம் அதிகரிக்கப்படும் என்று தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக பலர் பேருந்துப் பயணங்களைக் கைவிட்டு தமது தனிப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். இதனால் பேருந்துச் சேவையில் நட்டம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் கொரோனா இரண்டாவது அலையைக் காரணம்காட்டி பேருந்துகளில் தனியாள் இடைவெளியைக் கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தினால் தனியார் பேருந்துகளுக்கான போக்குவரத்துக் கட்டணங்களை அதிகப்படுத்துவோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)





மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயப் பங்கின் துணை ஆலயமாகிய தூய குழந்தை இயேசு ஆலயத் திருவிழாத் திருப்பலி நேற்று செவ்வாய்க்கிழமை சிறப்பாக நடைபெற்றது. திருவிழா திருப்பலி பள்ளிமுனை பங்குத்தந்தை அருட்பணி மரியதாசன் சீமான் அடிகளார் தலைமையில் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. (ஐ-56)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

சாவகச்சேரி ஜூலை 15

70 கிராம் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் சாவகச்சேரி மதுவரி நிலையத்தினரால் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு சாவகச்சேரி நகரப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கஞ்சா கடத்தப்படுவதாக மதுவரி நிலையத்துக்கு கிடைத்த தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது இவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டார்.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது இளைஞர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து எதிர்வரும் 29 ஆம் திகதி தண்டனை வழங்கப்படுமெனவும் அதுவரை பிணையில் செல்லுமாறும் நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது. (ஐ-9)

## கரவெட்டி மத்தியஸ்த சபை ஞாயிறு தொடக்கம் இயங்கும்

கொரோனா தொற்றுக் காரணமாக இயங்காதிருந்த கரவெட்டி மத்தியஸ்த சபை எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் இயங்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இங்கு நீதிமன்றத்தாலும்,பொலிஸ் நிலையத்தாலும் முன்வைக்கப்படும் பிணக்குகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

அத்துடன் அதிமுக்கியமான பிணக்குதாரர்கள் மாத்திரமே சமுகமளிக்கவேண்டும். பிணக்கில் பெயர் குறிப்பிடப்படாதவர்கள் மற்றும் சுகவீனத்துக்கான அறிகுறிகள் உள்ளவர்கள் வருகைதருவதை தவிர்த்துக்கொள்ளுமாறும் மத்தியஸ்த சபைத் தவிசாளர் சி. நற்குணலிங்கம் அறிவித்துள்ளார். (ஐ-35)

# பாடுபட்டவர்கள் பஞ்சத்தில், இடைத்தரகர்களோ இலட்சத்தில்!



வ. குமரதீபன்
சிரேஸ்ட விரிவுரையாளர்
சந்தைபடுத்தல் துறை
யாழ் பல்கலைகழகம்



எமது பிரதேசத்தில் சாதாரணமாக சிறு தோட்டம் செய்பவர்கள் மற்றும் விவசாயம் செய்பவர்கள் தமது உற்பத்தியான மரக்கறிப் பொருள்களை தமது வாடிக்கையாளர்களாகிய பொதுமக்களுக்கு நேரடியாக விற்பனை செய்வது மிகக் குறைவு. பொதுவாக அருகிலுள்ள பொதுச்சந்தைக்கு சென்று தங்களுடைய அன்றாட அறுவடையைப் பேரம் பேசி கொடுத்துவிட்டு வருவது மற்றும் கிடைக்கும் விலைக்கு கொடுத்துவிட்டு வருவதோ, அல்லது தம்மிடம் வரும் தரகர்களிடம் அல்லது சந்தை விற்பனையாளர்களிடம் பொருட்களை விற்பனை செய்வது தான் வழக்கம்.

வேளாண் செய்கையில் மிகப் பாடுபட்டு , அசாதாரண காலநிலைகளுகெல்லாம் பயந்து , கடைசியில் பெறுகின்ற அறுவடையை நுகர்வோருக்கு நேரடியாக விற்க முயற்சி எடுக்காமல் சந்தையில் மிகச் சிறிய இலாபப்புள்ளியில் விவசாயிகள் கொடுத்துவிட்டு வருவதற்கு முக்கிய காரணிகளில் ஒன்று, அது இலகுவான வழிமுறையாக இருப்பதே.

புள்ளிவிபரப்படி நோக்கினால் விவசாயிக்கு உற்பத்தி செலவாக ஒரு பொருளுக்கு 15 ரூபா செலவாகும் ,எனில் அதே பொருளை இடைத்தரகர்கள் அல்லது சந்தை விற்பனையாளர்கள் அந்தப்பொருளை 20 ரூபாவுக்கு விவசாய உற்பத்தியாளரிடம் கொள்வனவு செய்து, சந்தையில் அதே பொருளை 35 ரூபாவுக்கு விற்பனை செய்கின்றனர். ஆகவே உற்பத்தியாளனுக்கு 33 சத வீத இலாபம் மட்டுமே கிடைக்க, இடைத்தரகர்கள் அல்லது சந்தை விற்பனையாளர்களுக்கு 75 சத வீத இலாபம் கிடைக்கின்றது. மாறாக நட்டம் ஏற்படின் அதை முழுமையாகத் தாங்குவது விவசாயிகளே. இதனாலேயே அறுவடை செய்பவர்களை விட இடைத்தரகர்கள் மற்றும் வியாபாரிகள் அதிக நன்மையும் இலாபமும் பெறுகின்றனர்.

வயலில் முதலீட்டு, நீண்ட காலம் காத்திருந்து, விளைச்சலில் அதிக பாடுபட்டு, அசாதாரண காலநிலைகளில் பயந்து, இறுதியில் பெறுகின்ற அறுவடையில் சாதாரண இலாபம் பார்க்கும் விவசாயிகள் எங்கே? ஒரே நாளில் அசாதாரண இலாபம் பார்க்கும் இடைத்தரகர்களும் சந்தை விறுபனை யாளர்களும் எங்கே?

விளைச்சலில் பல நுட்பங்களை தெரிந்திருந்தும் விளை நிலங்களை உடைமையாகக் கொண்டிருந்தும் இரவு, பகல் பாராமல் விளைநிலங்களில் தமது நேரத்தையும், உடலுழைப்பையும் செலவழித்தும் அசாதாரண காலநிலைகளை (கடும் வறட்சி, கன மழை, வெள்ளம் மற்றும் புயல் காற்று) எதிர்கொண்டும் நட்டமேற்படின் உற்பத்தி முதலீட்டை இழப்பது மட்டுமில்லாமல் தற்கொலை முயற்சி வரை வறிய விவசாயிகள் செல்வதுண்டு.

இவ்வாறு நட்டமேற்பட்டால் தோட்டம்செய்பவர்கள் மேலும் மேலும் வறியவர்களாகிச் செல்கின்ற நிலை கவலைக்குரியதே. வெறுமனே வியாபார விற்பனை நுட்பங்களை மட்டுமே தெரிந்த இடைத்தரகர்களிடமும் மற்றும் சந்தையில் பொருட்களை வாங்கி விற்கும் வியாபாரிகளிடம் தினமும் விவசாயிகள் மண்டியிட்டு தோற்றுப்போகின்றனர்.

கைவசம் பணமே இல்லாத ஒருவர் கூட உடனடியாக வங்கிக் கடனைப் பெற்று ஒரேநாளில் வியாபாரியாக அல்லது இடைத்தரகராக ஆகலாம். ஆனால் விவசாயிக்கோ பயிரிட முதலில் நிலம் வேண்டும். விவசாய அறிவு வேண்டும். பாடுபட முயற்சி வேண்டும். காலநிலை மாற்றத்தை முகம் கொடுக்க தைரியம் வேண்டும். மீறி நட்டம் ஏற்பட்டால் அடுத்த போகம் வரை உயிர் வாழ நம்பிக்கை வேண்டும். தொடர்ந்து நட்டம் ஏற்பட்டால் அடுத்த போகத்திலும் பயிரிட முடியாத நிலை ஏற்பட்டு விவசாயத்தை நிறுத்துவது போன்ற அவல நிலை. அல்லது தற்கொலை செய்து கொள்ளுவது போன்ற பரிதாப நிலை.

ஆனால் இடைத்தரகர்களோ அல்லது சந்தை விற்பனையாளர்களோ நட்டம் ஏற்படின் விவசாயிகளைப் போல் பெரிதும் பாதிக்கப்படுவது இல்லை. பொதுவாக சந்தையில் பொருட்களை வாங்கி விற்கும் வியாபாரத்தில் பெரும் நட்டம் ஏற்படும் சந்தர்ப்பம் மிகக் குறைவு. அவ்வாறு பெரிய நட்டம் ஏற்பட்டால் வங்கியில் பெற்ற கடனை செலுத்தாமல், மீண்டும் பணம் வரும்வரை சிலர் டிமிக்கி கொடுப்பார்கள். அதைவிடவும் நிலைமை மோசமானால் தலைமறைவாகிவிடுவார்கள்.

ஆனால் விவசாயிகள் ஒரு போக விளைச்சலுக்காக தம்மிடம் உள்ள அனைத்து சொத்துக்களையும் வைப்புகளையும் முதலீடாக்குவர். நட்டம் என்றால் வங்கி கடன் தொல்லை. அவமானம் தாங்கமுடியாமல் தற்கொலை. ஏன் இந்த அவலமான பரிதாப நிலை. பாடுபட்டவர்கள் பஞ்சத்தில், இடைத்தரகர்களோ இலட்சத்தில். ஏன் இந்நிலைமை? இவற்றுக்கான காரணங்களை விவசாயிகள்அறியவோ அல்லது ஆராய்ந்து பார்க்கவோ முயற்சி எடுப்பதில்லை. எனினும் பல விவசாயிகளுக்கு தற்பொழுது நிலவி வரும் கொவிட் 19 எனும் இந்தக் கொடிய தொற்று நோயான கொரோனா அவ்வாறான ஒரு மிகச் சிறந்த சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தும், பலனில்லாது போயிருப்பது கவலைக்குரியதே.

2020 ஆண்டு மார்ச் நடுப்பகுதியிலிருந்து ஏப்ரல் மற்றும் மே மாத காலப் பகுதியில் கொரோனாவால் இலங்கை முழுதும் ஊரடங்கு மூலம் முடக்கப்பட்டிருந்தது. இந்த ஊரடங்கு காலத்தில் பொது மக்கள் ஒன்று கூடுவதைத் தவிர்க்கும் முகமாக சில்லறைக் கடைகள் மற்றும் பொதுச்சந்தைகள் மூடப்பட்டன. எனினும் பொது மக்களின் நலன் கருதி ஊரடங்கு காலத்திலும் வீடுவீடாக விவசாய ,மரக்கறி பொருட்களை விற்பதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருந்தது. அதனை எமது பிரதேச விவசாயிகள் முழுமையாகப் பயன்படுத்திகொள்ளவில்லை என்பது கவலைக்குரியதே. வெறுமனே ஒரு சில பிரதேச விவசாயி

வயலில் முதலீட்டு, நீண்ட காலம் காத்திருந்து, விளைச்சலில் அதிக பாடுபட்டு, அசாதாரண காலநிலைகளில் பயந்து, இறுதியில் பெறுகின்ற அறுவடையில் சாதாரன இலாபம் பார்க்கும் விவசாயிகள் எங்கே? ஒரே நாளில் அசாதாரண இலாபம் பார்க்கும் இடைத்தரகர்களும் சந்தை விறுபனையாளர்களும் எங்கே?



விவசாயிகள் ஒரு போக விளைச்சலுக்காக தம்மிடம் உள்ள அனைத்து சொத்துக்களையும் வைப்புகளையும் முதலீடாக்குவர். நட்டம் என்றால் வங்கி கடன் தொல்லை. அவமானம் தாங்கமுடியாமல் தற்கொலை. ஏன் இந்த அவலமான பரிதாப நிலை. பாடுபட்டவர்கள் பஞ்சத்தில், இடைத்தரகர்களோ இலட்சத்தில். ஏன் இந்நிலைமை?



(தொடர்ச்சி)

## பாடுபட்டவர்கள்...

கள் மட்டுமே அவ்வாறு வீடுவீடாக சென்று விற்றதைக் காணக் கூடியதாக இருந்தது.

நேரடியாக வாடிக்கையாளர்களை அணுகி தமது விளைபொருள்களை விற்க முயற்சி எடுத்திருந்தால் இதுவரை பெற்ற இலாபத்தை விட இரட்டிப்பு இலாபத்தை விவசாயிகள் பெற்றிருக்கலாம். வுாடிக்கையாளர்களுடன் நெருங்கிய உறவைப் பேணி பேணி இருக்கலாம். அந்த உறவுநிலை மூலம் கொரோனாகால ஊரடங்கு இல்லாத காலத்திலும் அந்த விற்பனையையும், இலாபத்தையும் தொடர்ந்திருக்கலாம். அவ்வாறு செய்யத் தவறியமைக்கு வாகன வசதி மற்றும் நிதிப் பற்றாக்குறை போன்ற காரணங்களும் அடங்கும். அதேவேளை சில விவசாயிகள் தத்தமது வீட்டு முன்றல்களில் வைத்து விவசாயப் பொருட்களை விற்பனை செய்திருந்தனர். ஆனால் அவை கூட பரவலாக இடம்ப்டெறவில்லை. மக்கள் ஒன்றுகூடுவதைத் தவிர்க்கும் முகமாக சில்லறை கடைகள் மற்றும் பொதுச்சந்தைகள் மூடப்பட்டு இருந்த நிலையில், இடைத்தரகர்களும் சந்தை விற்பனையாளர்களும் தம்மிடமிருந்த சிறிய வாகனங்களில் வீடுவீடாக விற்கும் முயற்சியை தொடர்ந்திருந்தனர். வாகன வசதி இல்லாத இடைத்தரகர்கள் மற்றும் சந்தை விற்பனையாளர்கள் வாடகைக்கு வாகன வசதிகளை ஏற்படுத்தி விவசாயிகளிடம் விவசாயப் பொருட்களைக் கொள்வனவு செய்து வீடுவீடாக விற்றனர்.

விவசாயிகள் இவ்வாறு பாதிக்கப்படுவதற்கு வேறு சில காரணங்களும் உள்ளன. அதாவது ஆபத்தை எதிர்கொள்ள முயலாமை, போதிய விற்பனை மற்றும் மேம்படுத்தல் விழிப்புணர்ச்சியின்மை, நுகர்வோருடன் நேரடித் தொடர்பு பேணாமை ,விளம்பரப்படுத்தல் அறிவின்மை, அதிக நேரம் காத்திருக்க முடியாமை என்பவற்றைக் குறிப்பிடலாம்.



**விவசாயிகள் தெரிந்து கொள்ள வேண்டிய இலகுவான வியாபார தந்திரோபாயங்கள்**

விளம்பரப்படுத்தல் மற்றும் விற்பனைத் தந்திரோபாயம் போன்ற வியாபார யுக்திகளை விவசாயிகளும் கையாள வேண்டும். இருப்பினும் நுகர்வோர் தொடர்பு முலம் அசாதாரண இலாபம் பெறலாம். நுகர்வோருடன் சுமுகமான உறவு நிலையைப் பேணுவதன் மூலம் சந்தையில் வெற்றி பெறலாம். தொடர்ச்சியான சுமுகமான உறவுநிலையைப் பேணுவதால் வாடிக்கையாளர்களைத் தக்கவைப்பது மட்டுமில்லாது வாடிக்கையாளர் தொகையையும் பன்மடங்காக்க முடியும். மேலும் புதிய பல வாடிக்கையாளர்களைப் பெற்று வியாபாரத்தை மேம்படுத்தலாம்.

**வாடிக்கையாளர் உறவு நிலை பேணும் இலகுவான படிமுறை**

உறவு நிலை உருவாக்கம் (Creation of Relationship): வாடிக்கையாளருடனான முதல் சந்திப்பில் வாடிக்கையாளர் தேவை அறிந்து செயற்பட வேண்டும். வாடிக்கையாளருடன் பரஸ்பர உறவை உருவாக்க வேண்டும். உறவு நிலை விருத்தி செய்தல் (Build Relationship): அடுத்துவரும் வாடிக்கையாளருடனான ஒவ்வொரு சந்திப்பிலும் ஏற்கனவே உருவாக்கப்பட்ட உறவை மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டும். சிறந்த சேவைகளை வழங்குதல். பூர்த்திசெய்ய கூடிய வாக்குறுதிகளை வழங்குதல். உறவு நிலை பேணுல். (Maintain Relationship): உறவு நிலையை தொடர்ச்சியாகப் பேணுதல். வாடிக்கையாளர் மற்றும் விற்பனையாளர் இருவரும் நன்மையடையும் பரஸ்பர உறவைப் பேணுதல். இத்தகைய வழிமுறைகளைக் கடைப்பிடித்தால் விவசாயிகள் சொந்தக் காலில் நின்று, தமது பொருளாதார பலத்தை உயர்த்துவதோடு விவசாயத்தையும் அழிய விடாது பேணமுடியும்.





யாழ்.–கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும்
**திருமதி சசிகலா ரவிராஜ்**
உதயனுக்கு அளித்த விஷேட செவ்வி இங்கு பிரசுரமாகின்றது.

நேர்கண்டவர் : இரா.புத்திரசிகாமணி

# “என்னை எவரும் தம் நிழலாக பயன்படுத்த அனுமதிக்கேன்!”

**கே: மாமனிதர் ரவிராஜின் மறைவுக்குப் பின்னர், ஒரு தசாப்தத்துக்குப் பின் அரசியலில் கால் பதித்திருப்பதன் நோக்கம் என்ன?**

ப: எனது கணவனின் எதிர் பாராத திடீர் மறைவு எங்களைப் பெரிதும் தாக்கத்துக்குள்ளாக்கி விட்டது. அவர் விட்டுச் சென்ற பல கடமைகளை குழந்தைகளின் கல்வி, எங்களின் பாதுகாப்புத் தொடர்பாக சுயமாகவே சமாளிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. எங்கள் மனதைத் திடப்படுத்திக் கொள்ளவும் நிலைமைகளைச் சீர்செய்யவும் எனக்கு நீண்ட அவகாசம் தேவைப்பட்டது. மாமனிதர் ரவிராஜின் மறைவுக்குப் பின் தென்மராட்சியில்ஏற்பட்ட வெற்றிடத்தைநிரப்புவதற்காகவே அரசியல் பிரவேசம் செய்துள்ளேன்.

**கே: இந்த அரசியல் பிரவேசத்தினூடாக எதனைச் சாதிக்கலாமென எண்ணுகிறீர்கள்?**

ப: பதில் எனது கணவர் தென்மராட்சியின் பிரதிநிதியாக நாடாளுமன்றம் சென்றார். அவருக்குக் கிடைத்த நிதியின் மூலம் தென்மராட்சியில் பெரியளவிலான அபிவிருத்திகளைச் செய்தார்.

பாடசாலைகள், பாதைகள், சனசமூக நிலையங்கள், நலன்புரித் திட்டங்கள், சுகாதார சேவைகள் அபிவிருத்தி என நல்ல பல திட்டங்களைச் செயற்படுத்தினார். ஆனால் அவருடைய மறைவுக்குப் பின்னர் இப்பிரதேசத்தின் நேரடியான ஒரு பிரதிநிதி இல்லை. இதனால் பிற நாடாளுமன்ற உறுப்பினர்களின் தயவை நாடவேண்டி உள்ளது. நான் தெரிவு செய்யப்பட்டால் எனது பிரதேச மக்களுக்கு நேரடியாகவே அபிவிருத்திகளைச் செய்ய முடியும். நிச்சயமாகச் செய்வேன்.

**கே: தென்மராட்சியில் நீண்டகால அரசியல் அனுபவத்தோடு,கடந்த காலத்தில் வீட்டு சின்னத்தில் போட்டியிட்டு பெருந்தொகையான வாக்குகளைப் பெற்றவர்கள் இம்முறை மாற்று அணியில் இறங்கியுள்ளார்கள். அவர்களுடன் நேரடியாக மோதவுள்ளீர்கள்.உங்களுடைய வெற்றிவாய்ப்பில் அவ்வாறான நிலை பாதிப்பை ஏற்படுத்துமா?**

ப: உங்களுடைய கேள்வியிலேயே பதிலும் இருக்கின்றது. அதாவது அவர்கள் பெற்ற வாக்குகள் வீட்டுசின்னத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தான் அளிக்கப்பட்டதே தவிர, தனி ஒரு மனிதருக்கல்ல. அவர் முன்பு பெற்ற வாக்குகளில் பாதி கூட இம்முறை கிடைக்காது. எந்த ஜாம்பவானாலும் வீட்டை அசைக்கக் கூட முடியாது. கூட்டமைப்பின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதில் எந்தவிதமான அச்சமோ சந்தேகமோ இல்லை.

**கே: உங்களுக்கு அரசியலில் முன் அனுபவம் ஏதும் இல்லை. இதனால் குறிப்பீட்ட சில வேட்பாளர்களுடன் மட்டும் ஒட்டி செயற்படுவதாகப் பரவலாக கூறப்படு கிறதே?**

ப: உண்மைஅப்படிஅல்ல. கூட்டமைப்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவருடனும் நட்புறவுடனே செயற்படுகின்றோம் வேண்டியவர் வேண்டாதவர் என்று எவரும் இல்லை. எனது கணவர் ரவிராஜுக்கு தென்மராட்சிப் பிரதேசத்தில் நல்ல பெயரும் செல்வாக்கும் உண்டு. இப்பொழுது நான் செல்லும் இடங்களில் எல்லாம் அவரது சேவைகளை மக்கள் பாராட்டுகின்றனர். கண்கலங்கி கண்ணீர்வடிக்கின்றனர். அவரைப் பாராட்டும் மக்கள் என்னையும் அவரது இடத்தில் வைத்தே பார்க்கின்றனர். அவரது பெயரும் செல்வாக்கும் இன்னும் மறையவும் இல்லை, குறையவும் இல்லை. இந்த செல்வாக்கை தம்பக்கம் திசை திருப்பிக்கொள்ள சிலர் என்னை நிழலாகப் பயன்படுத்த முனைகின்றனர்.ஆனால்நான் யார் பக்கமும் இல்லை.

**கே: பெண்தலைமைத்துவம் என்று கூறிக்கொண்டு களம் இறங்கிய பலர் மக்களால் ஓரம்கட்டடப்பட்டுள்ளனர். உங்கள் கட்சியிலும் பல குத்து வெட்டுகள் காணப்படுவதாக அறியமுடிகின்றது. ஒருபெண்ணாக தனித்து நின்று சமாளிக்க முடியுமா?**

ப: இரும்புப் பெண்மணி மார்க்கிரட் தாட்சர், இந்திராகந்தி, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க, சந்திரிகா பண்டார மட்டுமல்ல நமது பிரதேசத்தில் மாவட்ட அரசாங்க அதிபர்களாகவும் தலைசிறந்த நிர்வாக அதிகாரிகளாகவும் இருந்து பெயர்பெற்றவர்கள் பெண்கள்தான். நானும் பௌதீகவியல் பட்டதாரிதான் .தலைநகரில் பிரபல பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிய அனுபவமும் உண்டு. ஒரு பெண்தான் ஒரு வீட்டை ஒரு குடும்பத்தை சிறப்பாக நிர்வகிப்பவள். வீட்டை நிர்வகிப்பவர் ஏன் நாட்டின் நிர்வாகத்தில் பங்குகொள்ள முடியாது?திறமை, துணிவு,நேர்மை இருந்தால் எதையும் சமாளிக்க முடியும். எனவே ஆண் பெண் .என்று பேதம் பாராமல் நாம் கட்டி எழுப்ப வேண்டியது நமது தாய் வீடான தமிழ்த்தேசிய கூட்டமைப்பைத்தான். மக்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக நமது வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து எனது இலக்கமான மூன்றாம் இலக்கத்துக்கு புள்ளடியிட்டு வெற்றிபெறச் செய்ய வேண்டும்.

**எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி இடம்பெறவுள்ள நாட்டின் எட்டாவது நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்களம் நாளுக்கு நாள் சூடு பிடித்து கனன்று வரும் நிலையில்,நாட்டின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி நாட்டை நிர்வகிக்கும் அரசுகளை முன்னிலைப்படுத்தி அவைகளது நிர்வாகக் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டும் வகையிலான இக்கட்டுரை ஒட்டுமொத்த வாக்காளர்களையும் ஒரு கணம் சிந்திக்க வைக்கும் வகையிலானது.**



# எதிர்பார்த்தால் ஏமாற்றமே!

சிங்கள மூலம் -
எம்.எஸ்.எம்.அயூப்
தமிழில் - வீ.எஸ்.ரீ

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் தமது பதவிகளைப் பயன்படுத்தி பெரும் வருமானம் தேடிக்கொண்டனர் என அண்மைக் காலமாக நாட்டு மக்கள் மத்தியில் விமர்சனங்கள் நிலவி வருகின்றன. அவர்களது நியாயமற்ற செயற்பாடுகள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, அவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமெனவும் நாட்டு மக்களில் ஒரு சாரார் கருத்து வெளிப்படுத்தி வருகின்றனர். தாமும் ஆரோக்கியமான அரசியல் நாகரீகத்தை எதிர்பார்ப்பது போன்றே பொது மக்களது எதிர்பார்ப்பும் இவ்விதம் அமைவதாக கடந்த நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த குறிப்பிட்ட சில அரசியல் பிரமுகர்கள் தொலைக்காட்சி நேர்காணல் நிகழ்ச்சிகளில் கருத்து வெளியிட்டுள்ளதால் இந்த விடயம் தற்போது அரசியல் அரங்கில் பேசு பொருளொன்றாக ஆகியுள்ளது.

முக்கியத்துவம் மிக்க இந்தக் கருத்து தவறானதொன்று என இதுவரை எந்தவொரு அரசியல்வாதியும் மறுப்பு வெளியிட்டதாக ஞாபகம் இல்லை. இது எப்படியானாலும் கடந்த நாடாளுமன்றில் அங்கம் வகித்த 225 முன்னாள் உறுப்பினர்களில் 218 பேர் எதிர்வரும் ஓகஸ்ட் 5 ஆம் திகதி இடம் பெறவுள்ள பொதுத் தேர்தலில் மீண்டும் போட்டியிடவுள்ளனர்,

அல்லது அவர்கள் சார்ந்த அரசியல் கட்சிகளின் தேசியப்பட்டியலில் இடம்பிடித்துள்ளனர் என எதிர்வரும் பொதுத் தேர்தல் தொடர்பான அறிக்கையொன்று குறிப்பிட்டுள்ளது.

**விமர்சனங்களுக்கு உள்ளான பல முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் தேர்தல் களத்தில்**

கடந்த காலங்களில் மனிதக் கொலைகள், மணல் வியாபாரம் போதைப்பொருள் மற்றும் மதுபான வியாபாரம் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டவர்கள்கூட, இந்தப் பட்டியலில் உள்ளடங்குகின்றனர். மத்திய வங்கிப் பிணை முறி மோசடிச் சம்பவத்தை மூடி மறைத்து, குறித்த பாரதூரமான சம்பவத்தில் குற்றஞ் சாட்டப்பட்டோரைப் பாதுகாக்க முயன்றாக விமர்சிக்கப்பட்டவர்கள்கூட இந்தப் பட்டியலில் உள்ளடங்கியுள்ளனர்.

மத்திய வங்கிப் பிணை முறி மோசடிச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட அர்ஜூன் அலோசியஸ்ஸிடமிருந்து பணம் பெற்றுக்கொண்டதாக விமர்சிக்கப்பட்டவர்களில் பலர், எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பட்டியலில் உள்ளடங்குகின்றனர். அதேபோன்று 2018ஆம் ஆண்டு ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பான நாடாளுமன்ற விவாதங்களில் உலகமே வியந்து பார்த்துக்கொண்டிருந்த நிலையில் நாடாளுமன்றத்துக்குள் குழப்பம் விளைவித்து சபாநாயகரையே அவமானப்படுத்திய நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலரும் எதிர்வரும் பொதுத் தேர்தலிலும் போட்டியிடுவதோடு, அவர்களில் ஒரு சிலர் முன்னர் தாம் நாடாளுமன்றத்துள் நடந்து கொண்ட விதத்தை நியாயப்படுத்தித் தற்போது கருத்து வெளியிட்டு வருவதும் விசித்திரமே. ஆனால் நாடாளுமன்றத்தைக் குண்டு வைத்துத் தகர்க்க வேண்டுமென அன்று குரலெழுப்பிய தரப்பினரும் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றனர். ஆனால் பொது மக்களில் பலர், அந்தத் தரப்பினர் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாகத் தற்போது வாய் திறவாது மௌனம் காக்கின்றனர். அதுமட்டுமன்றி அந்தக் குழப்பக்கார வேட்பாளர்களுக்கு ஆதரவாகவும் பரப்புரை செய்து வருகின்றனர்.

எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் சிலவேளை இந்தத் தேர்தல் சூடு தணிவதற்கு முன்னரே, இதே பொதுமக்கள் "புதிதாகத் தெரிவான நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் திருடர்களே" எனக் கூறவும் கூடும். ஆயினும் அவர்களைத் தேர்ந்தெடுத்ததன் மூலம் தாமே அதற்குப் பொறுப்பானவர்கள் என அவர்கள் ஒரு போதும் கூறப்போவதில்லை.

**முன்னைய அரசியல் கலாசாரம் தொடரும் நிலைக்கே வாய்ப்பு அதிகம்**

ஜனாதிபதி கோத்தபாய, நாடாளுமன்றத்தைக் கடந்த மார்ச் 3ஆம் திகதியன்று கலைத்ததன் மூலம் பதவிகளை இழந்தவர்கள் மீண்டும் தெரிவாகும்போது நாட்டின் முன்னைய அரசியல் கலாசாரத்தில் மாற்றமொன்று ஏற்பட்டாகவேண்டும். அதற்கான அறிகுறியெதுவும் தென்படுவதாகத் தோன்றவில்லை. அண்மைய நாள்களாக தேர்தல் பரப்புரைகளின்போது அந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளியிடும் கருத்துக்களை அவதானிக்கும்போது அவர்கள் தமது போக்கை மாற்றிக்கொண்டதாகத் தெரியவில்லை. நாட்டு மக்கள் நாளாந்தம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து விளங்கிக்கொண்டு அவற்றுக்கான தீர்வு குறித்து தாம் என்ன செய்யவுள்ளனர் என்பது குறித்து நாட்டின் வாக்காளர்களுக்கு அவர்கள் தெளிவுபடுத்த வேண்டியது அவசியமாகும். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமன்றி, எதிர்வரும் தேர்தலில் புதிதாகப் போட்டியிடும் வேட்பாளர்கள் கூட இத்தகைய உறுதியான நிலைப்பாட்டை முன்வைக்காமல் நழுவல் போக்கில் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

அந்த வகையில் எதிரணியினர் மீது பலதரப்பட்ட குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அவர்களை விமர்சிப்பதன் மூலம் தம்மையும் தாம் சார்ந்த கட்சியையும் மக்கள் நலன் நாடும் தரப்பாக பொது மக்களுக்குக் காட்டிக்கொள்ளவே சகல கட்சியினரும் முயற்சித்து வருகின்றனர்.

அந்த வகையில் இன்று பொதுஜன முன்னணி தலைவர்களது முக்கிய இலக்கு ஐ.தே.கட்சியினுள் மென்மேலும் பிளவுகளை ஏற்படுத்தி அதனை நலிவுபடுத்துவதாகும். அது மட்டுமன்றி தமது முன்னணியில் இணைந்து போட்டியிடும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளர்கள் மீது வெளிப்படையாகவே விமர்சனங்களையும் முன்வைத்து வருகின்றனர்.

அதேபோன்று ஐ.தே.கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி தரப்பினர்களும் பதிலுக்கு பொதுஜன பெரமுன மற்றும் சுதந்திரக்கட்சி என்பவற்றுக்கு இடையேயான வெளிப்படையான மோதல் நிலையை விமர்சித்து மக்களது அரசியல் ஆதரவைத் தமது பக்கத்துக்கு பெற்றுக்கொள்ள முனைப்புக் காட்டி வருகின்றனர்.

**ஆளைஆள் குற்றம் சாட்டும் அசிங்கமான போக்கு**

கடந்த ஆண்டில் இடம்பெற்ற ஈஸ்டர் தின தாக்குதல் சம்பவத்தை கருப்பொருளாகக் கொண்டு இந்த நான்கு தரப்பினர்களும் ஒவ்வொரு தரப்பின் மீதும் மற்றைய தரப்பினர் குற்றசாட்டை முன்வைத்து வருகின்றனர்.

இன்றைய நாள்களில், இந்தத் தரப்புக்களது மற்றொரு தேர்தல் பரப்புரை மேடைப் பேச்சுக்களின் முக்கிய கருப்பொருளாக விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் தளபதி கருணா அம்மான் அண்மையில் தெரிவித்த "படையினர் பலரைத் தாம் போர்க்களத்தில் ஒரே நாளில் படுகொலை செய்ததான" செய்தி மாறியுள்ளது.

1989ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச விடுதலைப்புலிகள் அமைப்புக்கு ஆயுதங்கள் வழங்கியதாக பொதுஜன பெரமுனவின் ஒரு தரப்பினர் குற்றம்சாட்டும் அதேவேளை, 2005ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலில் வடபகுதி தமிழ் மக்கள் வாக்களிக்காமல் பகிஷ்கரிப்புச் செய்விப்பதற்காக விடுதலைப்புலிகள் அமைப்புக்கு பொதுஜன பெரமுனவின் சில அரசியல் தலைமைகள் பெருந்தொகைப் பணம் கையூட்டாக வழங்கியதாக மற்றைய தரப்பினர் பதிலுக்கு குற்றம்சுமத்திவருகின்றனர். அதே போன்று இறுதியுத்தத்தின்போது, விடுதலைப் புலிகள் அமைப்பை முற்று முழுதாகத் தோற்கடிக்க அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் தலைமைத்துவமே காரணமாக அமைந்ததாக பொதுஜன பெரமுன தரப்பினர் பெருமை பாராட்ட, ஐக்கிய மக்கள் சக்தி தரப்பினரோ, இறுதி யுத்தத்தின்போது அப்போதைய இராணுவத்தளபதியும் தற்போதைய தமது தரப்பு தேர்தல் வேட்பாளருமான சரத்பொன்சேகாவின் இராணுவ ரீதியிலான தலைமைத்துவமே விடுதலைப்புலிகள் அமைப்பு முற்றுமுழுதாகத் தோற்கடிக்கப்படக் காரணமெனப் பீற்றிக்கொள்கின்றனர்.

மேற்கூறிய கருத்துக்களில் சில உண்மையானவையாக இருக்கலாம்;சில பொய்யான தகவல்களாகவும் இருக்கக் கூடும். இவை குறித்த உண்மையைத் தெளிவுபடுத்திக்கொள்வது நாட்டுக்குப் பெறுமதி மிக்கதாக அமையும். ஆனால் பிரச்சினை என்னவெனில், இத்தகைய குற்றச்சாட்டுக்களை கேட்டுக் கேட்டு சலித்த பின்னரும் இத்தகையவர்களைப் பதவியில் அமர்த்துவதால், அவர்களிடம் அதிகாரத்தை வழங்குவதால் இந்த நாட்டு மக்களுக்கு என்ன நிவாரணம் கிட்டிவிடப்போகிறது என்பதே. நாட்டு மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, அவர்களது அன்றாட மற்றும் நாட்டின் தேசிய ரீதியிலான பிரச்சினைகளுக்கு இவர்கள் மூலம் தீர்வு கிட்டாது என்பதைத் தெரிந்துகொண்டு இவர்களிடம் அதிகாரத்தை வழங்குவதில் விளையப்போகும் நன்மைதான் என்ன?

அதற்காக நாட்டில் கடந்த காலத்தில் இடம்பெற்ற ஈஸ்டர் தினத்தாக்குதல் சம்பவம் போன்ற பாரதூரமான சம்பவங்கள் குறித்து பேசக் கூடாது என்பது அர்த்தமல்ல. ஆனால் இத்தகைய தவறான செயற்பாடுகள் குறித்து பேசி,நாட்டின் சிங்கள பெரும்பான்மை இனத்தவர்களது உணர்வுகளைத் தூண்டி, அதன் மூலம் சிங்கள வாக்குகளைத் தத்தமது தரப்புக்களுக்கு ஈட்டிக் கொள்ள, ஆதரவை அதிகரித்துக்கொள்ள ஏதேனும் ஒரு தரப்பினர் முயல்வார்களானால் எதிர்காலத்தில் அத்தகைய வேண்டாத, தவறான செயற்பாடுகள் இடம்பெறாமல் தவிர்த்துக்கொள்ள அது வழிவகுக்குமா என்ற கேள்வி பூதாகாரமாக எழுந்து முன்நிற்கிறது.

தேர்தல் பரப்புரைகள் மென்மேலும் சூடுபிடித்து வரும் இன்றைய நிலையில் நாட்டின் தேசிய வளங்களை வெளித்தரப்புக்களுக்கு விற்பனை செய்வது மற்றும் நீண்ட கால அடிப்படையில் குத்தகைக்கு விடுவது என்ற விடயம் கடந்த காலங்களில் நாட்டை நிர்வகித்த அரசியல் தரப்புக்களிடையே பெரும் கருத்து மோதல்களையும் கண்டனக் கணைகளையும் ஏற்படுத்தி வருகின்றது.

இதுநாட்டின் முக்கிய பிரச்சினையொன்றாக இருப்பினும், நாட்டு மக்களது அடிப்படைப் பிரச்சினைகளுக்கான தீர்வு குறித்து உரிய நடவடிக்கையெடுத்து, திட்டமிட்டுச் செயலாற்றி, நாட்டு மக்களது அன்றாட வாழ்வியல் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் வழங்கிச் செயற்படவேண்டியது அதிகாரத்தைக் கையேற்று நாட்டை ஆட்சி செய்ய நினைப்போரது முக்கிய கடமையாகிறது.

முன்னைய ஆட்சியாளர்கள் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை வகுத்து நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்தி, நாட்டு மக்களுக்கு சுபீட்சமான தன்னிறைவான வாழ்க்கைத் தரத்தை ஏற்படுத்தி வைப்பதாக வாக்குறுதி வழங்கி, மக்கள் ஆணையைப் பெற்று ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய போதிலும், அந்தத் தரப்புக்களது ஆட்சியில் குறிப்பிடத்தக்க மாற்றமெதுவும் நாட்டு மக்களது வாழ்க்கைத் தரத்தில் ஏற்பட்டதில்லை. தற்போது கூட நாட்டு மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் திட்டங்கள் எதனையும் அடையாளம் காட்டாது ஒரு தரப்பினர் மீது மற்றைய தரப்பினர் ஆளுக்கு ஆள் குற்றம்சுமத்திவரும் அரசியல் கலாசாரமே பின்பற்றப்பட்டு வருவதால் நாட்டு மக்கள் தமது எதிர்கால சுபீட்ச வாழ்க்கை குறித்து இவர்களிடம் பெரிதாக எதனையும் எதிர்பார்க்க இயலாது என்பதே இன்றைய யதார்த்த நிலை.

# 898 கடற்படையினர் குணமடைவு

கொழும்பு, ஜூலை 15

நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றுக்குள்ளாகி குணமடைந்த கடற்படையினரின் மொத்த எண்ணிக்கை 898 ஆக உயர்வடைந்துள்ளது. இந்த நிலையில், கொரோனா தொற்றுக்குள்ளான 906 கடற்படையினரில் 9 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன், நாட்டில் கொரோனாத் தொற்றால் மொத்தமாக 2,646 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களில் 1,981 பேர் குணமடைந் துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி2)

## பெறுகை அறிவித்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் - 2020

01. தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதிவாய்ந்த நிறுவனத்தினர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைகளுக்காக பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.
02. பெறுகையானது பொது நிதிச்சுற்றறிக்கை 04/2016(ii) இற்கமைவாக வடமாகாணத்தில் தகுதியுடைய வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான பதிவுள்ளவராகவும், கறுப்புப்பட்டியலில் பெயரிடப்படாததுமான கேள்வியாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
03. தேவையான தகைமைகள் பெறுகை ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
04. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் ஆங்கில மொழியில் மட்டும் உள்ள பெறுகை ஆவணங்களை கே.கே.எஸ்.வீதி சுன்னாகத்தில் அமைந்துள்ள வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் 16.07.2020 தொடக்கம் 29.07.2020 ஆம் திகதி வரை அலுவலக நாள்களில் மு.ப 9.00
05. மணிமுதல் 15.00 மணிவரையான மீளளிக்கப்படாத பணமாக ரூபா.3000/- (NBT,VATதவிர்ந்த) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். பெறுகை ஆவணங்களினை இருபிரதிகளில் தயாரித்து 30.07.2020ம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக்குழு, வலிகாமம் தெற்குபிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.
06. பெறுகை தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 24.07.2020 ஆம் திகதியன்று மு.ப 10.00மணிக்குநடைபெறும்
07. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | வேலைவிபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு ரூபா | கேள்விப் பிணை செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | Supply of visitor chair ,computer table &study desk, Executive Chair Low Back , steel table , display cupboard , Steel filling cupboard , steel cupboard, library cupboard | 0.97 | 1 மாதம் | தகுதி வாய்ந்த நிறுவனத்தினர் | 10000 | 14.10.2020 |
| 2 | Supply of high back chair (three types), conference table ,visitors chair (two types) ,low back chair ,kevin sofa, executive table | 0.64 | 1 மாதம் | | 6500 | 14.10.2020 |
| 3 | Supply of Dust bin | 0.645 | 1 மாதம் | | 6500 | 14.10.2020 |

க.தர்ஷன் - தவிசாளர்
பிரதேச சபை பெறுகைக்குழு
வலிகாமம் தெற்கு பிரதேச சபை. சுன்னாகம்.
021 224 0017 / 021 320 2277

# தாயின் அழுத்தத்தாலேயே பொய் முறைப்பாடு
## நீதிமன்றில் சிறுமி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 15

தாய் கொடுத்த அழுத்தங்கள் காரணமாகவே தனது தந்தை தன்னை வன்புணர்வுக்கு உட்படுத்தியதாக பொலிஸில் முறைப்பாடு செய்த சிறுமி தொடர்பான தகவல் அனுராதபுரம் மேல்நீதிமன்றத்தில் நடந்த விசாரணையின்போது வெளிவந்துள்ளது.

தனது மகளை வன்புணர்வுக்கு உட்படுத்தியதாக குற்றம் சுமத்தி, சிறுமியின் தந்தைக்கு எதிராக சட்டமா அதிபர் அனுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. தனது தந்தை தன்னை வன்புணர்வுக்கு உட்படுத்தவில்லை எனவும் தனது தாய் கொடுத்த அழுத்தங்கள் காரணமாகவே தான் பொய்யான முறைப்பாடு செய்ததாகவும் குறித்த சிறுமி அனுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி சுமுது பிரேமச்சந்திர முன்னிலையில் தெரிவித்தார்.

இதனை கவனத்தில் எடுத்துக்கொண்ட நீதிபதி குற்றம் சுமத்தப்பட்டிருந்த சிறுமியின் தந்தையை வழக்கில் இருந்து விடுதலை செய்து உத்தரவிட்டுள்ளார். கடந்த 2016ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கும் 10ம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில், கெக்கிராவை கனேவல்பொல பிரதேசத்தில் தனது மகளை வன்புணர்வுக்கு உட்படுத்தியதாக தந்தையொருவர் குற்றம் சுமத்தி, சட்டமா அதிபர் இலங்கை குற்றவியல் தண்டனைச் சட்டத்தின் கீழ் அனுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார். குறித்த வழக்கின் சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டத்தரணி கிறிஸ்சாந்த டி அல்விஸ் ஆஜராகி இருந்ததுடன் குற்றம் சுமத்தப்பட்டவரின் சார்பில் சட்டத்தரணி கயான் சிறிவர்தன ஆஜராகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி3)




# ஆதார வைத்தியசாலை பருத்தித்துறையின்
# நன்கொடையாளர் தினம் 15.07.2020

துரித அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் எமது பிரதேசத்தின் கழகங்கள், சனசமூக நிலையங்கள், நிறுவனங்கள் மற்றும் நலன்விரும்பிகள் தாமாகவே முன்வந்து தம்மால் சேகரிக்கப்பட்ட நிதியுதவியினை அன்றைய தினம் வழங்குவார்கள்.

இடம்: ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை
காலம்: 15.07.2020, மாலை 3.00 மணி


நேரடியாக வருகைதர முடியாதவர்கள் எமது வங்கிக் கணக்கான கொமர்ஷல் வங்கி, நெல்லியடிக் கிளையின் 8007648515 இல் வைப்பிடலாம்

அன்றைய தினம் நன்கொடையாளர்கள் கௌரவிக்கப்படுவார்கள்

மேலதிக தொடர்புகளுக்கு:
முகாமைத்துவ நிறைவேற்றுக் குழு, ஆதாரவைத்தியசாலை, பருத்தித்துறை.
021 226 3262, 0773754368

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14 . 08 . 1933 | 14 . 07 . 2020 |



## இரத்தினசபாபதி சண்முகராசா

**(ஓய்வுபெற்ற நுலகர்-யாழ் மாநகர சபை, பொது நூலகம்)**

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசபாபதி சண்முகராசா நேற்று (14.07.2020) செவ்வாய்க் கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி-சரஸ்வதி தம்பதியரின் ஏகப்புதல்வனும், காலஞ்சென்றவர்களான கோபாலசாமி-ஈஸ்வரி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்பு கணவரும், வனிதா (பிரான்ஸ்), தயாநிதி, தயாளினி, தக்ஷினி, ராஜகோபால் (பிரான்ஸ்), கஜமுகன், மதுசூதனன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சியாமா சுந்தர் (பிரான்ஸ்), ஜானகிராமன், காலஞ்சென்ற சௌந்தரசிங், வீரசேகரம், சுரேகா (பிரான்ஸ்), ஜெயமதி, தனுஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், இலக்கியா, ஓவியா, காவியா, தாரிணி, நரேந்திரன், மாதங்கி, மிலக்ஷா, பவித்திரா, அபிராமி, தனுஷன், இந்துமதி, வினித்தா, மதுரன், சைந்தவி, சஞ்ஞனா, குருபரன், கிஷானி, கிரியா, கிஷாலினி, தயாபரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2020) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**303, நாவலர் வீதி,**
**ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**
**077 669 1309**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 17 . 09 . 1937 | 08 . 07 . 2020 |



## திருமதி இராசமணி தெய்வேந்திரம் (மணி)

யாழ்ப்பாணம் மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், 112, கண்ணன் கோயில் வீதி, திருநகர், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் தற்போது பிரான்சில் வாழ்ந்து வந்தவருமான திருமதி இராசமணி தெய்வேந்திரம் கடந்த (08.07.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி சின்னத்தங்கச்சி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தெய்வேந்திரத்தின் (மெக்கானிக்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னட்டி செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், மோகன் (பிரான்ஸ்), காந்தரூபி (பிரான்ஸ்), சூட்டி (இலங்கை), ரவி (பிரான்ஸ்), ரகு (பிரான்ஸ்), தவம் (பிரான்ஸ்), சாந்தி (பிரான்ஸ்), குகன் (பிரான்ஸ்), கோகிலா (கனடா), கிச்சா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (16.07.2020) வியாழக்கிழமை பகல் 12:00 மணியளவில் பிரான்சில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

112, கண்ணன் கோயில் வீதி,
திருநகர், கிளிநொச்சி

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தொடர்பு :-**

| | | | |
|---|---|---|---|
| மோகன் (கராஜ்) | +33 768 672620, | ரகு | +33 666302490, |
| தவம் | +33 6660870602, | கோகிலா | +154145315344, |
| கிச்சா | +33666940810, | சூட்டி | +94076287821 |

# மரண அறிவித்தல்

## திருமதி சுசீலாதேவி சிவஞானச்செல்வன்

(இளைப்பாறிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர்)



சிறுப்பிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுசீலாதேவி சிவஞானச்செல்வன் 13.07.2020 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சிவஞானச்செல்வன் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழகம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் - மனோன்மணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான யோகசுந்தரம் - அமுதம் தம்பதியரின் மருமகளும், கஜந்தினி (26 ஆவது அணி, விவசாய பீடம், யாழ். பல்கலைக் கழகம்), அனித்தா (2 ஆம் வருட விஞ்ஞான பீடம், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயும், சத்தியதேவி, சந்திரகுமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற தவமணிதேவி ஆகியோரின் சகோதரியும் நவரத்தினம், யசிந்தா (பிரான்ஸ்), அருளம்பலம், திலகராணி - தியாகராசா ஆகியோரின் மைத்துனியும், நிதர்சன் - நிசாந்தினி, நிரோஜன், காலஞ்சென்ற நிரூபன் ஆகியோரின் சிறிய தாயும், நர்மதா - சாரங்கன், நிரூஷா - சிவதேவன், சயேந்தி, அனோஜா, அனுராகன், சாரூஜன், கவிஷன், பபிஷன் ஆகியோரின் மாமியும், நிவேதன், ரேகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2020) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி காலயம்புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 656 9767**

(CS 33005)(13.17)

# 10ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

## செல்லத்துரை பாலச்சந்திரன்

திதி: சதுர்த்தி

மலர்வு 28.03.1966 மறைவு 15.07.2010

சகாப்தம் ஒன்று கடந்திடினும்
ஆறுமோ வெந்துயர் அன்பு
அப்பாவே!
மாண்டு விடவில்லை நீங்கள்
எம்மனங்களில்
மறையாது என்றும் வாழ்கிறீர்கள்
- எம்
உயர்வுக்கு உன்னத வழிகாட்டி
வாழ்வை
அர்ப்பணித்த பாசத்தின் தீபமே!
உங்கள் நினைவு எங்கள்
நெஞ்சங்களில் என்றும் நிலைத்து
வாழும்.

குடும்பத்தினர்
நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 27 . 10 . 1960 மறைவு 28 . 07 . 2019

## அமரர் திருமதி கமலாம்பிகை அருட்சோதி

ஓராண்டுகளாயினும் உங்கள் நினைவு
உயிர்த்துடிப்பாய் ஒலிக்கின்றது அம்மா...
எம் இதயத்துடிப்பு உள்ளவரை
உங்கள் கல்லறை அதில் வாழும் அம்மா...

சிவன் கோயிலடி,
சாவகச்சேரி.
(cs.33006) (13.17)
என்றும் நீங்கா நினைவுடன்
பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28 . 09 . 1939 மறைவு 29 . 07 . 2016

## அமரர் நயினை தியாகர் சின்னத்துரை சிவப்பிரகாசம்

திதி- 15.07.2020

(முன்னாள் பிரதமலிகிதர் - நீர்ப்பாசனத் திணைக்களம் (அனுராதபுரம்), ஓய்வு பெற்ற பிரதமலிகிதர் - மோட்டார் வாகனப் போக்குவரத்து அதிகார சபை (யாழ்ப்பாணம்), முன்னாள் பகுதி நேர ஆங்கில ஆசிரியர் - கொக்குவில் நாமகள் வித்தியாலயம்)

இன்றென நினைத்திடும் வேளையில்
நான்காண்டு கடந்தனவாம் யாமறியோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
நாம் பிரார்த்திக்கின்றோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(J.12131) (13.17)
குடும்பத்தினர்

# கடலில் மூழ்கி இருவர் சாவு

கொழும்பு, ஜூலை 15

கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்ட சிறுமிகள் இருவர் சடலங்களாக மீட்கப்பட்டனர். பேருவளை - மக்கொன பகுதியில் உள்ள கடற்கரையில் இடம்பெற்றது. நண்பர்களுடன் மக்கொன உஸ்வெல்ல கடற்கரையில் விளையாடச் சென்றபோது கடல் அலையில் அள்ளுண்டு 4 சிறுவர்கள் அடித்துச் செல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. இதில் இருவர் பிரதேச மக்களால் காப்பாற்றப்பட்டனர். ஏனைய இருவரும் கடற்கரையில் சடலங்களாக மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். பேருவல பகுதியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தை சேர்ந்த 2 சிறுமிகளே இவ்வாறு கடல் அலையில் சிக்குண்டு உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12 . 04 . 1939 மறைவு 26 . 07 . 2019

## திருமதி பாலசிங்கம் சிவனேஸ்வரி

அம்மா !
உமையிழந்து ஆண்டொன்று ஆனதுவோ?
ஆசைமுகம் மறைந்து அவலம்தான் சூழ்ந்ததுவோ?
செம்மையாம் சிரிப்பு செந்தளிப்பாம் பூவதனம்
சேர்ந்து மகிழ்ந்திருந்த செய்தியெல்லாம் மறைந்திடுமோ?
உம்மைக் காக்க உழைத்தோம் முடியவில்லை
ஒவ்வோர் பொழுதுமிங்கு உங்கள் நினைவில் வாடுகிறோம்
எம் வீட்டு நாயகியே! என்றென்றும் நாம் மறவோம்
இறைவன் தாள்மலரில் நீரமரப் பிரார்த்திப்போம்
ஓம் சாந்தி சாந்தி!! சாந்தி!!!

சங்கணாவத்தை வீதி,
ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.
குடும்பத்தினர்.
(cs. 33001) (13.17)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 11 . 02 . 1944 இறப்பு 27 . 06 . 2019

## திருமதி இராஜேஸ்வரி தங்கத்துரை

திதி : 15.07.2020

ஆண்டொன்று சென்றதம்மா
ஆறவில்லை மனங்களம்மா
அம்மா உம் மகிமையினை
அறிந்து கொண்டோம்.
அமரரான பின்னரம்மா
ஆண்டவனின் சந்நிதியில்
அப்பாவின் அரவணைப்பில்
ஆனந்தமாய் வாழ்வீரம்மா

திருகோணமலை
பிள்ளைகள்

**வேலையாள் தேவை**
கைதடி சந்தியிலுள்ள PS Food Cityக்கு கைதடி, நாவற்குழியை சேர்ந்த நன்கு படித்த பணிப்பெண்கள் தேவை. 19வயது - 28 வரையானோர் தொடர்பு கொள்ளலாம். (நேரில் வருகை தரவும்)
தொடர்பு:- 077 8988 836

**வேலையாள்கள் தேவை**
சாவகச்சேரிப் பகுதியில் கட்டட வேலைகள் தெரிந்த மேசன் மற்றும் கூலியாள் தேவை.
தங்குமிடம் உணவு வழங்கப்படும்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
077 885 7406

**தேவை**
மர அரிவு ஆலைக்கு அரிவு மற்றும் தச்சு வேலைகள் தெரிந்தவர்கள் தேவை.
077 255 7761

**மணமகன் தேவை**
யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1993 ஆம் ஆண்டு பூரட்டாதி 3 ஆம் பாதம் செவ்வாய் குற்றமில்லாத HNDIT படித்து பணிபுரியும் மணமகளுக்கு உள்நாட்டில் பணிபுரியும் (Professional) மணமகன் தேவை.
(ஏ.32941) (13.17)
076 972 9577



# ஐக்கிய மக்கள் சக்தியின் பெண்கள் அணி அமைப்பு

கொழும்பு,ஜூலை 15
ஐக்கிய மக்கள் சக்தியின் பெண்கள் அணியான 'ஐக்கிய பெண்கள் சக்தி' நேற்று முன்தினம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

கட்சியின் தலைவரும் ஐக்கிய பெண்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ, கொழும்பு மாவட்ட வேட்பாளர் ஹிருணிக்கா பிரேமச்சந்திர, யாழ். மாவட்ட வேட்பாளர் உமாச்சந்திரா பிரகாஷ் மற்றும் அனோமா பொன்சேகா உட்பட பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் ஐக்கிய பெண்கள் சக்தியின் இணையத்தளமும் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. (க)

**மணமகன் தேவை**
யாழ். இந்து கௌரவ குடும்பம் 1981 திருவோணம் 3 ஆம் பாதம், 2 இல் சூரியன், செவ்வாய் உள்ள அரச பாடசாலையில் ஆசிரியையாக கடமையாற்றும் மணமகளுக்குப் பொருத்தமான மணமகன் தேவை.
075 242 2567

# வவுனியா மாவட்டத்தில் 50 வீதமான வாக்குப்பதிவு

வவுனியா,ஜூலை 15
தபால் மூலமான வாக்களிப்பு நேற்றுடன் இரண்டாவது நாள்களாக தொடர்கின்ற நிலையில் வவுனியா மாவட்டத்தில் நேற்று மதியம் 12 மணிவரை 50 வீதமான தபால்வாக்குகள் பதிவாகியுள்ளன என்று வவுனியா மாவட்டச் செயலரும், தெரிவத்தாட்சி அலுவலருமான சமன் பந்துலசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் இது வரை 20 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.
சிறியளவிலான முறைப்பாடுகளே இதுவரை பதிவாகியுள்ளன. கடந்த மாதம் 9 ஆம் திகதியிலிருந்து நேற்று மாலை வரை 20 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன- என்றார்.

இதேவேளை வவுனியா மாவட்டத்தில் 5 ஆயிரத்து 132 தபால் வாக்காளர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. மன்னார் மாவட்டத்தில் 4 ஆயிரத்து 196 விண்ணப்பங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 ஆயிரத்து 381 விண்ணப்பங்களுமாக வன்னி தேர்தல் மாவட்டத்தில் 12 ஆயிரத்து 709 தபால் மூலமான வாக்குகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுகொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-110)



**AUTOCAD DRAUGHTSMAN**

We are a Group of Companies engaged in Telecommunication, Electrical & Civil Engineering Projects in Sri Lanka, for well over three decades. We are looking for self-motivated, healthy and young person to join with our Team of Professional Skilled Draughtsman or Trainee.

**Qualifications & Experience**

He should have a Certificate in Auto-cad Draughtsmanship (NVQ Level 03 or above) from a recognized institution. 01 year of experience preferred but not mandatory. Training could be provided in-house by experienced staff.

**Job Description**

To identify the sketches provided by Technical Team, Mark Road Locations with Symbols by using Google Earth and Google Map & prepare the As Built Drawings. Preference will be given to Candidates, residing in Jaffna Area. Age Maximum 30 years. Attractive and negotiable remuneration package, commensurate with qualifications, awaits the right candidates. Confidentiality assured. Please E-mail your CV immediately.

**Project Manager**
**Luminex (PVT) Ltd.**
**Point Pedro Road**
**Kopay**
**Tele : 0718521535**
**E-mail : ranjan@luminexpl.com**

# விருப்பு வாக்கு இலக்கம் அச்சிட்ட முகக்கவசத்தை அணிந்த ஆளுநர்

கொழும்பு, ஜூலை 15
வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத், பொலநறுவை மாவட்டத்தில் கொரோனா ஒழிப்பு சம்பந்தமான அரச அதிகாரிகளின் கூட்டத்தில் தேர்தல் பிரசாரத்துடன் சம்பந்தப்பட்ட முகக்கவசத்தை அணிந்து கலந்துகொண்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் கேகாலை மாவட்டத்தில் போட்டியிடும் தனது புதல்வரான கனக ஹேரத்தின் விருப்பு வாக்கு இலக்கம் அச்சிடப்பட்ட முகக்கவசத்தை மஹிபால ஹேரத் அணிந்து சென்றுள்ளார்.

ஆளுநர்கள் இவ்வாறு அரசியல் ரீதியான செயற்பாடுகளில் ஈடுபட முடியாது என்ற நிலையில், அரச அதிகாரிகளின் கூட்டத்தில் ஆளுநர் எப்படி இவ்வாறு தேர்தல் பிரசாரத்துடன் சம்பந்தப்பட்ட விருப்பு வாக்கு இலக்கம் அச்சிடப்பட்ட முகக்கவசத்தை அணிய முடியும் என கேள்வி முன்வைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி, ஆளுநரின் செயல் எந்த வகையிலும் பொருத்தமான செயல் அல்ல, இது குறித்து தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய உள்ளது என்றார். வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத், சப்ரகமுவை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ப)

**Faculty of Allied Health Sciences**
**University of Jaffna, Sri Lanka**

Fourth Year Second Semester Examinations- 2018

The below mentioned examinations for the Faculty of Allied Health Sciences students have been scheduled as follows.

| Examination | Date |
|---|---|
| Fourth Year Second Semester B.Sc in Medical Laboratory Sciences Examination | 20th July 2020 onwards |
| Fourth Year Second Semester B.Sc in Nursing Examination | |
| Fourth Year Second Semester B. Pharm Examination | |

Registrar,
University of Jaffna.
13.07.2020

# செயல்வீரருக்கு வாக்களியுங்கள்

## காரைநகர் தவிசாளர் கோரிக்கை

தபால் மூல வாக்களிப்பின் போது வடக்கு மாகாண அரச அலுவலர்கள் மிக அவதானமாக இருந்து சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என்று காரைநகர் பிரதேச சபையின் தவிசாளர் விஜயதர்மா கேதீஸ்வரதாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
யாழ் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்றத் தேர்தல் எப்போதுமில்லாதவாறு மிக போட்டி மிகுந்த சூழலில் இடம் பெறுகின்றது. ஒரு வீட்டுக்கு பல கட்சிகள் மாறிமாறி வலம் வருகின்றன. உண்மையான மக்கள் சேவகனை மக்கள் என்றோ தேர்ந்தெடுத்து விட்டனர்.

எனவே மக்களுக்கு ஏற்கனவே ஒரு கடிதம் கூட வரையாதவர்களும், மக்களுக்கு இடர்காலத்தில் ஒரு உதவி செய்யாதவர்களும், தமிழ் ஆங்கிலம், சிங்களம் பேசவும் எழுதவும் தெரியாத வேட்பாளர்கள் இன்று அதுவும் கொழும்பு நாடாளுமன்றத்தில் பேசுவதற்கு தயாராகின்றனர்- என்றார். (க-50)

### தலைவிரித்தாடுகிறது கொரோனா

# உலகம் இயல்புக்கு திரும்புவது சந்தேகம்

## நம்பிக்கை இழக்கும் உலக சுகாதார அமைப்பு

**ஜெனீவா, ஜூலை 15**

**உலக நாடுகளும் அமெரிக்காவும் கொரோனாவை எதிர்கொள்ள போதிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று உலக சுகாதார அமைப்பு விசனம் தெரிவித்துள்ளது.**




உலக சுகாதார அமைப்பின் இயக்குநர் டெட்ராஸ் அதானம் கெப்ரியேசஸ் இது குறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொரோனா வைரஸ் பரவல் படுமோசமாகி வருகிறது. எதிர்காலம் நிச்சயமற்று உள்ளது. இயல்பு நிலை திரும்புமா? என்ற சந்தேகம் நாளுக்குநாள் வலுக்கிறது.

உலக நாடுகள் வைரஸுக்கு எதிராக ஒரு பரந்துபட்ட ஒட்டுமொத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். புதிய தொற்றுக்களில் பாதி அமெரிக்காவில் ஏற்பட்டுள்ளது.

அடிப்படைகளை சரியாகக் கடைப்பிடிக்கவில்லையெனில் கொரோனாப் பெருந்தொற்று ஒரே பாதையில் தான் பயணிக்கும் எனத் தெரிவித்துள்ளார். (ரி1)



# காற்றின் தரம் மக்களுக்கு மறைப்பு

## ஆய்வில் தகவல்

வொஷிங்டன், ஜூலை 15

உலகின் பாதிக்கும் மேற்பட்ட மக்களுக்குக் காற்றின் தரம் பற்றிய அரசின் அதிகாரபூர்வ புள்ளிவிவரம் கிடைப்பதில்லை என்று சர்வதேச தன்னார்வ நிறுவனம் நடத்திய ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

"வெளிப்படையான காற்றுத் தரநிலை தரவுகள்: உலகளாவிய நிலை" என்ற தலைப்பில் வொஷிங்டனிலுள்ள ஓபன்ஏகியூ என்ற சர்வதேச தன்னார்வ நிறுவனம் அண்மையில் ஆய்வு நடத்தியது.

இதில் 212 நாடுகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

இதில் 103 நாடுகள் மட்டுமே முக்கிய மாசுக்கள் தொடர்பான காற்றுத்தர நிலை தரவுகளை உருவாக்கி உள்ளன என்பதும் சீனா, இந்தியா, ரஷ்யா, பிலிப்பைன்ஸ், பிரேசில், தென்னாபிரிக்கா உள்ளிட்ட 109 நாடுகள் எந்தவொரு முக்கிய மாசு தொடர்பாகவும் காற்றுத் தரநிலை தரவுகளை உருவாக்கவில்லை என்பதும் தெரியவந்துள்ளது.

உலகில் 10இல் 9 பேர் அதிக மாசுக்கள் நிறைந்த காற்றை சுவாசிக்கின்றனர் என உலக சுகாதார அமைப்பு கூறியுள்ள நிலையில், உலகின் பாதிக்கும் மேற்பட்ட மக்களுக்கு காற்றின் தரம் பற்றிய அரசின் அதிகாரப்பூர்வ புள்ளிவிவரம் கிடைப்பதில்லை என ஆய்வறிக்கை தெரிவித்துள்ளது. (ரி1)

Save the Children.

# 97 லட்சம் சிறுவர்கள் பாதிக்கப்படுவர்

## ஆய்வில் தகவல்

லண்டன், ஜூலை 15

கொரோனா பிரச்சினை முடிந்த பிறகு உலகம் முழுவதும் 97 லட்சம் சிறுவர்கள் மீண்டும் பாடசாலைக்குச் செல்ல முடியாதநிலைக்கு தள்ளப்படுவார்கள் என்று லண்டனைத் தலைமையிடமாகக் கொண்ட தொண்டு நிறுவனமான சேவ் தி சில்ரன் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொரோனா வைரஸ் சூழ்நிலையில் கல்வியில் ஏற்படும் பாதிப்பு குறித்து இந் நிறுவனம் ஆய்வொன்றை மேற்கொண்டுள்ளது. அதிலேயே குறித்த விடயம் தெரியவந்துள்ளது.

கொரோனா காரணமாக ஊரடங்கு நிலவுவதால், உலகம் முழுவதும் 160 கோடி சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் உள்ளனர். கொரோனாவால் உலகம் முழுவதும் வறுமை அதிகரிக்கும். கல்விக்கு அரசுகள் ஒதுக்கும் நிதியின் தொகை குறையும். இதனால், சிறுவர்கள் பாடசாலைக்குத் திரும்பச் செல்லாமல் இருக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

ஏமன், ஆப்கானிஸ்தான் மற்றும் மேற்கு, மத்திய ஆபிரிக்காவில் 12 நாடுகளில் இந் நிலை அதிகமாக இருக்கும். எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)

# இந்தியாவில் கொரோனா 9 லட்சத்தைக் கடந்தது!

புதுடில்லி, ஜூலை 15

இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் 28,498 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதியானதைத் தொடர்ந்து பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 9 லட்சத்தைக் கடந்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் 553 பேர் உயிரிழந்துள்ளமையுடன், பலி எண்ணிக்கையும் 23, 727 ஆக அதிகரித்துள்ளது.

இந்தியாவில் நேற்றுக் காலை நிலைவரப்படி கொரோனாவால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 9,06,752 ஆகவும், சிகிச்சை பெற்று வருவோர் எண்ணிக்கை 3,11, 565 ஆகவும், குணமடைந்தோர் எண்ணிக்கை 5,71,460 ஆகவும் காணப்படுகின்றது. (ரி1)

# தேர்தல் ஆணையகத்தின் தலைவர் தெரிவுக்கு எதிர்ப்பு

## கொங்கோவில் ஆர்ப்பாட்டக்காரர் மீது தடியடி தாக்குதல்

கின்ஷாச, ஜூலை 15

தேர்தல் ஆணையகத்தின் தலைவர் தெரிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான கொங்கோ ஜனநாயகக் குடியரசில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் பொலிஸார் கண்ணீர் புகை மற்றும் தடியடித் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

5 நாள்களுக்கு மேல் நீடிக்கும் இந்த ஆர்ப்பாட்டங்களில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்கள் காரணமாக நால்வர் உயிரிழந்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி ஜோசப் கபிலாவின் ஆதரவாளர்கள் ஆதிக்கத்தில் ரொன்சார்ட் மலோண்டாவை தேசிய தேர்தல் ஆணையகத்தின் தலைவராக நியமிக்க தேசிய சட்டமன்றம் எடுத்த முடிவால் இந்தப் போராட்டம் தூண்டப்பட்டுள்ளது.

முன்னாள் கிளர்ச்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ஜீன்பியர் பெம்பாவின் வாகனத்தை நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்றுகையிட்டு தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். அதைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்க பொலிஸார் கண்ணீர்புகைத் தாக்குதல்களையும், தடியடித் தாக்குதல்களையும் மேற்கொண்டுள்ளனர். (ரி1)





# பத்மநாபசுவாமி கோயில் உரிமை வழக்கு: அரச குடும்பத்துக்குச் சாதகமாகத் தீர்ப்பு

புதுடில்லி, ஜூலை 15

கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் உள்ள உலகப் புகழ்பெற்ற பத்மநாபசுவாமி கோயிலை நிர்வகிக்கும் உரிமை திருவிதாங்கூர் அரச குடும்பத்திற்கு உள்ளது என உச்சநீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

கோயிலின் வழிபாடு முறைகளில் தலையிடுவதற்கும் அரச குடும்பத்திற்கு உரிமை உள்ளது என தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

18ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பத்மநாபசுவாமி கோயில் பாரம்பரியமாக திருவிதாங்கூர் மன்னர் குடும்பத்தினரால் நிர்வகிக்கப்பட்டு வந்தது..

திருவனந்தபுரத்தை இறுதியாக ஆட்சி செய்த மன்னர் 1991ஆம் ஆண்டு ஜூலை 20ஆம் திகதி காலமானார். அதன் பிறகு கோயில் நிர்வாகத்தில் நிதி முறைகேடுகள் நடந்தன எனக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை அடுத்து, பத்மநாப சுவாமி கோயிலை நிர்வகிக்கவும், சொத்துகளைப் பராமரிக்கவும் திருவிதாங்கூர் மன்னர் குடும்பத்தினருக்கு உரிமையில்லை என்று கடந்த 2011ஆம் ஆண்டு கேரள உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருந்தது. இதற்கு எதிராகத் தொடரப்பட்ட மனுவில் இந்தத் தீர்ப்பை உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ளது. (ரி1)

# கிண்ணம் வென்ற பின்னரே திருமணம்

காபூல், ஜூலை 15

**ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி உலகக் கிண்ணத்தை வென்ற பின்னரே தான் திருமணம் செய்து கொள்ளஇருக்கிறார் என ஆப்கானிஸ்தான் அணியின் நட்சத்திர வீரர் ரஷீட் கான் தெரிவித்துள்ளார்.**



2015 ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தான் அணியில் அறிமுகமான ரஷீட்கான், ஆப்கானிஸ்தான் அணியின் மிக முக்கிய வீரராக திகழ்கின்றார். சமகால கிரிக்கெட் உலகின் முன்னணி பந்து வீச்சாளர்களில் ஒருவராகவும், ரி20 பந்து வீச்சாளர்களில் முதலிடத்தில் உள்ள பந்துவீச்சாளராகவும் திகழ்ந்து வருகிறார்.

அண்மைக்காலமாக பந்து வீச்சில் மட்டுமல்லாமல், துடுப்பாட்டத்திலும் சிறப்பாக செயல்பட்டு வரும் 21வயதான ரஷீட் கான், ஆப்கானிஸ்தான் அணியின் மூன்று வகை கிரிக்கெட் போட்டிகளிலும் எதிர்கால தலைவராக பார்க்கப்படுகிறார்.

தனது அபரிமிதமான திறமையால் உலகின் பல்வேறு ரி20 லீக் தொடர்களில் இடம் பெற்றார் ரஷீட் கான். ஐ.பி.எல் தொடரிலும் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் முக்கிய வீரராக வலம் வருகிறார். அவர் விளையாடாத கிரிக்கெட் லீக்கே இல்லை என கூறும் அளவுக்கு பல கிரிக்கெட் லீக் தொடர்களில் இடம்பெற்றுள்ளார்.

அதேவேளை, ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி அண்மைக்காலமாக மிகப் பெரிய வளர்ச்சி கண்டுள்ளது. அதற்கு ரஷீட்கானின் பங்களிப்பு முக்கியமாக இருந்து வருகின்றதை மறுக்க முடியாது. இதனால் அவரை வைத்தே ஆப்கானிஸ்தான் அணி சுழல் பந்துவீச்சாளர்களை மையமாகக் கொண்ட அணியாக மாறியது.

ரஷீட்கான் ஆப்கானிஸ்தான் அணிக்கு கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை வென்று கொடுத்த பின்னரே தான் நிச்சயதார்த்தம் மற்றும் திருமணம் செய்துகொள்வேன் என ஆப்கானிஸ்தானின் ஆசாதி வானொலிக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார். ஆனால், அது ரி20 உலகக் கிண்ணத்தையா அல்லது ஒருநாள் உலகக் கிண்ணத்தையா என்பது குறித்து ரஷீட் கான் தெளிவாக கூறவில்லை.

சர்வதேச கிரிக்கெட்டில் வளர்ந்து வரும் அணியாக உள்ள ஆப்கானிஸ்தான், 2015, 2019 என இரண்டு உலகக் கிண்ணத் தொடரில் தான் பங்கேற்றுள்ளது. இதில் 15 போட்டிகளில் விளையாடி ஒரு போட்டியில் மாத்திரம் வெற்றி பெற்றது. இந்த நிலையில் உலகக் கிண்ணத்தை வென்றால் தான் திருமணம் என ரஷீட் கான் கூறுவது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. (ரி2)



# 10 ஆண்டுகள் அதிரடி தொடரும்

## ஸ்மித் தெரிவிப்பு

மெல்போர்ன், ஜூலை 15

ஆஸ்திரேலிய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் ஸ்டீவ் சிமித் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் களமிறங்கி 10 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. தனது அறிமுக ஆட்டத்தின் படத்தை வெளியிட்டுள்ள ஸ்டீவ் ஸ்மித் இன்னும் 10 ஆண்டுகள் விளையாடலாம் என்று தெரிவித்துள்ளார்.

ஸ்டீவ் ஸ்மித்த் 2010 ஆம் ஆண்டு டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்தில் அறிமுகமானார். பாகிஸ்தானுக்கு எதிரான அறிமுக ஆட்டத்தில் 8 மற்றும் 9 ஆவது நபராக களம் இறங்கி முறையே 1 மற்றும் 12 ஓட்டங்கள் அடித்தார். 51 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுக்கள் கைப்பற்றினார். ஆரம்ப காலத்தில் சுழற்பந்து வீச்சு சகலதுறை வீரராக அறியப்பட்ட ஸ்மித், அதன்பின் தன்னை தலைசிறந்த துடுப்பாட்ட வீரராக வளர்த்துக் கொண்டார். தற்போதைய காலகட்டத்தில் தலைசிறந்த கிரிக்கெட் வீரர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார்.

நேற்றோடு ஸ்மித் கிரிக்கெட் போட்டியில் அறிமுகமாகி 10 வருடங்கள் நிறைவடைந்துள்ளன. ஸ்டீவ் ஸ்மித் அறிமுக போட்டியில் தொப்பியை ரிக்கி பொண்டிங்கிடம் இருந்து வாங்கும் படத்தை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

"நான் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அறிமுகமாகி 10 வருடங்கள் ஆகிவிட்டன என்பதை நம்புவதற்கு கடினமாக உள்ளது. தற்போது வரை மிகவும் அற்புதமான பயணம். எனக்கு இன்னும் 10 வருடங்கள் இருக்கலாம்" என்று அவர் பதிவிட்டுள்ளார். (ரி2)

# லீவிஸ் ஹாமில்டன் மீண்டும் முதலிடம்!

ஹெல்சிங்கி, ஜூலை 15

பார்முலா 1 கார்ப்பந்தயத்தின் இரண்டாம் சுற்றான "ஸ்டிரியா கிராண்ட் பிறி"யில், மெர்சிடஸ் அணியின் லீவிஸ் ஹாமில்டன் வெற்றி பெற்றார்.

பார்முலா 1 கார்ப்பந்தயம் கடந்த 5 ஆம் திகதி ஆரம்பமானது. ஸ்பில்பேர்க்கில் நடந்த முதலாவது சுற்றான "ஆஸ்திரியா கிராண்ட் பிறி"யில் பின்லாந்து வீரர் வொல்டெரி போட்டோஸ் (மெர்சிடஸ் அணி) வென்றார். 6 முறை சம்பியனான இங்கிலாந்து வீரர் லீவிஸ் ஹாமில்டன் 4ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டார்.

இரண்டாவது சுற்றான "ஸ்டிரியா கிராண்ட் பிறி" நேற்று முன்தினம் ஸ்பில்பேர்க் ஓடுதளத்தில் நடைபெற்றது. அதில் கடந்த முறை 4 ஆவது இடம் பிடித்த மெர்சிடஸ் அணியின் லீவிஸ் ஹாமில்டன் முதல் இடம் பிடித்தார். அவர் பந்தய தூரத்தை 1:22:50.683 நேரத்தில் கடந்தார். முதல் இடம் பிடித்த ஹாமில்டனுக்கு 25 புள்ளிகள் வழங்கப்பட்டன. முதல் சுற்றான ஆஸ்திரியா கிராண்ட் பிறியில் முதல் இடம் பிடித்த மெர்சிடஸ் அணியின் போட்டோஸ் 13.719 வினாடிகள் பின்தங்கி 2 ஆவது இடம் பிடித்தார். இவருக்கு 18 புள்ளிகள் வழங்கப்பட்டன. (ரி2)



# ஹொக்கி இந்தியாவின் தலைவர் பதவி துறப்பு

புதுடெல்லி, ஜூலை 15



ஹொக்கி இந்தியா அமைப்பின் தலைவர் முகமது முஸ்தாக் அகமது தனது பதவியில் இருந்து விலகியுள்ளார். தேசிய விளையாட்டு சம்மேளன நிர்வாகிகள் தொடர்ச்சியாக 2 முறைக்கு மேல் பதவி வகிக்கக்கூடாது என்ற தேசிய விளையாட்டு கொள்கை விதிமுறையின் அடிப்படையிலேயே அவர் பதவி விலகியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர் 2018ஆம் ஆண்டு ஹொக்கி இந்தியா அமைப்பின் தலைவராகத் தெரிவானார். எதிர்வரும் 2022ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வரை அவர் இந்தப் பதவியில் இருப்பார். அவர் ஏற்கனவே 2010 முதல் 2014ஆம் ஆண்டு வரை பொருளாளராகவும், 2014 முதல் 2018 ஆம் ஆண்டு வரை பொதுச் செயலாளராகவும் இருந்த நிலையில் தற்போது தலைவராகப் பதவி வகிப்பது தொடர்பாக விமர்சனங்கள் எழுப்பப்பட்டிருந்தன.

அதையடுத்து அந்த நாட்டு மத்திய விளையாட்டு அமைச்சு அவரைப் பதவி விலகுமாறு பணித்திருந்தது. அதையடுத்து அவர் பதவி விலகியுள்ளார். துணைத் தலைவராக இருந்த ஞானேந்திர நிகோம்பாம் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். (ரி2)

# தடையிலிருந்து மீண்டது மன்செஸ்டர் சிட்டி அணி

மன்செஸ்டர் சிட்டி கால்பந்தாட்ட அணிக்கு ஐரோப்பியன் சாம்பியன்ஸ் லீக் விதித்திருந்த இரு ஆண்டுத் தடை நீக்கப்பட்டுள்ளது. அந்த அணி செய்த மேன்முறையீட்டுக்கு அமைய இந்தத் தடை நீக்கப்பட்டுள்ளது.

இங்கிலீஷ் பிரிமீயர் கால்பந்து லீக்கில் விளையாடும் முன்னணி அணிகளில் ஒன்று மன்செஸ்டர் சிட்டி. 2018-19 சீசனில் மன்செஸ்டர் சிட்டி அணி இங்கிலீஷ் பிரிமீயர் கால்பந்துச் சம்பியன் பட்டத்தை வென்றது. ஆனால் மான்செஸ்டர் சிட்டி அணி நிதி முறைகேட்டில் ஈடுபட்டது என்று குற்றஞ்சாட்டிய ஐரோப்பிய சாம்பியன்ஸ் லீக்ஸ் அந்த அணிக்கு இரண்டு ஆண்டுகள் தடைவிதித்தது. இந்தத் தடையை எதிர்த்து விளையாட்டுக்கான தீர்ப்பாயத்தில் மன்செஸ்டர் சிட்டி முறையீடு செய்திருந்தது.

இது தொடர்பான விசாரணைகளின் முடிவில் மான்செஸ்டர் சிட்டி அணி மீதான குற்றச்சாட்டிற்கு ஆதாரமில்லை என்று தெரிவித்த தீர்ப்பாயம் இரண்டு ஆண்டுதடையை நீக்கி உத்தரவிட்டது. அதையடுத்து எதிர்வரும் ஐரோப்பிய சாம்பியன்ஸ் லீக் தொடரில் மன்செஸ்டர் சிட்டி அணியால் பங்கேற்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி2)

## வரலாற்றில் முதற்றடவையாக

# நாடாளுமன்றில் நேற்று ஒத்திகை

கொழும்பு, ஜூலை 15

அவசர நிலை ஏற்பட்டால் முன்னெடுக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான விசேட ஒத்திகை நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்றது.

இவ்வாறானதொரு ஒத்திகை நாடாளுமன்ற வரலாற்றில் முதற்றடவையாக முன்னெடுக்கப்பட்டதாக நாடாளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார்.

சாதாரண நாள்களில் நாடாளுமன்ற செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுவதைப் போலவே நேற்றும் முற்பகல் 10.30க்கு சபை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

சபை விவாதம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், விவாதத்துக்கு இடையில் ஏற்படக்கூடிய இடர்கள், பிரமுகர் பாதுகாப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட செயற்பாடுகள் குறித்து இதன்போது ஒத்திகை முன்னெடுக்கப்பட்டது.

நாடாளுமன்றில் நிறுவப்பட்டுள்ள செயற்பாட்டு கண்காணிப்பு மத்திய நிலையத்திலிருந்து இந்த செயற்பாடுகள் கண்காணிக்கப்பட்டன.

இந்த ஒத்திகையில், இலங்கை இராணுவம், கடற்படை, விமானப்படை, இலங்கை பொலிஸ், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர், புலனாய்வுப் பிரிவினர், தீயணைப்பு பிரிவினர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

நான்காவது கட்டளைப் படையணியின் ஒத்துழைப்புடன் இந்த ஒத்திகை முன்னெடுக்கப்பட்டதாகவும் நாடாளுமன்ற படைக்கல சேவிதர் மேலும் தெரிவித்தார். (த)



# சுய தனிமைப்படுத்தப்பட்டோர் 4 மணிக்குப் பின் வாக்கிடலாம்!

## தனிமைப்படுத்தல் நிலையத்தில் உள்ளோர் தொடர்பில் இதுவரை தீர்மானமில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 15

கொரோனா காரணமாக வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளோர் தமக்குரிய வாக்களிப்பு நிலையங்களில் பி.ப. 4 மணிக்குப் பின்னர் வாக்களிக்க முடியும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.


தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கு வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் என்ன என்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'வீடுகளில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருப்போர் தமது வாக்களிப்பு நிலையங்களில் பி.ப. 4 மணியிலிருந்து 5 மணி வரையிலான காலப் பகுதிக்குள் வாக்களிக்க முடியும். மிகக் குறைந்தளவானோரோ அவ்வாறு சுய தனிமைப்படுத்தப்பட்டிருப்பார்கள். எனவே அவர்கள் ஓகஸ்ட் 5ஆம் திகதி பி.ப. 4 மணி தொடக்கம் 5 மணிக்கு இடையிலான காலப் பகுதியில் வாக்களிக்க முடியும். பி.ப. 5 மணிக்கு முன்னர் வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று வாக்களிக்க வேண்டும்.

இதேவேளை தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்க வைக்கப்பட்டிருப்போர் வாக்களிப்பதற்குரிய ஏற்பாடுகள் தொடர்பில் ஆணைக்குழு இன்னமும் தீர்மானம் எடுக்கவில்லை. அவர்களின் வாக்குரிமையை நிலைநாட்டுவதற்குரிய முயற்சிகளை ஆணைக்குழு நிச்சயம் மேற்கொள்ளும் என்றார். (ஒ.5)

## மரண அறிவித்தல்

### அருட்பணி. R. M. கொர்கோணியஸ் நேசநாயகம் அடிகளார்



யாழ்ப்பாண மறைமாவட்டக் குருவாக இறைபணியாற்றிவந்த அருட்பணி. R.M. கொர்கோணியஸ் நேசநாயகம் அடிகளார் நேற்று (14.07.2020) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் உடல் அஞ்சலிக்காக யாழ். ஆயர் இல்ல சிற்றாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. அடக்க சடங்கு திருப்பலி மறைமாவட்ட ஆயர் தலைமையில் இன்று (15.07.2020) புதன்கிழமை. பி.ப. 3.30 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். நாட்டில் நிலவும் அசாதாரண நிலையை கருத்தில்கொண்டு இறை மக்கள் வெவ்வேறு நேரங்களில் வருகைதந்து சமூக இடைவெளியை பின்பற்றி அருட்தந்தைக்கு இறுதி அஞ்சலி செலுத்தி செபித்து செல்லு மாறு அன்போடு கேட்டுக்கொள்ளபடுகின்றனர்.

தகவல்:
குருமுதல்வர், யாழ். மறைமாவட்டம்

# இராணுவப் பிரசன்னத்தை நியாயப்படுத்தும் மஹிந்த!



யாழ்ப்பாணம், ஜூலை 15

தென்பகுதியில் காணப்படுவதைப் போன்றுதான் வடக்கிலும் இராணுவப் பிரசன்னம் காணப்படுகின்றது. இராணுவத்தினரின் சோதனை நடவடிக்கைகளை நிறுத்தச் சொல்ல முடியாது. இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

'வடக்கு மாகாணத்தில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் வேட்பாளர்கள் அச்சுறுத்தப்படுகின்றார்கள். இராணுவப் பிரசன்னம் அதிகரித்துக் காணப்படுகின்றது. புதிதாகச் சோதனைச் சாவடிகள் முளைக்கின்றன. வேட்பாளர்கள் இராணுவத்தால் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்' இவ்வாறு அரசியல் கட்சிகளால், வேட்பாளர்களால் தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யபட்டமை தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரியவிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த தவிசாளர், தென்பகுதியிலும் இவ்வாறுதான் சோதனைச் சாவடிகள் காணப்படுகின்றன. இராணுவத்தினரை சோதனை செய்ய வேண்டாம் என்று சொல்ல முடியாது. தெற்கில் கடற்படையினரின் சோதனைச் சாவடிகூடக் காணப்ப்டுகின்றது. நாடுமுழுவதும் முப்படையினரை பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தும் வர்த்தமானி நடைமுறையில் உள்ளதையும் கருத்தில் எடுக்கவேண்டும்.

நாங்கள் வேட்பாளர்களுக்கு விசேட அடையாள அட்டை வழங்கவுள்ளோம். அதனைப் பயன்படுத்தினால், இராணுவத்தினரால் ஏற்படுத்தப்படும் தொந்தரவுகள் குறைய்க் கூடும். ஆனால் சோதனை செய்ய வேண்டாம் என்று சொல்ல முடியாது.

தேர்தல் காலத்தின் கடைசி இரு வாரங்களிலும் சோதனைச் சாவடிகளில் ஒரு பொலிஸாரையாவது நிறுத்துமாறு கோரவுள்ளோம்-என்றார். (ஒ.5)

## மரண அறிவித்தல்



### கந்தையா கதிர்காமத்தம்பி

மங்காவத்தை அல்வாய் வடமத்தியை பிறப்பிடமாகவும், வியாபாரிமூலையை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா கதிர்காமத்தம்பி நேற்று (14.07.2020) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவகொழுந்து தம்பதிகளின் ஏக புதல்வனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சத்தியதேவியின் அன்புக் கணவரும், சசிகரன் (SK மல்ரி சென்ரர் கிராமக்கோடு), சசிகலா (ஆசிரியை- யா/ அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை), சுகந்தன் (உத்தியோகத்தர் மாவட்ட நீதிமன்றம் கிளிநொச்சி), சுதர்சன் (ஜேர்மனி), சுதன் (ஜேர்மனி), சிந்துஜா, விதுஷன், விதுர்ஷிகா (ஆசிரிய மாணவி - தேசியக் கல்வியியற் கல்லூரி - மட்டக்களப்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கவிதா, மதியழகன், சிவசுஜாஜினி, திருப்பதி ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற சிவபாக்கியம், சிவமணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பிரவீண், பிரவீணா, ஹம்சினி, பிரதாப், சுகானா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2020) புதன்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரயைக்காக பிற்பகல் 02.00 மணியளவில் சுப்பர்மடம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**தகவல்:- குடும்பத்தினர்.**
**க. சசிகரன் - 077 2419 655**

## மரண அறிவித்தல்

தோற்றம்
09 . 12 . 1936



மறைவு
14 . 07 . 2020

### ஆறுமுகம் பெனடிற் (துரைராசா)

கூவில் புலோலி தெற்கு, புலோலியை பிறப்பிடமாகவும், நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பெனடிற் (துரைராசா) நேற்று (14.07.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - ஆரோக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் கனகம்மாவின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான கதிர்காமு இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான யேசேப், அக்கினேஸ், மனோன்மணி, திரேசம்மா, மாலா, செல்வரத்தினம், மதுரநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சரோஜா, ஆறுமுகநாதன் (பணியாளர் ப.தெ.வ.அ.கூ. சங்கம் பருத்தித்துறை), காஞ்சனா, ஜெனதநாதன் (லண்டன்), றெஜினா, கல்பனா, யமுனா, கணநாதன் (கடாபி), குணநாதன், சோபனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சற்குணம், செல்வபதி, இராசரத்தினம், மோகனவதி (லண்டன்), அல்பீன் (பின்லாந்து), சசிகுமார், ஜெதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சங்கீதா (அபிவிருத்தி உத்தியோகத்தர் யாழ். மாநகரசபை), சிந்துஜா, ஜெயதீபன், றொபினா, குணராசா, றொசானி, அஜந்தன், றொகான் (லண்டன்), பதுமன் (லண்டன்), சகானா (லண்டன்), ஆதவன், அபின்சா, நிவேதா, ஜானுகா, டீனுஜா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஜெறிசன், ஜெறிஷி, மிதுனன் ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2020) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலைஉற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**கூவில், புலோலி.**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 993 4295, 077 316 4522,**
**076 375 6404, 077 810 4021**

## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சி பிரதேச செயலக மந்துவில் வடக்கு பிரிவில் பொருளாதார அபிவிருத்தி அலுவலராக கடமையாற்றும் **திரு. தி. செந்தூரன்** அவர்களின் பாசமிகு தந்தையார்

### ஐயம்பிள்ளை திருஞானசேகரம்

நேற்று (14.07.2020) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரி சங்கம்**
**பிரதேச செயலகம், தென்மராட்சி சாவகச்சேரி.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 06 . 1975



மறைவு 14 . 07 . 2020

### திருமதி பத்மராஜா ஜெயக்குமாரி

மண்டைதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 9/1, கலைவாணி வீதி, டிப்போ சந்தி, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மராஜா ஜெயக்குமாரி நேற்று (14.07.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரமூர்த்தி மற்றும் நடனசுந்தரி தம்பதிகளின் ஏகபுத்திரியும் காலஞ்சென்ற பத்மராஜாவின் அன்பு மனைவியும், பத்மகுமார் **(S.P.H.I, M.O.H OFFICE** செட்டிக்குளம்**)**, சத்தியகுமார் **(Senior Finan cial Consultant Srilanka Insurance)**, விஜயகுமார் (முன்னாள் பொறுப்பு அதிகாரி, வேலணை பிரதேசசபை உபஅலுவலகம், புங்குடுதீவு), சரத்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், வினோஜிகா (வேம்படி மகளிர் கல்லூரி), ஜீவிதன் (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுதமதி, அனுஜா (சங்கானை சிவப்பிரகாச ம.வி), தமிழினி ஆகியோரின் அன்பு மைத்துனியும், மகாலட்சுமியின் பெறாமகளும், பிரியங்கா, தர்சிகன், பிரியங்கன் ஆகியோரின் அன்பு அத்தையுமாவார்.

அன்னாரது ஈமைக்கிரியைகள் இன்று (15.07.2020) புதன்கிழமை 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சத்தியகுமார்:- 077 903 7150
விஜயகுமார் :- 077 404 7909

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு 28 . 12 . 1928



இறப்பு 14 . 07 . 2020

### திருமதி நீலாம்பாள் செந்திவேல்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நீலாம்பாள் செந்திவேல் நேற்று (14.07.2020) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணசாமி-அஞ்சுகம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இ.செந்திவேலின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செ.கேசவமூர்த்தி, ஜெயரஞ்சினி, ஜெயரூபி, இதயமூர்த்தி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சிவபாதரத்தினம், இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2020) புதன்கிழமை மு.ப. 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி வடக்கு கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
ஜெயரஞ்சினி(மகள்)-077 6544 582

தகவல்:
குடும்பத்தினர்

### விபத்தில்...

மத்தியைச் சேர்ந்த ஐயம்பிள்ளை சிவஞானசேகரம் (வயது - 67) என்பவரே உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 11ஆம் திகதி சைக்கிளும் முச்சக்கர வண்டியும் மோதுண்டு விபத்து இடம்பெற்றிருந்தது. சைக்கிளில் பயணித்தவரே படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். எனினும், சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார். அவர் மூன்று பிள்ளைகளின் தந்தை.

சாவகச்சேரி பொலிஸார் மற்றும் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை நடத்தினர். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் நேற்றிரவு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-159,26)

### நீதிவானும்...

போது அடையாளம் காணப்பட்டுள்ள ஒருவர் கடந்த 6 ஆம் திகதி இதே நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கில் சாட்சியமளித்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

கந்தகாடு மறுவாழ்வு நிலையத்தில் பணியாற்றும் பயிற்றுவிப்பாளர் ஒருவர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளார். அவரை ஏற்றிச் சென்ற சாரதியும் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருந்தார். அந்த சாரதி நீதிமன்றத் தில் சாட்சியமளித்திருந்தார். இதையடுத்தே நீதிவான் உள்ளிட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

### பரப்புரை...

உறுப்பினர் ஒருவர் மாரடைப்பு காரணமாக உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை பகுதியில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டிருந்த இலங்கை தமிழ் அரசு கட்சியின் ஊர்காவற்றுறை பிரதேச சபை உறுப்பினரான கனகசுந்தரம் ஜெயக்குமார் என்பவரே உயிரிழந்தார்.


இலங்கை தமிழ் அரசுக் கட்சியினர் நேற்று ஊர்காவற்றுறை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வீடுவீடாக பரப்புரைப் பணியில் ஈடுபட்டனர். பரப்புரைப் பணியில் ஈடுபட்டிருந்த பிரதேசசபை உறுப்பினர் ஜெயக்குமார் திடீர் நெஞ்சுவலி ஏற்பட்டு, உடனடியாக ஊர்காவற்றுறை பிரதேச மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். எனினும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ஒ.5)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை அன்னலட்சுமி

(அன்னம் அக்கா)

காரைநகர் சடையாளியை பிறப்பிடமாகவும், இல.235/3 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை அன்னலட்சுமி (அன்னம் அக்கா) நேற்று (14.07.2020) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.



தோற்றம் 01.01.1943 மறைவு 14.07.2020

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், வினாசித்தம்பி - பொன்னி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், அரிகரன், அரியமலர் (ஆசிரியை - வியாவில் சைவ வித்தியாலயம், காரைநகர்), உமாதேவி (உமா - லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கணேசமூர்த்தி, விக்கிரமசந்திரன், காலஞ்சென்ற லோகேஸ்வரன், நகுலேஸ்வரி, பரமேஸ்வரலிங்கம் ஆகியோரின் சிறிய தாயும் யசோதா (நில அளவையாளர், பிரதேச நிலஅளவை காரியாலயம், யாழ்ப்பாணம்), சிவனருட்குமார், குகன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் இந்திராணி, காலஞ்சென்றவர்களான புவனசுந்தராம்பாள், மனோன்மணி, ஐயம்பிள்ளை ஆகியோரின் சகோதரியும் அக்ஷதன், அக்ஷனா, தரணிகா, வக்ஷனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2020) புதன்கிழமை அவரது இல்லத்தில் மதியம் 1.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பல்லோடை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.235/3, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தகவல்:- குடும்பத்தினர்.
மகன் (கரன்)

077 953 5479, 077 604 3727

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி நவரத்தினம்

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும், கைதடி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நவரத்தினம் நேற்று (14.07.2020) செவ்வாய்க்கிழமை மாலை 06.00 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னத்தங்கம் தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற தவமணிதேவியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற பகீரதன் மற்றும் பரதன் (லண்டன்), பாலநந்தினி, பத்மிலன் (லண்டன்), பிரபாஞ்சினி (பவா- பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுதாஜினி, வேல்முருகன், சுபாஜினி, காலஞ்சென்ற கரன் ஆகியோரின் மாமனாரும் ஆகீஸ், அஷ்மிதா, அபினிஷ், அபிஷாஷ், ஆருஜன், ஆகித்தன், அஷ்விகா, அக்ஷிதா, அக்ஷரன் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், சின்னம்மா மற்றும் செல்வராசா, சபாபதிப்பிள்ளை, தவமணிதேவி, செல்வநாயகம் ஆகியோரின் அன்பு சகோதரனும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, ஜெயதாஸ், செல்வரத்தினராசா, வேலுப்பிள்ளை மற்றும் ஜெயலட்சுமி, ஜெகதாம்பாள், தர்மகுலசிங்கம், சறோஜினிதேவி, இராசம்மா, பத்மாவதி, விக்னேஸ்வரி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2020) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊத்தல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்று[illegible]

077 703 4849 தகவல்:- குடு[illegible]



# வவு.பொது வைத்தியசாலையில் வரிசையில் காத்திருந்த நோயாளர்கள்

வவுனியா, ஜூலை 15

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா நோய்த் தொற்று காரணமாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நோயாளர்கள் வெளிநோயாளர் பிரிவுக்குள் அனுமதிக்கப்படுகின்றனர்.



நேற்றுமுன்தினம் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக்கு வருகைதந்த நோயாளர்கள், வெளிநோயாளர் பிரிவில் இருக்கைகள் உள்ளபோதிலும் கடும் வெயிலுக்கு மத்தியில் வரிசையில் நின்று சேவைகளைப் பெற்றமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. சுகவீனம் காரணமாக வைத்தியசாலைக்கு வருகைதரும் நோயாளர்களை வைத்தியசாலை சமூகத்தினர் கடும் வெயிலில் வரிசையில் நிற்கவைத்திருந்தமை மனவேதனையளிக்கும் விடயம் எனவும் நோயாளர்களின் நலனை கருத்திற்கொண்டு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர். (ரி3-18)

## ஸ்கந்தவரோதயா மாணவர்களுக்கு சைக்கிள்கள் அன்பளிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 15

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மாணவர்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

1989ஆம் ஆண்டு உயர்தரம் கற்று அமரத்துவம் அடைந்த கல்லூரியின் பழைய மாணவர்கள் நினைவாக அதே ஆண்டு உயர்தரம் கற்ற பழைய மாணவர்களால் 25 சைக்கிள்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

அத்துடன் கல்லூரியின் பழைய மாணவி திருமதி. சுதர்சினி தனது மகள் குழலினியின் பிறந்த நாளை முன்னிட்டு தரம் -6 மாணவி ஒருவருக்கு சைக்கிள் ஒன்றையும் அன்பளிப்புச் செய்துள்ளார்.


கல்லூரியின் முதன்மை மண்டபத்தில் அதிபர் மு.செல்வஸ்தானின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், கல்லூரியின் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ரி3-ந)

## வவுனியாவில் வீரமக்கள் தினம்

வவுனியா, ஜூலை 15

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் 31வது வீரமக்கள் தினம் வவுனியா கோயில்குளத்தில் அமைந்துள்ள க.உமாமகேஸ்வரன் நினைவில்லத்தில் நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் ஆரம்பித்துவைக்கப்பட்டது. இந் நிகழ்வு எதிர்வரும் 16ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் அரசியல் கட்சியான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் வவுனியா மாவட்ட அமைப்பாளரும் வவுனியா நகரசபை உறுப்பினருமான சந்திரகுலசிங்கம் (மோகன்) தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில். கழகத்தின் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டதுடன் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் திருவுருவப்படத்திற்கு மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது. இந் நிகழ்வில் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கழக தோழர்கள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர். (ரி3-110)















யாழ்ப்பாணம் நீர்வேலி சவாரித்திடலில் நேற்றுமுன்தினம் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான மாட்டுவண்டி சவாரிப் போட்டி இடம்பெற்றது. இப் போட்டியில் பெருமளவான இளைஞர்கள் தமது காளைகளுடன் பங்குபற்றியதோடு, பெருந்திரளான பார்வையாளர்களும் பங்கேற்றிருந்தனர். (ரி3)




## பரந்தன் அ.த.கவுக்கு முதலுதவிப் பொருள்கள்

பரந்தன், ஜூலை 15

பரந்தன்,அ.த.க பாடசாலைக்கு பரந்தன் அ.த.க உதவும் உறவுகள் அமைப்பினரினால் ஒருதொகுதி முதலுதவிப் பொருள்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் தொற்றைத் தொடர்ந்து பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் பாடசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள சமூக மேம்பாட்டு அறைக்குத் தேவையான முதலுதவி சம்பந்தப்பட்ட கட்டில், மெத்தை, தலையணை, தலையணை உறைகள், போர்வைகள், துவாய்கள், முதலுதவிப் பெட்டி, மருந்துகள் மற்றும் கையுறைகள் ஆகிய பொருள்களே வழங்கப்பட்டன. (ரி3-222)

## கற்றல் உபகரணங்கள் வழங்கல்



முல்லைத்தீவு, ஜூலை 15

சுசிலன் பவுன்டேசன் நிறுவனத்தால் முல்லைத்தீவு வற்றாப்பளை மகா வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சுவிஸில் வசித்துவரும் திரு திருமதி .பொன்னம்பலம் யோகராணி தம்பதிகளின் 40வது திருமண நிறைவு வருடத்தைச் சிறப்பிக்கும் முகமாக 9500 ரூபா பெறுமதியான 18 மாணவர்களுக்கு நேற்றுமுன்தினம் இந்தக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. (ரி3-222)

### கல்வி அமைச்சில்

# பொதுமக்கள் தினம் இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூலை 15

கொரோனாத் தொற்றைக் கருத்தில் கொண்டு, கல்வி அமைச்சில் புதன்கிழமைகளில் நடைபெறும் பொதுமக்கள் தினத்தை தற்காலிகமாக நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என கல்வி அமைச்சின் ஊடகப் பிரிவின் விசேட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த தீர்மானத்தின் காரணமாக பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமத்திற்கு வருந்துவதுடன் இந்த காலப் பகுதிக்குள் கல்வி அமைச்சிடம் இருந்து ஏதேனும் சேவையை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்ப்போர் கல்வி அமைச்சின் உடனடி தொலை பேசி இலக்கமான 1988 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கோண்டாவில்

## ஸ்ரீ ஞானப்பழனி முருகன் ஆடிப்பொங்கல்

கோண்டாவில், ஜூலை 15

கோண்டாவில் கிழக்கு அருள் மிகு ஸ்ரீ ஞானப்பழனி முருகன் கோவில் ஆடிப்பொங்கல் மற்றும் மடைப்பூசை என்பன நாளை வியாழக்கிழமை ஆடிப் பிறப்பன்று மாலை 4.30 மணிக்குப் பாரம்பரிய முறைப்படி இடம்பெறவுள்ளது.

கலந்துகொள்ளும் அடியார்கள் அனைவரும் நாட்டின் தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு ஆலயப் பரிபாலன சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேலும் மடை பரவ உள்ள அடியார்கள் ரூபா 300 கட்டணம் செலுத்தி பரிபாலன சபையில் முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3-159)

### கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின்

# சடலங்களின் தகனம் தொடர்பில் மனுத்தாக்கல்

கொழும்பு, ஜூலை 15

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்கள் தகனம் செய்யப்படுகின்றமையை எதிர்த்து 12 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் உயர் நீதிமன்றில் இதுவரை தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இது குறித்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் பிரியந்த ஜயவர்தன மற்றும் யசந்த கோதாகொட ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் நேற்று ஆராயப்பட்டது.

இந்த நிலையிலேயே, 12 அடிப்படை உரிமை மீறல் மனுக்களையும் எதிர்வரும் செப்ரெம்பர் 9 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

கொவிட் 19 வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் அனைவரையும் அங்கீகரிக்கப்பட்ட சுடலை அல்லது இடத்தில் தகனம் செய்ய வேண்டும் என கடந்த ஏப்ரல் 4 ஆம் திகதி சனிக்கிழமை திகதியிடப்பட்டு சுகாதார மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியினால் ஏப்ரல் 11 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2170/8 எனும் வர்த்தமானியை வலுவிழக்கச் செய்யக் கோரியே இவ்வடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னி ஆராய்ச்சி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க, சட்ட மா அதிபர் உள்ளிட்டோரை பிரதிவாதிகளாக பெயரிட்டே இவ்வடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி2)

# மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இதன்படி நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்.மாவட்டத்தில் மந்திகை உபயகதிர்காமம் , வல்லிபுரம், வல்லபுரம் தேசிய நீர்ப்பாசன சபை, டொக்யாட் முல்லை ஆகிய இடங்களிலும், **வவுனியா பிரதேசத்தில்** தவசிக்குளம் கிராமத்திலும், **மன்னார் பிரதேசத்தில்** காலை 9 மணியிலிருந்து மாலை 3 மணிவரை சீனத்துறைமு கம், வங்காலை ஒரு பகுதி, முள்ளிக் குளம், தள்ளாடி, கடலேரி வீதி, சாந்திபுரம், தரவன்கோட்டை, தள்ளாடி இராணுவ முகாம், டயலொக் தொலைத்தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.

அரச சேவைக்கு மீண்டும் சுயகௌரவம்.
பாராளுமன்ற தேர்தல் - 2020
யாழ் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
ஐக்கிய மக்கள் சக்தி

அன்புக்குரிய தபால் மூல வாக்காளர்களே...
- துண்டிக்கபட்ட ஊதியம், ஓய்வூதிய கொடுப்பனவானது நிறுத்தப்பட்ட இடத்தில் இருந்து மீட்டெடுக்கப்படும்.
- அனைத்து அரச ஊழியருக்கும் காணி மற்றும் வீட்டு உரிமை.
- அரச சேவை பிரச்சனைகளை தீர்க்க அர்ப்பணிக்கப்பட்ட தீர்வு திணைக்களம்.
- அரச சேவைக்கு மீண்டும் சுயகௌரவம்.

உங்கள் உரிமையை பாதுகாக்க தொலைபேசி சின்னத்திற்கும் எனது இலக்கம் 2 இற்கும் வாக்களியுங்கள்.
அ.கிருபாகரன்
கிருபா லேணர்ஸ் அதிபர்
X 2


## மேல் மாகாணத்தில் 331 பேர் கைது

மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 331 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை 6 மணிமுதல் நேற்று அதிகாலை 5 மணிவரையான காலப் பகுதியில் இந்தச் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

ஹெரோயின் போதைப்பொருளுடன் 135 பேரும், சட்டவிரோத மதுபானம் தொடர்பில் 92 பேரும் கஞ்சா வைத்திருந்த 72 பேரும் கோடா மற்றும் ஐஸ் போதைப்பொருளுடன் 16 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் . (ரி3)

## இன்றைய நாள்

**மேடம்:** குடும்பத்தினரின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். பூர்வ சொத்து பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும். உங்களைத் தவறாக நினைத்துக் கொண்டிருந்தவர்களின் மனநிலை மாறும்.

**இடபம்:** உத்தியோகத்தில் சவாலான வேலைகளை சாதாரணமாக செய்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் புதிய முயற்சியை மேற்கொண்டால் நல்ல லாபத்தை எதிர்பார்க்கலாம்.

**மிதுனம்:** உறவினர் மூலமாக சிறு செலவுகள் உண்டாகும். உடல்ஆரோக்கியத்தை பாதுகாப்பது நல்லது. வியாபாரிகளுக்குத் தன்னம்பிக்கை அதிகமாக இருக்கும்.

**கடகம்:** கவலையற்ற போக்குடன் இருப்பீர்கள். தொல்லைகள் சில வந்தா லும் அதை லாவகமாக அணுகி வெற்றி காண்பீர்கள். பிள்ளைகளின் மூலம் மகிழ்ச்சி கூடும். பெண்களுக்கு கணவரின் ஆதரவு அதிகரிக்கும்.

**சிம்மம்:** கடந்த நாள்களில் இருந்த சோர்வு நீங்கி சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். உங்களுக்குக் கீழ் வேலைபார்ப்பவர்களை மிக மரியாதையுடன் நடத்துவீர்கள்.

**கன்னி:** உணர்ச்சிவசப்பட்டு அவசர முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம். வியாபாரத்தில் வரவேண்டிய பாக்கியை போராடி வசூலிப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**துலாம்:** உத்தியோகத்தில் சூட்சுமங்களைக் கற்க பொறுமை தேவைப்படும். எதிர்பாலினத்தினரிடம் பழகும்போது கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** கலைத் துறையினருக்கு நிம்மதியும், சந்தோஷமும் அதிகரிக்கும். பெண்கள் குடும்பத்தினருக்கு தேவையான பொருள்களை வாங்கி மகிழ்வர்.

**தனுசு:** நண்பர்களிடையே சுமுக உறவு ஏற்பட விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. வாழ்வில் முன்னேற அதிக அக்கறை காட்டுவீர்கள். கலைத்துறையினருக்கு மன வருத்தங்கள் நீங்கும்.

**மகரம்:** செலவுகளில் கட்டுப்பாடு தேவை. வாழ்வில் முன்னேற அதிகப்படியான வாய்ப்புகள் கிடைக்கும். உறவினர்கள் அதிக உரிமை எடுத்துக் கொள்வார்கள்.

**கும்பம்:** வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட பணப்புழக்கம் சுமாராகவே இருக்கும். பயணங்களின் போது பொருள்களை கவனமாக வைத்துக் கொள்ளுங்கள்.

**மீனம்:** மனத்தைரியம் கூடும். பணவரவு எதிர்பார்த்தபடி திருப்திகரமாக இருக்கும். வியாபாரத்தில் உள்ள போட்டிகள் குறையும். அலுவலகத்தில் பணிகளை நிதானமாகச் செய்வீர்கள்.

## அடுத்து வரும்...

இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த வாரம் மிக முக்கியமானது. கொரோனா வைரஸ் தொற்று இருப்பதை அறியாமல் கந்தகாடு போதைப்பொருள் புனர்வாழ்வு நிலையத்தில் பணியாற்றும் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் ஆகியோரில் சிலர் விடுமுறையில் வீடுகளுக்குச் சென்றுள்ளனர். கந்தகாடு போதைப்பொருள் புனர்வாழ்வு நிலையத்தில் கொரோனா நோயாளி அடையாளம் காணப்பட்டதும் நாங்கள் அனைவரையும் மீண்டும் உள்ளே அழைத்துக் கொண்டோம். எனினும், அவர்கள் சமூகத்தில் நடமாடிய இடங்கள் உள்ளன. இதனால் கொரோனா சமூகத்துக்குள் செல்லாது என்று எவராலும் கூற முடியாது.

அனைவரும் மிகவும் அர்ப்பணிப்புடன் பாதுகாத்துக்கொண்ட இந்த நிலைமையைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்ள அனைவரும் சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றுவது மிகவும் முக்கியமானது. அடுத்த நான்கு, ஐந்து நாள்களில் ஏதோ ஓர் ஆபத்து இருக்கின்றது. முகக் கவசங்களை அணியுங்கள், உங்களைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள். தொற்றுக்குள்ளாகி மற்றுமொருவரைத் தொற்றுக்குள்ளாக்காதீர்கள் என மக்களிடம் கோரிக்கை விடுகின்றோம்" என்றார். (22)

## தேர்தல்...

நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும். சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வாக்களிப்பதற்கு மக்கள் தயாராகவேண்டும்.

இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார். யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் காலை நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுகாதார நடைமுறைகளை உள்ளடக்கிய வர்த்தமானியை வெளியிடுமாறு சுகாதாரத் தரப்பினரிடம் நாம் கோரியுள்ளோம். தேர்தலை நடத்துவதற்கான முழுமையான முயற்சிகளை நாம் மேற்கொண்டுள்ளோம். ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கு நாடாளுமன்றம் இருக்கவேண்டும். நாடாளுமன்றம் செயற்பட வேண்டும் என்றால் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டாகவேண்டும்என்றார். (ஒ.5)

## ஆணைக்குழுவில்...

தல்கள் ஆணைக்குழுவின் இன்றைய கூட்டத்தில் ஆராயப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒரு வேட்பாளரை ஊக்குவிக்கும் வகையிலோ அல்லது அவருக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் வகையிலோ கருத்துகளை வெளிப்படுத்தக் கூடாது.

கள்ள வாக்கு விடயம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. அது தொடர்பில் அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றார்கள். குறிப்பிட்ட விடயம் 2004ஆம் ஆண்டு நடைபெற்றது. 16 ஆண்டுகளின் பின்னர் அதற்குரிய நடவடிக்கை எடுக்க முடியுமா என்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது. தேர்தல்கள் ஆணைக்குழுவின் இன்றைய கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பில் முடிவெடுக்கப்படும். என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஹூல், ஒவ்வொரு குற்றங்களுக்கும் அந்தக் குற்றங்களுக்கு நடவடிக்கை எடுக்கக் கூடிய காலப் பகுதி உண்டு. தேர்தல் குற்றங்களுக்கு அவ்வாறு உண்டா என்பதை அதிகாரிகள் ஆராய்கின்றனர் என்று குறிப்பிட்டார். (ஒ.5)

## கிராம...

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள சுன்னாகம் கந்தரோடை வீதியிலேயே நேற்று முன்தினம் பகல் இந்தத் திருட்டு இடம் பெற்றுள்ளது. ஏழாலை தெற்கு பிரிவில் கடமையாற்றும் அந்த கிராம அலுவலர் பணிக்கு சென்றிருந்தார். அவருடைய மனைவி ஆசிரியை. அவர் பிள்ளைகளுடன் பாடசாலைக்கு சென்றிருந்தார். வீட்டில் எவரும் இல்லாதநேரம் இந்த திருட்டு இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. அவர்கள் வீடு திரும்பிய போது வீட்டின் முன் கதவு மற்றும் அறைக் கதவுகள் உடைக்கப்பட்டுள்ளமையைக் கண்டனர். அதன்பின்னரே பொருள்கள் மற்றும் பணம் திருடப்பட்டுள்ளமை தெரியவந்தது. இது பற்றி சுன்னாகம் பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர்.

இதேவேளை, அந்த வீட்டில் திருடப்பட்டவை என்று கூறப்படும் கமரா மற்றும் கவரிங் நகைகள் என்பனவற்றை இருள் சூழ்ந்த பிரதான வீதியில் சைக்கிளில் சென்ற சிலர் எறிந்துவிட்டு சென்றனர் என்றும் அவர்களே திருடர்களாக இருக்கலாம் என்றும் அவர்களைத் துரத்திச் சென்றபோதும் தப்பியோடியுள்ளனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-39)

## கணக்கெடுப்பு...

னம் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அந்தக் கடிதத்தில், பெயர்ப் பலகைகளில் காணப்படும் வேட்பாளர்களின் படங்களை அடையாளம் கண்டு அறிக்கையிடவும், அதனை மறைப்புச் செய்யுமாறும் பிரதேச செயலர்களால் பணிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இடம் பெற்ற தேர்தல்கள் ஆணைக்குழு தவிசாளர் மஹிந்த தேசப்பிரியவின் கூட்டத்தில் கேள்வி எழுப்பப்பட்டது.

பெயர் பலகைகளை மறைக்கும் பணியில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பயன்படுத்தப்படுகின்றனரா என்று உதவித் தேர்தல்கள் ஆணையாளரிடம், தவிசாளர் கேள்வி எழுப்பினார். இதன் பின்னர் இது தொடர்பில் விளக்கமளிப்பதாகத் தெரிவித்து உதவித் தேர்தல்கள் ஆணையாளர் கருத்து வெளியிட்டார்.

பெயர்ப் பலகைகளில் காணப்படும் வேட்பாளர்களின் படங்கள் எத்தனை மறைக்கப்பட்டுள்ளன, எத்தனை இன்னமும் மறைக்கப்படவில்லை என்ற விவரங்களை பிரதேச செயலர்களிடம் கோரியிருந்தோம். அவர்கள் அந்த விவரங்களைப் பெற்றுக் கொள்ளும் பணிக்கே, அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தியுள்ளனர். இது தொடர்பில் பரிமாறப்பட்ட உத்தியோகபூர்வ கடிதம், ஊடகங்களுக்கு எவ்வாறு வெளிவந்தது என்பது தொடர்பிலும் ஆராயவேண்டும் என்று குறிப்பிட்டார். (ஒ.5)

## கொரோனா...

ளான இரண்டு நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கந்தகாடு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு மையத்தின் பயிற்றுவிப்பாளராக ஒரு நபர் அடையாளம் காணப்பட்டுள்ளார் மற்றவர் அவரை மையத்துக்கு கொண்டு சென்ற ஓட்டுநர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கம்பாஹாவில் உள்ள டிக்கிரிராஜா மாவத்தையில் வசிக்கும் 37 வயதான ஓட்டுநர், கடந்த 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கம்பாஹா நீதிவான் நீதிமன்றத்தில் சாட்சியாக முன்னிலையானதாகக் கூறப்படுகிறது. இவர் பல இடங்களுக்குச் சென்றார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இதற்கிடையில், கந்தகாடு புனர்வாழ்வு மையத்தைச் சேர்ந்த பயிற்றுவிப்பாளர் கணேமுல்ல பகுதியில் நடந்த ஒரு மத விழாவில் கலந்துகொண்டதாகக் கூறப்படுகிறது.

கந்தகாடு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையத்தில் கொரோனா வைரஸ் பரவியதாக கூறப்பட்ட நிலையில், இரு நபர்களும் பி.சி.ஆர். சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர், இதன் விளைவாக அவர்களுக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. (ஒ.5)

## சிறிதரனிடம்...

ருந்த நிலையில் அது தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று தெரியவருகின்றது.

நேற்று அவரிடம் சென்ற பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்ததுடன், வாக்குமூலம் பெறுவதற்காக இன்று அழைத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## நிவாரண...

நிவாரண முறைகேடு தொடர்பில் ஆரம்பிக்கப்பட்ட விசாரணை இன்னமும் முடியவில்லை. தேவைப்பட்டால் பொலிஸாரிடம் இந்த விடயம் கையளிக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய, யாழ்ப்பாண மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் க.மகேசனிடம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த தேர்தல்கள் ஆணைக்குழுத் தவிசாளர், யாழ்ப்பாண மாவட்டச் செயலருடன் நேற்றுக் காலை கலந்துரையாடல் நடத்தினார்.

இதன்போது கொரோனா இடர் காலத்தில் வழங்கப்பட்ட நிவாரணத்தில் முறைகேடு இடம்பெற்றதாகத் தெரிவித்து தேர்தல்கள் ஆணைக்குழுவால் முன்னெடுக்கப்பட்ட விசாரணை இன்னமும் நிறைவடையவில்லை எனவும், அந்த விசாரணையை தேவைப்பட்டால் பொலிஸிடம் பாரப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய குறிப்பிட்டுள்ளார். (ஒ.5)

## மாணவிகள்...

தனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கைதடி வளாகத்தில் கற்கும் பொலநறுவையைச்சேர்ந்த ஒரு மாணவியிடம் கொரோனா தொற்று அறிகுறி இனங்காணப்பட்டதால் அவர் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு அவருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அவருக்கு கொரோனா தொற்று இல்லை என்பது பரிசோனை முடிவில் தெரியவந்தது.

அவருக்கு கொரோனாத் தொற்று அறிகுறி என்ற தகவலால் கைதடியில் நேற்று பரபரப்பு ஏற்பட்டிருந்தது. கைதடியிலுள்ள இராணுவத்தினர் முகக்கவசம் அணிந்து செல்லாதவர்களை வழிமறித்து முகக் கவசம் அணிந்துகொண்டு பயணிக்குமாறு சுகாதார நடைமுறைகளை முன்னரைவிட கடுமையாக்கினர்.

இதேவேளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக மாணவிக்கும் கொரோனா தொற்று இல்லை என்பது பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

கிளிநொச்சி வளாகத்தில் கல்வி கற்கும் ஹம்பகாவைச் சேர்ந்த மாணவியின் சகோதரனான இராணுவச் சிப்பாய்க்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்டது. அவர் கந்தகாடு மறுவாழ்வு நிலையத்தில் பணிபுரிகின்றார். அவர் விடுமுறையில் அவருடைய வீட்டில் இருந்துள்ளார். கடந்த 10ஆம் திகதியளவிலேயே அவர் மீளவும் கந்தகாடு மறுவாழ்வு நிலையத்துக்கு சென்றுள்ளார். மாணவியும் சகோதரன் உள்ளிட்ட குடும்பத்தினருடன் வீட்டில் இருந்துவிட்டே கிளிநொச்சி வளாகத்துக்கு கடந்த 8ஆம் திகதி வந்துள்ளார். கந்தகாடு நிலையத்தில் கொரோனா தொற்று அதிகரித்த நிலையில், அந்த இராணுவச் சிப்பாய்க்கும் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை நேற்றுமுன்தினம் மாலை உறுதிப்படுத்தப்பட்டது.

அதனால் அவருடைய சகோதரியான யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சிவளாக மாணவிக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்பதால் அது பற்றிய தகவல்களை கம்பஹாவில் உள்ள சுகாதாரத் திணைக்களத்தினர் கிளிநொச்சி பிராந்திய சுகாதாரத் திணைக்களத்துக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தனர். அதனையடுத்தே அந்த மாணவி உட்பட அங்கு கற்கும் சுமார் 222 மாணவர்கள் வளாகத்தில் அவர்கள் தங்கியுள்ள விடுதிகளிலேயே நேற்றுமுன்தினம் தொடக்கம் சுயதனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அந்த மாணவியிடம் பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் நேற்றுமுன்தினம் எடுக்கப்பட்டிருந்தது. நேற்று வெளியான பரிசோதனை முடிவின்படி அவருக்கு கொரோனாத் தொற்று இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## கிளி...

மாணவர்களும் சுயதனிமைப்படுத்தலில் தொடர்ந்தும் வைக்கப்பட்டுள்ளனர்.

சில நாள்களுக்கு நிலைமையை அவதானித்த பின்னரே வளாகத்தின் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பது தொடர்பில் கவனம்செலுத்தப்படும் என்று பீடத்தினர் தெரிவித்தனர்.

அந்த மாணவியின் சகோதரன் இராணுவசிப்பாய். அவர் கந்தகாடு மறுவாழ்வு நிலையத்தில் பணிபுரிகின்றார். அவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதனால் மாணவிக்கும் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டது. அதனால் அங்குள்ள சுமார் 222 மாணவர்களும் நேற்றுமுன்தினம் தொடக்கம் அங்கேயே சுயதனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டிருந்தனர்.

மாணவிக்கு பி.சி.ஆர். பரிசோதனை நேற்று மேற்கொள்ளப்பட்டபோது அவருக்கு தொற்றில்லை என்பது பரிசோதனையில் தெரியவந்தது குறிப்பிடத்தக்கது. (த-6)



# வாக்காளர் அட்டைகள் தபால் ஊழியர்களால் விநியோகம்

பதுளை, ஜூலை 15

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் மலையகத்தில் நேற்று ஆரம்பமாகியுள்ளன.

முதற்கட்டமாக அட்டன், நோர்வூட், கொட்டகலை, பொகவந்தலாவ, மஸ்கெலியா, தலவாக்கலை, டயகம, அக்கரப்பத்தனை, நுவரெலியா, இராகலை, உடபுஸ்ஸலாவ, பண்டாரவளை மற்றும் பதுளை ஆகிய பகுதிகளில் நேற்று வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டன.

தேர்தல் ஆணையாளரின் பணிப்புரையில் வாக்காளர் அட்டைகளை தபால் நிலையத்தின் மூலம் விநியோகிப்பதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டதைத் தொடர்ந்து தபால் ஊழியர்கள் வீடு வீடாகச் சென்று வாக்காளர் அட்டைகளை உரிமையாளர்களிடம் விநியோகித்து வருகின்றனர். (ரி1)

# சிப்பாய்க்கு கொரோனா

## குடும்பத்தவர் 8 பேர் தனிமைப்படுத்தலில்

திருகோணமலை, ஜூலை 15

திருகோணமலை மாவட்டத்தின் அக்போகம பிரதேசத்தில் கந்தகாடு தனிமைப்படுத்தல் நிலையத்தில் கடமையாற்றிய சிப்பாய் ஒருவருக்கு கொரோனாத் தொற்று அடையாளம் காணப்பட்டதை அடுத்து அவரது குடும்ப அங்கத்தவர்கள் 8 பேர் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எஸ்.டி.எம். அசங்க அபேவர்தன தெரிவித்தார்.

கந்தளாய் பிரதேச செயலகத்தில் அக்போகம பிரதேசத்தில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடுகள் மற்றும் அங்குள்ள நிலைவரம் தொடர்பிலான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவரோடு தொடர்புடைய 50 பேரின் இரத்த மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்டு அவை பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். அத்துடன், அக்போகம கிராமத்தில் 14 குடும்பங்களைச் சேர்ந்த 56 பேர் தமது வீடுகளில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். (ரி2)

# பீதியடைய வேண்டாம்

## அனில் ஜாசிங்க தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 15**

**கந்தகாடு கொரோனாத் தொற்று இலங்கை முழுதும் பரவவில்லை, இந்தத் தொற்று பிரதானமாக ராஜாங்கனை, வெலிகந்தை ஆகிய இடங்களிலேயே காணப்படுகின்றது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.**



இந்த நிலைமை வெவ்வேறு விதமாக பிரசாரம் செய்யப்படுகின்றது. வெவ்வேறு பிரதேசங்களில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று செய்திகள் வெளிவருகின்றன. ஆனால் அதில் உண்மையில்லை. ஏதாவது ஒரு பகுதியில் தொற்றாளர் அடையாளம் காணப்பட்டால் அது தொடர்பில் நாம் மக்களுக்கு அறியத் தருவோம்.

கந்தகாடு புனர்வாழ்வு நிலையம் மற்றும் வெலிக்கடை சிறைச்சாலை ஆகிய இடங்களுடன் தொடர்புடைய ஆலோசகர்கள், மற்றும் புனர்வாழ்வு பெற்றவர்கள், விடுதலையான சிறைச்சாலை கைதிகள் உள்ளிட்டவர்களை மீண்டும் குறித்த இடங்களுக்கு அழைப்பதன் மூலமோ அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துதல் மற்றும், வைத்திய பரிசோதனைகளுக்கு உட்படுத்துதல் முன்னெச்சரிக்கை யான நடவடிக்கைகள் மட் டுமே. இதன் மூலம் அவர்களுக்குத் தொற்று உள்ளது என யாரும் பீதியடையத் தேவையில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ரி1)



# கிராம சேவையாளர் சங்கத்தினருடன் யாழ்.மாவட்டச் செயலர் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 15

யாழ் .மாவட்ட கிராம சேவையாளர் சங்கத்தினருக்கும் யாழ். மாவட்டச் செயலர் க.மகேசனுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் காலை 11 மணியளவில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரின் அலுவலகத்தில் சந்திப்பொன்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் தற்போதைய நிலைமையில் கிராம உத்தியோகத்தர்களின் செயற்பாடு, அவர்கள் கடமையின் போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன் கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தால் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேசி உரிய தீர்வைப் பெற்றுத் தருவதாகவும் யாழ். மாவட்டச் செயலர் க. மகேசன் உறுதியளித்துள்ளார். இந்தச் சந்திப்பில் கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர். (ரி3)





# தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தினால் கொரோனா விழிப்புணர்வு நடவடிக்கை


வவுனியா, ஜூலை 15

தற்போது கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் மீண்டும் ஏற்பட்டுள்ள நிலையில் அதனை வடமாகாணத்தில் முற்றாகக் கட்டுப்படுத்தும் நோக்குடன், வைரஸ் தொடர்பான விழிப்புணர்வு செயற்றிட்டம் வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் லண்டன் என்பீல்ட் நாகபூசணி அம்மன் ஆலயத்தின் நிதி அனுசரணையில் வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் வவுனியா மாவட்டத்தில் பொது இடங்கள், அலுவலகங்கள் பேருந்து நிலையங்கள், கடைத்தெருக்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளில் கொரோனா தடுப்புத் தொடர்பான விழிப்புணர்வுப் பிரசுரங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் இந்தத் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (ம-110)

# போராளி குடும்பத்துக்கு குழாய்க் கிணறு கையளிப்பு



வவுனியா, செட்டிகுளம் சண்முகபுரம் கிராமத்தில் நீண்டகாலமாகத் தடுப்பிலிருக்கும் முன்னாள் போராளி ஒருவரின் குடும்பத்துக்கு குழாய்க் கிணறு அமைத்துக் கையளிக்கப்பட்டுள்ளது. செட்டிகுளம் பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் எஸ். சண்முகானந்தனால் இந்தக் கிணறு பாவனைக்காக வழங்கப்பட்டுள்ளது.

தமிழ் நிலம் மக்கள் அமைப்பின் தலைவர் வி.விநோகரனால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாக சுவிற்சர்லாந்து லூட்சேன் துர்க்கை அறக்கட்டளையின் நிதி உதவியுடன், நெல்லியடி மைக்கல் நேசக்கரம் அமைப்பின் ஒருங்கிணைப்பில் ஒரு லட்சத்து இருபது ஆயிரம் ரூபா செலவில் இந்த குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு வழங்கப்பட்டது. (ரி3-110)



# முறைப்பாடுகள் அதிகம் செயற்பாடுகளோ மந்தம்

## தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய யாழ். அதிகாரிகளுக்கு 'டோஸ்': முல்லைத்தீவுக்கும் சென்றனர்

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்தே அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கின்றன. அந்த முறைப்பாடுகள் மீது உரிய நேரத்தில் உரிய விதத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய, யாழ்ப்பாண மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் உள்ளிட்ட அதிகாரிகளைச் சாடினார். பொலிஸாரே நடவடிக்கை எடுக்கத் தவறுகின்றனர் என்று மாவட்ட அதிகாரிகள், தவிசாளருக்குப் பதிலளித்தனர்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய, உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல், ஆணையாளர் நாயகம், பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் உள்ளிட்ட குழுவினர் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு நேற்றுக் காலை வந்தனர்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் அறையில் முதலில் கலந்துரையாடல் நடத்தினார். இதன்போது தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் ஹூல் சில முறைப்பாடுகளை தவிசாளரிடம் கையளித்துள்ளார். அந்த முறைப்பாடுகள் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு, யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் கி.அமல்ராஜ தவிசாளர் தேசப்பிரிய பணித்தார்.

தொடர்ந்து தேர்தல்கள் முறைப்பாட்டுப் பிரிவுக்குச் சென்று அங்கு நிலைமைகளை ஆராய்ந்தனர். முக்கியமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் இ.ஆனோல்ட்டின் மனைவியின் இடமாற்றம் தொடர்பில் பேசப்பட்டது. அதன் பின்னர் யாழ்ப்பாண மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் க.மகேசனுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. இந்தச் சந்திப்பில் தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

இதன் பின்னர் தேர்தல் முறைப்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டது. அரச நிதியில் மேற்கொள்ளப்பட்ட வீதி அபிவிருத்திப் பணிகளை அரசியல்வாதிகள் திறந்து வைத்தமை தொடர்பில் தவிசாளர் தேசப்பிரிய கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளித்த மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர், இது தொடர்பில் பிரதேச செயலர்களிடம் கேட்டபோது அவர்களும் தங்களுக்குத் தெரியாது என்று கூறியுள்ளனர் எனக் குறிப்பிட்டார். அதையடுத்து அந்த இடங்களில் இது மக்களின் வரிப் பணத்தில் மேற்கொள்ளப்பட்டது என்ற விளம்பரப் பலகையை காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்க தவிசாளர் பணித்தார்.

வீதிகளில் வேட்பாளர்களின் பெயர்கள், விருப்பு இலக்கங்கள், கட்சிச் சின்னங்கள் கீறப்படுவது தொடர்பில் தவிசாளர் விசனத்துடன் கருத்துத் தெரிவித்துள்ளார். இவ்வாறான செயற்பாடு நாட்டின் வேறு எந்தப் பகுதியிலும் இல்லை என்று கூறியுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்திலேயே அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றன. அவற்றுக்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை என்று தவிசாளர் குற்றம் சுமத்தினார். இதன்போது பதிலளித்த மாவட்ட அதிகாரிகள், பொலிஸாருக்கு முறைப்பாடுகளை பாரப்படுத்தினாலும் அவர்கள் உரியவகையில் நடவடிக்கை எடுக்கின்றார்கள் இல்லை என்று குறிப்பிட்டனர். அத்துடன் தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவுக்கு பணியாளர்களை வழங்கினால், அவர்கள் ஊடாக சில தேர்தல் விதிமுறை மீறல்களை கட்டுப்படுத்த முடியும் என்றும் குறிப்பிட்டனர். ஆணைக்குழுவினர் முல்லைத்தீவுக்கும் நேற்றுச் சென்றிருந்தனர். (ஒ,5)

**கணித பிரத்தியேக வகுப்புகள்**
தரம் - 6 முதல் 9 வரையான மாணவர்களுக்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலமான கணித பிரத்தியேக வகுப்புக்களுக்கு
**070 403 6363**

**அண்ணா விரைவுப் பொதிகள் சேவை**
5 kg / 11kg க்கு மேல் 1 கிலோவுக்கான கட்டணம்
பிரான்ஸ் -ரூ.1500/ரூ.1300
ஜேர்மனி -ரூ.1500/ரூ.1300
டென்மார்க -ரூ.1500/ரூ.1300
கொலன்ட் -ரூ.1500/ரூ.1300
பெல்ஜியம் -ரூ.1600/ரூ.1300
இத்தாலி -ரூ.1700/ரூ.1450
லண்டன் -ரூ.1500/ரூ.1150
இச் சேவையில் மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் அறவிடப்படமாட்டாது.
5 - 8 வேலை நாட்கள்
எம்முடன் இணைந்து பொதிகள்சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்
லண்டன்-1000/=, பிரான்ஸ்-ஜேர்மனி-டென்மார்க்-கொலன்ட்- 1200/=
கனடா- அமெரிக்கா- 1500/= சுவிஸ்- 1400/=

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 976,KKS வீதி யாழ்ப்பாணம் 021 2215656 | குஞ்சர்கடை சந்தி நெல்லியடி 070 330 5500 | பிரதான வீதி சங்கானை 075 3305500 | 355, A9 வீதி கிளிநொச்சி 075 5522999 | முல்லைத்தீவு கனகராயன்குளம் மன்னார் | சென்றல் வீதி கொழும்பு 12 076 1221566 |

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.



www.ambafrancelk.org
021 222 8093 17, Kandy Road, Jaffna

## மரண அறிவித்தல்

# இரத்தினம் அட்சலிங்கம்

**(Rtd Senior Tax Officer - Inland Revenue)**



பிறப்பு 13.05.1930
இறப்பு 14.07.2020

அளவெட்டி குருக்கள் கிணற்றடியை பிறப்பிடமாகவும், நல்லூர் நாயன்மார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் அட்சலிங்கம் நேற்று (14.07.2020) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகரெத்தினம் - மரகதம் தம்பதிகளின் அன்பு மருமகனும் தங்கேஸ்வரியின் (அம்பிகா) அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராசநாயகம், பரமேஸ்வரன், கமலாதேவி, வனதாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிரபாகரன் (கனடா), தமயந்தி (லண்டன்), கோமதி (லண்டன்), காண்டீபன் (அவுஸ்திரேலியா), பிரதீபன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கஸ்தூரி (கனடா), உமாபதி (லண்டன்), கிருபானந்தன் (லண்டன்), சுஜிதா (அவுஸ்திரேலியா), சிந்தியா (யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரகாஸ், பிரமேஸ், மகிந்தன், மயூரன், மயூரி, திவ்யராம், கோகுலராம், ஹரிசன், ஜீவிகா, ஆரவி (செல்லப்பேர்த்தி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2020) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 4.00 மணிக்கு செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**71, நாயன்மார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தகவல் :
குடும்பத்தினர்.**

**070 411 6071, 021 221 9849**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.